Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 05 வெள்ளிக்கிழமை (18.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 230

















## பொன்சேகா விடுதலை அமைச்சரவை அனுமதி



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

நேற்று முன்தினம் அமைச்சரவை கூடியபோது ஜனாதிபதி இது தொடர்பான யோசனையை முன்வைத்தார். இதற்கு அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் தமது இணக்கத்தை வெளியிட்டதாக ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் அமெரிக்காவில் உள்ள இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அந்த நாட்டின் இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிங்டனை சந்திக்கும் போது சரத் பொன்சேகாவை இலங்கையில் விடுதலை செய்யக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக கருதப்படுகிறது.

ஹிலாரியும் பீரிஸும் இன்று அமெரிக்காவில் சந்திக்கவுள்ளனர்.

அதேவேளை, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நிபந்தனையின்றி விரைவில் விடுதலை செய்யப்படுவார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்தார் என திருமதி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் சகிதம் அனோமா பொன்சேகா அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இரவு சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. எனது கணவர் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

குற்றச்சாட்டுகள் இருப்பின் வழக்குத் தொடருமாறும் இல்லாவிட்டால் தம்மை விடுதலை செய்யுமாறும் கோரி இவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து 3 வருடங்களாகின்ற போதிலும் [illegible]ட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை கவலைக்குரியது எனவும் இதனால் நேற்று முதல் தாம் உண்ணாவிரதம் மேற்கொள்ளத் தீர்மானித்ததாகவும் மேற்படி கைதிகள் தெரிவித்துள்ளனர்.

## அரசியல் தலைமைக்கு புலம்பெயர் தமிழர்கள் தகுதியற்றவர்கள்



(ஒஸ்லோ)

தமிழர்களின் அரசியல் தலைமையை புலம்பெயர் தமிழர்கள் கையில் எடுக்க முடியாது. தமிழர்களின் அரசியலுக்குரிய தலைமை இலங்கையைத் தளமாகக் கொண்டிருக்க வேண்டும். புலம்பெயர் தமிழர்கள் அதற்கு உறுதுணையாக இருக்க முடியுமே தவிர தலைமை தாங்க முடியாது என்று இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

சொல்ஹெய்ம் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத்தீவில் தனிநாடு அமைவதற்கு அனைத்துலக சமூகம் ஆதரவு அளிக்கப்போவதில்லை. தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடங்களான வடக்குக் கிழக்கிற்கு சுயாட்சித் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதில் அனைத்துலக மட்டத்தில் பெரும் ஆதரவு நிலவுகின்றது. அதே கருத்தினையே நானும் கொண்டிருக்கின்றேன்.

இந்தியாவின் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுயாட்சி அதிகாரங்களை ஒத்ததான அரசியல்த் தீர்வுக்கு அனைத்துலக மட்டத்தில் பெருமளவு ஆதரவு நிலவுகின்றது. மீண்டுமொரு ஆயுதப்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப் பகிர்வு தீர்வைத் தராது



(ஒஸ்லோ)

ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் அதிகாரப் பரவலாக்கல் தீர்வினை எட்டுவதற்குரிய எந்தவித வாய்ப்புகளும் இல்லை. எனவே முதலில் அரசியலமைப்பில் சாதகமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் மீள் நல்லிணக்கம் தொடர்பாக [illegible]ளவில் அதிகம் பேசிவரும் தற்பே[illegible] அரசாங்கம், நடைமுறையில் அ[illegible], முற்றிலும் எதிரான நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

போர் முடிவுற்ற மூன்று ஆண்டுகளின் பின்னரான இலங்கைத்தீவு எனும் தலைப்பில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கருத்தரங்கிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் முஸ்லிம்களின் நிலை பாகிஸ்தான் தூதுவர் ஆராய்வு

(கொழும்பு)

வடக்கில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களது நிலை குறித்து ஜனாதிபதி மற்றும் தூதுவர்களின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாக இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சீமா எலாஹி பலூஜி தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும், அமைச்சருமான றிசாத் பதியுதீனின் அழைப்பின் பேரில் வவுனியா சாளம்பைக்குளம், தலைமன்னார் மற்றும் முசலி பிரதேச செயலகப் பிரிகளில் உள்ள கிராமங்களுக்கு விஜயம் செய்து மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியதன் பின்னர் இடம்பெற்ற கூட்டத்தின் போது மேற்கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், வடமாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர்களான மொஹிதீன், லியாவுதீன் உட்பட பலரும் இதன் போது பிரசன்னமாகியிருந்தனர்.

மேலும் உயர்ஸ்தானிகர் பேசுகையில் கூறியதாவது,

நான் இங்கு வருகைதந்து மீள்குடியேறியுள்ள மக்களது பிரச்சினைகளை தேவைகளை நேரில் பார்க்க முடிந்தது. மிகவும் கடினமான ஒரு அகதி வாழ்க்கையினை நீங்கள் வாழ்கின்றீர்கள் என்பதை அறிய முடிகின்றது. உங்களது தேவைகள், எதிர்பார்ப்புக்கள் குறித்து அமைச்சர் றிசாத் பதியுதீன் எனக்குத் தெளிவாக விளங்கப்படுத்தியுள்ளார்.

மன உளைச்சலுக்குள்ளாகி இருக்கும் உங்களது வாழ்வு விமோசனம் பெற பிரார்த்தனைகளைச் செய்வோம். அதேபோல் கொழும்புக்குச் சென்றதும்

19 ஆம் பக்கம் பார்க்க

**இறுதி யுத்தத்தின்போது மரணமடைந்த அனைவரையும் நினைவுகூர்ந்து எமது இதயம் கனக்கும் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.**



**தினமுரசு குடும்பம்**

## கூட்டமைப்பு எம்.பி.யின் வாகனம் மோதி ஒருவர் பலி

(கொழும்பு)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தனின் பயன்பாட்டில் நின்ற வாகனம் ஒன்று அவரது அலுவலகத்தில் பின்பக்கமாக செலுத்தியபோது அதனுடன் மோதுண்டு முன்னாள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா நகரசபை வேட்பாளருமான உதயன் என அழைக்கப்படும் பி.பரஞ்சோதி பலியாகியுள்ளார்.

நேற்றுக் காலை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் அலுவலகத்திற்கு வருகை தந்திருந்த பி.பரஞ்சோதி, அங்குள்ளவர்களுடன் கதைத்துக் கொண்டு நின்றவேளை, நாடாளுமன்ற உறுப்பினரின் பாவனையில் உள்ள வாகனம் பின்பக்கமாக சாரதியொருவரால் செலுத்தப்பட்டபோது எதிர்பாராதவிதமாக விபத்து ஏற்பட்டதாகவும் உயிருக்கு ஆபத்தான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பொலிகண்டியில் மாணவி தீயிட்டுத் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவியொருவர் தனக்குத் தானே தீயிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் ஒன்று பொலிகண்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பொலிகண்டி மேற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் வல்வை மகளிர் கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் பொலிகண்டி மேற்குப் பகுதியைச் சேர்ந்த கே.வைஷ்ணவி (வயது - 16) என்ற மாணவியே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தீயிட்டு எரிந்த இவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக

19 ஆம் பக்கம் பார்க்க

# சூறாவளி எச்சரிக்கை பாடசாலையில் குழப்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பாரதி வித்தியாலயத்தில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இராணுவத்தினரால் 12.30 மணிக்கு சூறாவளி ஏற்படப்போவதாக விடுக்கப்பட்ட அறிவித்தலால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது.

குறித்த பாடசாலைக்குச் சென்ற இரண்டு இராணுவத்தினர் 12.30 மணியளவில் சூறாவளி ஏற்படப்போவதாகவும், மாணவர்களை வெளியேற்றுமாறும் அறிவிப்பு வழங்கினர்.

இதனையடுத்து மாணவர்களும், பாடசாலைச் சமூகத்தினரும் பதற்றமடைந்த நிலையில் கல்வி வலயத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தமக்கு எவ்வித அறிவித்தலும் வரவில்லை. எனவே மாணவர்களைப் பாடசாலையிலிருந்து வெளியேற்ற வேண்டாம் என அறிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பதற்ற நிலையால் சிறிது நேரம் மாணவர்களும், பெற்றோர்களும், பாடசாலைச் சமூகத்தினரும் அல்லற்பட்டதாக பாடசாலை பிரதி அதிபர் தெரிவித்தார். (12)

# ஜேர்மன் ஆவணத் திரைப்பட விழா

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் கோத்தே கலாசார நிறுவனமும் (German Gothe Institute) மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையமும் இணைந்து நடத்தும் 'ஜேர்மன் ஆவணத் திரைப்பட விழா' நாளை (சனிக்கிழமை) ஜும்மா பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ். பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

ஊடக மாணவர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் ஆவணத் திரைப்பட விழாக்களை கிரமமான முறையில் ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது. இதுவரை நான்கு திரைப்பட விழாக்கள் நடத்தப்பட்டு பதினாறு ஆவணத் திரைப்படங்கள் திரையிடப்பட்டுள்ளன.

இந்த வரிசையில் தற்போது ஜேர்மன் கோத்தே கலாசார நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் இரண்டாவது ஆவணத் திரைப்பட விழாவாக இவ் விழா அமைந்துள்ளது.

நாளை நடைபெறவுள்ள இவ் விழாவில் Krieg ist das ende aller plane & woher wir kommen wohin wir gehen, Die unzerbrechlichen ஆகிய இரண்டு திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன. இந்த இரண்டு திரைப்படங்களும் பல சர்வதேச திரைப்பட விருதுகளைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை நடைபெறவுள்ள இத்திரைப்பட விழா ஜும்மா பள்ளி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

திரைப்பட ஆர்வலர்கள், ஊடகத்துறை மாணவர்கள் இந்த திரைப்பட விழாவில் பங்குபற்ற முடியும். மேலதிக தகவல்களுக்கு 0212229873 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தரம் 5 மாகாண மட்ட முன்னோடிப் பரீட்சை

(பருத்தித்துறை)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சையின் வினாத்தாள் - II பரீட்சை நாளை காலை 9.00 மணிக்குச் சகல வலயப் பாடசாலைகளிலும் நடத்தப்படவுள்ளது.

இவ்வினாத்தாள்கள் கோட்டக் கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலை அதிபர்கள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும், பரீட்சைகள் நடத்தப்பட்டு மாணவர்களின் பெறுபேறுகளையும், அடைவு மட்டத்தையும் அவரவர் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இரண்டு பிரதிகளை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)


## கணக்காளர் தேவை

**கணக்காளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

- **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களும், கணக்காளராக சேவையாற்றிய அனுபவம் உள்ளவர்களும் கணக்கியல் துறையில் பட்டதாரிகளாக உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**
- **கணினி அறிவும், ஆங்கில அறிவும் அவசியமாகக் கருதப்படும். தினசரிப் பத்திரிகையில் கடமையாற்றிய அனுபவசாலிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ்.பிரதான வீதியில், இல.373 இல் உள்ள தினமுரசு அலுவலகத்தில் ஆளணி முகாமையாளரைச் சந்தித்து தமது விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்க முடியும்.**

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு.**

**இல.373,**
**பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**


# தேசியப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இடமாற்றம்

## அதிகாரம் யார் கையில்

(யாழ்ப்பாணம்)

தேசியப் பாடசாலை ஆசிரியர்களின் இடமாற்றம் மத்திய அரசின் கல்வியமைச்சினால் மட்டுமே மேற்கொள்ள முடியும் என கல்வியமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்திலுள்ள தேசியப் பாடசாலை அதிபர்கள் சிலருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இவ்விடமாற்றத்தை மாகாணக் கல்விப் பணிப்பாளரோ, வலயக் கல்விப் பணிப்பாளரோ செய்ய முடியாது எனவும், அவர் மேலுமம் தெரிவித்துள்ளார்.

தேசியப் பாடசாலையிலிருுந்து ஆசிரியர் எவரையாவது மாகாணப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்திருந்தால், உடனடியாக அவரை முன்னைய தேசியப் பாடசாலையில் இணைத்துக் கொள்ளுமாறும் அதிபர்களை அவர் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

தேசியப் பாடசாலையிலிருந்து மாகாணப் பாடசாலைகளுக்குச் சில ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்கள். இதனை ஆட்சேபித்து அந்த ஆசிரியர்களில் சிலர் மத்திய அரசின் கல்வியமைச்சுக்கு நேரடியாகச் சென்று தமக்கு அநீதியான முறையில் இடமாற்றம் வழங்கப்பட்டதாக முறையிட்டதையடுத்து, உடனடியாக அவர்களது இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டு கல்வியமைச்சினால் முன்னர் அவர்கள் கடமையாற்றிய தேசியப் பாடசாலைகளுக்கே அவர்களைத் தொடர்ந்து கடமையாற்றுவதற்கு அனுமதிக்குமாறு மத்திய கல்வியமைச்சின் செயலாளர் அதிபர்களைக் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சில தேசியப் பாடசாலைகளின் அதிபர்கள் சிலர் தமது தனிப்பட்ட விருப்பின் பேரில் மேலதிக ஆசிரியர்கள் எனக் காரணங்காட்டிச் சில ஆசிரியர்களின் பெயர்களை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியிருந்தனர். அப்பெயர்ப்பட்டியலின்படி அவ்வாசிரியர்களை தமது பணிமனைக்கு அழைத்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் மாகாணப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அங்கு சென்று கடமையாற்றுமாறும் கேட்டிருந்தார். பலர் மாகாணப் பாடசாலைகளிலேயே தமது கடமைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில், கல்வியமைச்சின் செயலாளரால் கல்விப் பணிப்பாளர்களுக்கும், தேசியப் பாடசாலையின் அதிபர்களுக்கும் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் இரா புவனேஸ்வரனிடமும், இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் யோசப் ஸ்ராலினிடமும் இவை பற்றிக் கேட்டபோது, அவர்கள் தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளரோ, வலயக் கல்விப் பணிப்பாளரோ தலையிட முடியாது என ஆணித்தரமாகக் கூறினார்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு, வடமாகாண ஆளுநர் ஆகியோரிடம் முறையிடவுள்ளதாகத் தெரிவித்தனர். (137)

# விளையாட்டு விழா

(தீவகம்)

வேலணை மத்தி சிறுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மத்தி சிறுவர் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வேலணை பிரதேசசபை தவிசாளரும், ஈ.பி.டி.பி. வேலணை பிரதேச அமைப்பாளருமான சி. சிவராசா, தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன், வேலணை சரஸ்வதி வித்தியாலய அதிபர் ந.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# புத்தகக் கண்காட்சி

(சாவகச்சேரி)

நூலக வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் கீழ் இயங்கும் சாவகச்சேரி, நுணாவில், மீசாலை ஆகிய பொது நூலகங்கள் இணைந்து புத்தகக் கண்காட்சியொன்றை நேற்று ஆரம்பித்து நடத்தி வருகின்றன.

சாவகச்சேரி பொது நூலகத்தில் நடைபெறும் இக்கண்காட்சி நேற்று ஆரம்பமாகியுள்ளதுடன், இன்றும் நாளையும் 3 தினங்கள் நடைபெறவுள்ளது. இவ் ஆரம்ப நிகழ்வை டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இக்கண்காட்சியை ஏராளமான பாடசாலை மாணவர்கள் பார்வையிட்டு வருவதுடன், ஏனைய மாணவர்களும் இதனைப் பார்வையிட்டுப் பயன் பெறுமாறு சாவகச்சேரி பொது நூலக பிரதி நூலகர் இ.வித்தியானந்தன் அறிவித்துள்ளார். (11)

# மதுப்பிரியர்களால் பாடசாலை ஆக்கிரமிப்பு

## மடக்கிப் பிடித்தனர் பொலிஸார்

(திருநெல்வேலி)

இரவு நேரம் பாடசாலையொன்றில் மதுபானம் அருந்திக் கும்மாளம் போட்ட இளைஞர் குழுவினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் கல்வியங்காட்டுப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

வாசல் கேற் பூட்டப்பட்டிருந்த பாடசாலையின் மதிலால் ஏறிப் பாய்ந்த சில இளைஞர்கள் பாடசாலைக்குள் செல்வதைப் பொதுமக்கள் சிலர் அவதானித்தனர். அவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொதுமக்கள் பாடசாலை அதிபருக்கு தகவல் கொடுத்தனர்.

சில நிமிடங்களில் கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பாடசாலையைச் சுற்றி வளைத்தனர். அங்கே இளைஞர்கள் சிலர் மருவருந்திய நிலையில் காணப்பட்டனர். போதையில் இருந்த ஆறு இளைஞர்களையும் கைது செய்த பொலிஸார் அவர்கள் அருந்திய மதுப்போத்தல்களையும் கைப்பற்றினர்.

இதேவேளை, இப்பாடசாலைக்கு அருகிலுள்ள அம்மன் கோவில் வீதியிலும் இரவு நேரங்களில் இளைஞர்கள் மதுவருந்துவதும், மதுப்போத்தல்களையும், பியர் ரின்களையும் ஆலய வீதிகளில் வீசி விட்டுச் செல்வதும் வழக்கமாக நடைபெற்று வருகின்றது.

பொலிஸார் இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (137)



முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் அமரர் எஸ்.எஸ்.நவரட்ணத்தின் நினைவாக கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது, ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் குபேரநாதனுக்கு பாடசாலை அதிபர் சசிதரன் மாலை அணிவிப்பதையும், கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களையும் காணலாம்.

எவரிடமும் எதையும் எதிர்பார்க்காதீர்கள். எதிர்பார்த்தால் இறுதி வரை எதையும் சாதிக்காமலே போய் விடுவீர்கள்!

-எட்மண்ட் பர்சி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மன்னித்தலும் பகை மறந்து வாழுதலும்!

ஈழத்தமிழர்களாகிய நாங்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கிறோம். அவமானங்களுக்குள்ளாகி இருக்கிறோம். நிறைய இழந்திருக்கிறோம். தாங்க முடியாத வலிகளையும் துன்பங்களையும் பெற்றிருக்கிறோம். உண்மை.

இதனாலெல்லாம் கோபமும் வெறுப்பும் பகையுணர்ச்சியும் பழிவாங்கும் ஆவேசமும் கொண்டிருக்கிறோம். எதையும் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது – கூடாது எனக் கொதித்துப் போயிருக்கிறோம். இது ஒரு யதார்த்தம்.

முப்பது வருட தீவிரமான அழிவுகள் அவலங்களுக்குப் பிறகும் நமக்கான அரசியற் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். இந்த நாட்டிலுள்ள மற்றைய சமூகங்களுக்குச் சமதையாக நாம் வளர்ந்தபாடில்லை. நமது நினைப்பிலிருக்கும் நமது பீடுக்கும் பெற்றிக்கும், நடைமுறையில் நமது வாழ்நிலைககும் ஆன இடைவெளி மிக மிக விலகிச் சென்று கொண்டேயிருககிறது. இதுவும் யதார்த்தம்.

ஏன் இப்படியிருக்கிறது நாம் ஏன் இப்படியிருக்கிறோம் என்று சுயவிசாரணை செய்துகொள்ள இப்போதும் சோம்பல்படுகிறோம் என்றே தோன்றுகிறது. உணர்ச்சிவசப்படாமல், ஆவேசங் கொள்ளாமல் சிலவற்றை மீள் அலசிப் பார்ப்போமென்றால் சில பல தெளிவுகள் கிடைக்கக் கூடும்.

எந்த நாட்டினதாக இருந்தாலும் எந்த மொழியைப் பேசினாலும் இராணுவம் என்பது பொதுவாக எப்படி நடந்து கொள்ளும் என்பதற்கு உலக வரலாற்றினூடான அறிவு நமக்கிருக்கிறது. அவர்களை நம் வாசலுக்கு வரவழைத்து விட்டால், என்னவெல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதும் நமக்குத் தெரியும்.

ஆனாலும் அதன்பிறகு நாம் மிகையாக உணர்ச்சிவசப்படுவதனையும் தவிர்க்க முடிவதில்லை. ஒரு வன்முறையில் நமக்குக் கோபம் உண்டாகி விட்டால், அதைப் பழிவாங்க உலகெங்குமிருந்து பெரிய பெரிய வன்முறைகளுக்கு வரவேற்பளிக்கும் அளவிற்கு ஆவேசம் நம் கண்ணை மறைத்து விடுகிறது. கோபத்திலும் பழியுணர்சியிலும் ஒரே தவறைத் திரும்பத் திரும்பச் செய்யாமலும் இருப்பதில்லை. இந்திய அமைதிப் படைக் காலம் ஓர் உதாரணம்.

ஒரு காலத்தில் இந்தியப் படையினரால் நிறையப் பாதிப்புகளை அடைந்தோம் என்பது உண்மை. அதற்குச் சற்று முன்பு அவர்கள் வருகையை நாம் விரும்பியிருந்ததும் உண்மையே. பின்னர் அவர்களை வெளியேற்றுவதற்கு நாம் தாக்குதல்கள், பிரச்சாரங்களைப் பெருமளவில் செய்ய வேண்டியிருந்ததும் உண்மையே.

பிறகும், இந்தியப் படையால் நமக்கு நடந்தவற்றை நம்மால் மன்னிக்க முடியாமல் போனதால் அது இந்தியா மீதான வெறுப்பாகவும் தொடர்ந்தது. நம் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாகத் தீவிர நிலை எடுத்துக்கொண்ட தமிழ்நாட்டுத் தேசியர்கள் இந்தியாவை மன்னிக்கவே முடியாத எதிரியாக்கி மேலும் வெறுப்பு நிலையை வளர்த்தனர்.

இந்தியப்படை காலத்தில் நடந்ததை மறக்கவோ இந்தியாவை மன்னிக்கவோ முடியாமல் தொடர்ந்து வளர்க்கப்பட்ட வெறுப்புநிலையின் விளைவே, 2009 பேரழிவின் கடைசிக் கணங்களில் இந்தியா தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய மக்களோ ஊடகங்களோ வலியுறுத்தாமல் விட்ட காரணம். வரலாற்றின் கசப்பான பழிவாங்கலாகவே அது முடிந்தது.

மன்னிக்கக் கற்றுக் கொள்ளாமல், நாம் நமது துன்பங்களையும் இழிநிலையையும் கடக்க முடியாது என்ற யதார்த்தத்தை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். மனிதர்களில் நம்பிக்கை வைப்பதும் கரங்களை முன் நீட்டியபடி நெருங்குவதுமே பிரச்சினைகள் தீரும் வழி.

மன்னிக்கும் தார்மீகமும் மனிதாயமும் நமக்குப் புரியவில்லை என்றால்... நமக்கான வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ளப் போவதில்லை.

- ஆசிரியர்

# மாணவனின் அநாகரிக செயற்பாடு உடற்கல்வி ஆசிரியர்கள் எதிர்ப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபை மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின் போது உடற்கல்வி ஆசிரியரை மாணவன் ஒருவன் தரக்குறைவான வார்த்தைகளால் பேசியதை எதிர்த்தும் குறித்த மாணவன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் விளையாட்டுப் போட்டியில் ஈடுபட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் 5 மணி நேரமாக கடமையில் ஈடுபடாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;

மாவட்ட மட்ட போட்டியில் பங்கு கொண்ட மாணவர்களின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை பரிசோதிக்கும் செயற்பாட்டில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் ஒருவர் ஈடுபட்டிருந்தார். இதன் போது அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவனிடமும் மேற்படி ஆவணங்களை பரிசோதிக்கச் சென்றவேளை குறித்த மாணவன் ஆசிரியரை தரக்குறைவாகப் பேசியதுடன் ஆசிரியருக்கு எச்சரிக்கையும் விடுத்தான்.

இது தொடர்பாக உடற்கல்வி உதவிப்பணிப்பாளர வலயக்கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தினார். அத்துடன் மாணவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து பகிஷ்கரிப்பில் ஆசிரியர்கள் ஈடுபட்டனர். அத்துடன் இது குறித்து பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸாரும், வலயக்கல்விப்பணிப்பாளரும் மாணவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், ஆசிரியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு சுமுக நிலையை ஏற்படுத்தினர். எனினும் குறித்த மாணவனை போட்டியிலிருந்து விலக்குவது என தீர்மானிக்கப்பட்டது.

காலை 8.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றபோதிலும் சுமார் 5 மணிநேரம் கழித்து பிற்பகல் 1.30 மணிக்கே போட்டிகள் ஆரம்பமாகின. இதனால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர்.

இதேவேளை குறித்த மாணவன் மீது நடவடிக்கை எதுவும் எடுக்காத அதிகாரிகள் குறித்து உடற்கல்வி ஆசிரியர்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் அநாகரிகமாக நடந்த மாணவனும் ஆசிரியரும் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்களென்பதுவும், அது ஒரு தேசிய பாடசாலை என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)

# சமுர்த்திக்கு தனியான திணைக்களம் நாடாளுமன்றம் வருகிறது சட்ட மூலம்

(கொழும்பு)

சமுர்த்திக்கென தனியாக திணைக்களம் அமைப்பதற்கான சட்டமூலத்தை சட்டமா அதிபர் திணைக்களம் அமைச்சிற்கு வழங்கியுள்ளதுடன் அதனை ஜுலை மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாக பதில் தகவல் ஊடகத் துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சமுர்த்தி திட்டம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள தவறான குற்றச்சாட்டுக்கள் குறித்து விளக்கமளிக்கும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் அடங்கலாக பலர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர். அங்கு அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்.

நாடு பூராவும் உள்ள சமுர்த்தி வங்கிகளில் 49 பில்லியன் ரூபா பணம் வைப்பிலுள்ளது. இதனை அரசாங்கம் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்துவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது.

சமுர்த்தி திட்டத்தை நிறுத்தவோ சமுர்த்தி பயனாளர்களுக்கு வழங்கும் கொடுப்பனவுகளை நிறுத்தவோ போவதில்லை. சமுர்த்தி திட்டத்தை அழிப்பதற்கு அன்றி அதனை மேலும் வலுப்படுத்தவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சமுர்த்திக்கென தனியாக திணைக்களம் அமைப்பதற்கான சட்டமூலத்தை சட்டமா அதிபர் திணைக்களம் அமைச்சிற்கு வழங்கியுள்ளது. ஜுலை மாதத்தில் இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதி பெற உள்ளோம்.

குறைந்தளவு அங்கத்தவர்கள் உள்ள சமுர்த்தி தொழிற்சங்கமொன்று சமுர்த்தித் திட்டம் குறித்து தவறான கருத்துக்களை வெளியிட்டுள்ளது. சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கோ பயனாளர்களுக்கோ எதுவித அநீதியும் ஏற்பட இடமளிக்க மாட்டோம்.

சமுர்த்தி முத்திரை வழங்குவதை நிறுத்தி அவர்களுக்கான பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு வருகிறோம். இதுவரை 49 பில்லியன் ரூபா வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. வருடாந்தம் சமுர்த்தி வங்கிகளில் 12 ஆயிரம் மில்லியன் வைப்பு செய்யப்படுகிறது. குறைந்தளவு பணமே மீளப்பெறப்படுகிறது

சமுர்த்தி வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட நிதி அரச வங்கிகளில் வைக்கப்பட்டுள்ளன. சமுர்த்தி பெறுவோரை குழுக்களாகப் பிரித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் ஜே.வி.பி அங்கம் வகிக்காது

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை என ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் மெய்யான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானது என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொறிமுறைமையை உருவாக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனைத் திட்டத்தில் தமக்கு நம்பிக்கை கிடையாது என அவர தெரிவித்துள்ளார்.

கால நேரத்தை வீண் விரயமாக்கும் நோக்கில் அரசாங்கம் நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனைத் திட்டத்தை முன்னெடுத்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான ஓர் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை இந்த அரசாங்கத்தினால் முன்வைக்க முடியும் என்பதில் நம்பிக்கை கிடையாது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் உரிமைகள் உரிய விதத்தில் வழங்கப்பட்டிருந்தால் சர்வதேச சமூகம் தலையீடு செய்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பருத்தித்துறை பிரதேசத்தில் டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடு


(யாழ்ப்பாணம்)

டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் பருத்தித்துறை பிரதேசம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நடவடிக்கை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி ஒவ்வொரு பிரதேசத்திலும் டெங்கு பரவக்கூடிய இடங்கள் இனங் காணப்பட்டு அவற்றை உரிய வகையில் துப்புரவு செய்யப்படுவதுடன் டெங்கு பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய அடையாள அட்டை பெறுவதில் பாடசாலைகளுக்கு முக்கிய பங்குண்டு

## பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார்



(பூநகரி)

தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதில் பாடசாலைகளுக்கு முக்கிய பங்கு உண்டு. 16 வயதில் மாணவர்கள் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ள அதிகூடிய கவனம் எடுக்கவேண்டும். இந்த நடைமுறை திறப்பட இடம்பெற்றால் நடமாடும் சேவைகள் தேவையில்லை என பூநகரி பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் தெரிவித்தார்.

பூநகரிப் பிரதேச செயலகத்தில் கடந்தவாரம் நடைபெற்ற ஆட்பதிவுத் திணைக்கள நடமாடும் சேவையில் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பூநகரிப் பிரதேசத்தில் பல்வேறு சேவைகைளை வழங்குவதற்கான நடமாடும் சேவைகள் பல இடம்பெற்றபோதும், எமது மக்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தாத நிலையில் கணிசமானோர் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றுப் பத்திரம், திருமணப் பதிவு இல்லாமல் அல்லற்படுவது எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாடசாலை மாணவர்களுக்குத் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு பாடசாலை அதிபர்களையே சாரும். 16 வயது ஆரம்பித்தவுடனேயே அவர்களுக்கு அடையாள அட்டையைப் பெற்றுக்கொடுக்கத் தவறுவதால் பரீட்சைகளுக்கும், போட்டி நிகழ்ச்சிகளுக்கும் மாணவர்கள் பங்குபற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனைப் போக்க உரிய பாடசாலை அதிபர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பூநகரிக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் அழைக்கப்பட்டு அடையாள அட்டை வழங்கல் நடைமுறைகள் பற்றி விளக்கமும் அளிக்கப்பட்டது. பவ்ரல் அமைப்பின் அனுசரணையோடு நடைபெற்ற இவ் இடம்பெயர் சேவையில் இலவசமாகப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டதுடன், முத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டது.

இச்சேவையின்போது தேசிய ஆள் அடையாள அட்டைத் திணைக்களப் பிரதி ஆணையாளர் ஜி.ஏ. ஆர்.தேவப்பிரியா, அமுலாக்கல் உத்தியோகத்தர் த.குகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கங்களை அளித்தனர். 400 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் சேவையில் பங்குபற்றி பயன்பெறறமை குறிப்பிடத்தக்கது. (112)

# தேங்காயின் விலை வீழ்ச்சி செய்கையாளர்கள் பாதிப்பு

(வரணி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் தென்னைச் செய்கையாளர்கள் தேங்காயின் விலை வீழ்ச்சியால் பொருளாதாரத்தால் பாதிககப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் 30 - 35 ரூபாவிற்கு விற்பனை செய்த தேங்காய் தற்போது 18 - 20 ரூபாவிற்கு சந்தைகளில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தென்னைச் செய்கையாளர்கள் கூடியளவு தேங்காயை விற்றாலும் மற்றைய பொருட்களை வாங்க முடியாத நிலை காணப்படுவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு குறிப்பாக வன்னியிலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் தேங்காய்கள் அதிகளவு கொண்டுவரப்படுவதாலேயே இந்த விலை வீழ்ச்சி காரணம் எனவும் தெரிவிக்கும் அவர்கள் விலை வீழ்ச்சியால் தாம் குறைந்த விலைக்கே தேங்காயை விற்பனை செய்ய வேணடிய நிலை உள்ளதாகத் தெரிவிககின்றனர். (150)

## கூட்டம்

(வேலணை)

அல்லைப்பிட்டி வேலணைக் கிராமத்தில் உள்ளவர்களினது ஆதனம் மற்றும் முக்கிய ஆவணங்கள் பற்றி ஆராய்வதற்கான கூட்டமொன்று எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை அல்லைப்பிட்டியில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட பிரதேச சபையின் உபபணிமனையில் வைத்துப பரிசீலனை செய்யப்படவுள்ளது.

மக்கள் தங்களுக்குரிய காணியின் உறுதிகளையும் அதன் போட்டோப் பிரதி, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றினையும் உடன் எடுத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (05)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் எனது உலகு சிறுவர் புகைப்படக் கண்காட்சி நேற்றுமுன்தினம் பயிற்சி மையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ஞானகுமாரன் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், மாணவர்கள் ஆகியோர் பார்வையிடுவதைக் காணலாம்.

# சைக்கிள் திருடியவருக்கு அபராதமும், சிறையும்

(திருநெல்வேலி)

துவிச்சக்கர வண்டியொன்றைக் களவாடிய ஒருவருக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

வத்தகொடகல, ரண்கல என்னும் இடத்தைச் சேர்ந்த பழனி உருத்திரகுமார் என்பவர் கந்தர் மடம், அரசடி வீதியில் கடந்த வருடம் மார்கழி மாதம் 21 ஆம் திகதி கறுப்புநிற லுமாலா துவிச்சக்கர வண்டியைத் திருடியதாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மா.கணேசராசா உத்திரவிட்டிருந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இவரது வழக்கு யாழ்.நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒருவருட கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதோடு, 1000 ரூபா அபராதமும் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறியதால் இரண்டுவார கால சிறைத் தண்டனையும் விதிககப்பட்டது. (137)

## விண்ணப்பம் கோரல்

(வேலணை)

வடமாகர்ணத்தின் தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் கடமை நிறைவேற்றும் கோட்டக் கலவிப் பணிப்பாளர் (வேலணை) பதவி வெற்றிடமாகவுள்ளது.

இதற்கு ஆகக் குறைந்தது 3 வருடமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையுடையு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, 2.1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு யாழ்.மாவட்டப் பாடசாலையைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம். இ.அ.சே.1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே இ.அ.சே.2.1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தினை வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

# மாவட்ட மட்ட தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(தெல்லிப்பளை)

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

**திறனாய்வுப் போட்டி பிரிவு - 5**

லோ.தேனுஷா - விக்னேஸ்வராக் கல்லூரி, சி.துளசி - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சி.பிரசாந் - புங்குடுதீவு ம.வித்தி.

**குறுநாடகம் பிரிவு - 4**

இ.ஜெய்நதன் - வரணி ம.வி, தே.உமையாழினி - அருணோதயாக் கல்லூரி, க.மதனாகரன் - நெல்லியடி ம.ம.வி அ.றொகான்டியோனி - சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**குறுநாடகம் பிரிவு - 5**

ஜி.அபர்னா - வைத்தீஸ்வராக் கல்லூரி, ச.ஜெயபாரதி - வல்வை மகளிர் கல்லூரி, ஹ.விதுசனா - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**கவிதையாக்கம் பிரிவு - 4**

வ.விதுசா - மகாஜனக் கல்லூரி, மு.வினோராஜ் - உசன் இராமநாதன் ம.வி, அனற்டல்சிகா - சென்.தோமஸ் றோ.க.பெ.பா.

**கவிதையாக்கம் பிரிவு - 5**

பு.ஆரத்தியா - வட.மத்திய மகளிர் கல்லூரி, பொ.கஜவதனி - மகாஜனக் கல்லூரி, பு.நிவேகா - மீசாலை வீரசிங்கம் ம.வி.

**சிறுதையாக்கம் பிரிவு - 4**

ம.லூட்ஸ் பூரணி - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, நே.சிந்துஜா - பண்டத்தரிப்பு பெ.உ. பாடசாலை, பி.லக்ஷியா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**சிறுகதையாக்கம் பிரிவு - 5**

க.சோபிகா - மகாஜனக் கல்லூரி, கி.பகீரதி - புங்குடுதீவு ம.வி, செ.பிரமிளா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. (44)

# விசேட தேவைக்குரியவர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் வதியும் விசேட தேவைக்குரியோரில் இதுவரை தமது பதிவுகளை மேற்கொள்ளாமலும், புகைப்படம் எடுக்காமலும் இருப்பவர்களை இம்மாதம் 23ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புகைப்படப்பிடிப்பினையும் மேற்கொள்ள இதுவே இறுதிச் சந்தர்ப்பம் ஆகையால் தவறாது வருகை தருமாறு சமூகசேவை உத்தியோகத்தர்கள் நல்லையா புரட்சிதாஸன் அறிவித்துள்ளார். (104)

# சுகாதார வசதி கருதி மலசலகூடங்கள் அமைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.சுப்பிரமணியம் பூங்காவிற்கு எதிரே உள்ள பழைய மாநகர சபை வளாகத்தில் யாழ். மாநகரசபையால் மலசலகூடத் தொகுதிகள் புதிதாகக் கட்டப்பட்டு வருகிறது.

4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் நான்கு மலசலகூடங்கள் அமைக்கும் பணி தற்போது இடம்பெற்று பூர்த்தியாகும் நிலையில் காணப்படுகிறது.

யாழ்.சுப்பிரமணியம் பூங்காவிற்கு எதிரேயுளள பழைய மாநகர சபை வளாகத்தில் தற்போது பல நிகழ்வுகள் நடைபெறும் இடமாக இருப்பதனால் அந்நிகழ்வுகளில் கலந்துகொள்ள வரும் மக்களின் சுகாதார வசதிகருதி தற்பொழுது அப்பகுதியில் மலசலகூடங்கள் அமைக்கும் பணி மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகர சபைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

# கலாசார விழிப்புணர்வு; தெருநாடக ஆற்றுகை

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள இளவாலை உயரப்புலத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி கலாசார விழிப்புணர்வு சம்பந்தமான பொதுக்கூட்டமும், தெருவெளி நாடக அரங்கேற்றுகை நிகழ்வும் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளிதரன் தலைமையில் உயரப்புலம் பொதுநோக்கு மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சகலரையும் பங்குபற்றுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (104)


# கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம வீதிகள் புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராமங்களை இணைக்கும் வீதிகள் தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமங்களின் உள்ளூர் வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் ஏ-9 வீதி அகலமாக்கப்பட்டு நகரப்பகுதியில் இரு வழிப் பாதையாக்கப்பட்டு வருகின்றது. அதேவேளை ஏனைய கிராம வீதிகள் பல்வேறு புனரமைப்பு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் புனரமைக்கப்படுகின்றன. கடந்த கால யுத்தத்தின் போது இவ் வீதிகள் பாரியளவு சேதமடைந்திருந்தன. இவ் வீதிகளில் இருந்த பாலங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.



செப்பனிடத் தயாராகும் திருநகர் வீதி (படம் : ஜெ.கலையகன்)


கிளிநொச்சி - வட்டக்கச்சி வீதி, கிளிநொச்சி திருநகர் வீதி உள்ளிட்ட பல வீதிகள் கிரவல் பரப்பபட்டு வருகின்றது. இம் மாவட்டத்தில் மீள்குடியேறி 3 வருடங்கள் கடந்த நிலையில் தற்போது வீதிகள் புனரமைப்பு செய்யப்படுவதால் போக்குவரத்து நடவடிக்கைகள் இலகுபடுத்தப்படுவதாகவும் இதனால் விபத்துக்கள் இடம்பெறுவது தவிர்க்கப்படுவதாகவும் தெரிவிக கப்படுகின்றது.

இதேவேளை கற்கள் போடப்பட்டு தார் ஊற்றப்பட்டு நிரந்தர வீதிகளாக கிராமங்களை இணைக்கும் பல புதிய வீதிகள் உருவாக்கப்படுகின்றன.

இவ் வீதிகள் இதுவரை காலமும் சாதாரண கிரவல் வீதிகளாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பலாப்பழ சீசன் யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)



யாழ் குடாநாட்டில் பலாப்பழ சீசன் களை கட்ட ஆரம்பித்துள்ளது. சாவகச்சேரி கொடிகாமம் போன்ற பிரதான சந்தைகளிலும் ஏனையசந்தைகளிலும் பலாப்பழங்களின் விற்பனை சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

புலம்பெயர் தமிழ் மக்களின் வருகை கூடுதலாக இருக்கும் போது இதன் விலை இன்னும் உச்சமாக இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. தென்பகுதி சுற்றுலாப் பயணிகளும் இதனை விரும்பி வாங்குவதைக் காண முடிகிறது.

# மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி இம்முறை வவுனியாவில்

(வவுனியா)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் இம்முறை வவுனியாவில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் மாகாண மட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

இதேவேளை தேசிய மட்டத்தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் யூலை 07 ஆம் 08 ஆம் திகதிகளிலும் 14 ஆம் 15 ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# உதவிப்பணத் தொகை அதிகரிப்பு பயனாளிகள் பெரும் நன்மை

(வரணி)

யாழ்.குடாநாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஊனமுற்றோர், விதவைகள் போன்றவர்களுக்கான உதவிப்பணக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தாம் பெரும் நன்மையடைந்துள்ளதாக இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் இம்மாதாந்த உதவிப்பணம் கடந்த பல வருடங்களாக அதிகரிப்பு செய்யப்படாமல் இருந்த நிலையில் தற்போது பணத் தொகை அதிகரிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

இதன் படி 100 ரூபா பெறுபவர்களுக்கு 250 ரூபாவாகவும், 120 ரூபா பெறுபவர்களுக்கு 300 ரூபாவாகவும் அதிகரிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது இதனால் கஷ்டத்தின் மத்தியில் வாழும் தமக்கு பெரும் உதவியாக இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை 70 வயதிற்கு மேற்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் வயோதிபர்களுக்கு ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கும் அண்மையில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(150)

# வைத்தியசாலையில் தூண்கள் சரிந்து விழும் அபாயநிலை

(வரணி)

வரணி பிரதேச வைத்தியசாலையின் இருபக்க வாயில் தூண்களும் மிகவும் சேதமடைந்த நிலையில் சரிந்து விழும் நிலையில் அபாய நிலை காணப்படுவதாக நோயாளர்களும் மக்களும் தெரிவிக்கின்றனர்.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த இத் தூண்கள் புனரமைக்கப்படாது விழும் நிலையில் வெடிப்புக்களுடன் காணப்படுவதாகவும் இதனால் எந்த நேரத்திலும் எவருக்கும் ஆபத்து நேரிடலாம் என்ற நிலை காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாடசாலை வாயில் கதவு தூண் விழுந்து மாணவன் ஒருவன் பலியான துயரச் சம்பவம் நிகழ்ந்தது.

எனவே இவ் வைத்தியசாலை கதவுத்தூண்களை உரியவர்கள் புனரமைப்புச் செய்து அபாய நிலையை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நோயாளர்களும், நலன்விரும்பிகளும் கோரிக்கை விடுக்கின்றனர்.

(150)

# யாழ்.மாநகரசபையால் டெங்கு ஒழிப்பு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் அறிவிக்கப்பட்டுள்ள தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற்பாடக யாழ். மாநகர சபைக்குட்டப்பட்ட பொதுச்சுகாதாரப்பரிசோதகர் பிரிவுகளில கடந்த திங்கட்கிழமையில் இருந்து நாளை மறுதினம் வரையான ஏழு நாட்களுக்கு தொடர்ச்சியாக டெங்கு கட்டுப்பாட்டுவார செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதன்பிரகாரம் பெரிய கடை 1 ,11, பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு, நாவாந்துறை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு, கொழும்புத்துறை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு, குருநகர் 1,11 பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு, அரியாலை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு ,வண்ணார் பண்ணை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு, நல்லூர் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு ஆகிய இடங்களில் இந்நடவடிக்கை இடம்பெற்றுவருவதாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

(18.05.2012 -வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 05 ஆம் திகதி. திரியோதசி பின்னிரவு 1.47 வரை.
நட்சத்திரம் அச்சுவினி முழுவதும். அமிர்தயோகம். பிரதோச விரதம்.
இராகுகாலம் 10.22 - 11.52 வரை. சுபநேரம் 5.52 - 7.22 வரை.
எமகண்டம் 2.52 - 4.22 வரை. குளிகைகாலம் 7.22 - 8.52 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பெருமை, வீண் அலைச்சல், மனக்கசப்பு நீங்கி ஆனந்தம் நிலவும், முயற்சிகள் பலிக்கும். |
| ரிஷபம் | சோம்பல் தன்மை, சுபச்செலவுகள், வசதியான இடமாற்றம், நினைத்தது நடக்கும். |
| மிதுனம் | நல்ல வாய்ப்பு, கடின உழைப்பு, சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து, சரளமான செல்வ பலம். |
| கடகம் | நன்மதிப்பு, கௌரவமான பதவிகள், கூட்டுத் தொழிலில் இலாபம், குடும்பத்தில் போட்டி. |
| சிம்மம் | திருப்தி கரமான பணவரவு, ஒருவருக்கொருவர உதவி, அரச உதவி கிடைக்கும், பொருள் சேரும். |
| கன்னி | புதுமுயற்சிகள் தவிர்க்கவும், லட்சுமி கடாட்சம், பெரியோர் சந்திப்பு, எதிர்பாராத பணவரவு. |
| துலாம் | பயண நன்மை, எதையும் சுலபமாகச் செய்வீர்கள், சுபகாரியங்கள், மனதில் ஒய்வு. |
| விருச்சிகம் | சுக விருத்தி, குடும்ப நலனில் அக்கறை, பணிவுடன் நடக்கவும், தடைகள் அகலும். |
| தனுசு | சுப தினம், முயற்சிகளில் வெற்றி, கணவன் மனைவி அன்னியோன்யம், திருமண முயற்சி. |
| மகரம் | நல்ல நாள், நண்பர்கள் ஆதரவு, ஸ்தல வழிபாடுகள், பதவி உயர்வு வரும். |
| கும்பம் | வெற்றி வாய்ப்பு, சுலப நன்மை, சரள பணப் பரிமாற்றம், சகோதரரால் சிரமம். |
| மீனம் | குடும்பச்சிறப்புகள், ஒரளவு பணப்புழக்கம், பிரச சினைகள் வரும், அயலவர் உதவி கிடையாது. |

# நாக பூசணிக்கு கொடியேற்றம்

(வேலணை)

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமானது எதிர்வரும் ஜூன் மாதம் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இதில் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் உற்சவங்கள் முடிவடையவிருக்கின்றன.

ஆலய திருவிழா ஒழுங்குகள் மற்றும் இதர நடவடிக்கைகள் தொடர்பான கூட்டமொன்று யாழ்.அரசாங்க அதிபர செயலகத்தினால் கூட்டப்பட்டு அந்த கூட்டத்தில் இது சம்பந்தமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(05)

# கணித நாடகப் போட்டியில் மானிப்பாய் இந்து மூன்றாமிடம்



(யாழ்ப்பாணம்)

மாணவர்களது கணித எண்ணக்கருவினை விருத்தி செய்யும் முகமாக அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையில் நாடாத்தப்பட்டு வரும் கணித நாடகப்போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்தின் பாடசாலைகளுக்கிடையிலான கனிஸ்டபிரிவு போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளது.

மருதனார் மடம் இரமநாதன் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அறிவு நாடகம் வெற்றி பெற்றது இந்நாடகத்திற்கான எழுத்துருவாக்கம் நெறியாள்கையினை நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் மேற்கொண்டுள்ளார். நடிகர்களாக சானுஜன், கலைக்சன், தனுஸன், மிதுஸன், சிவானுஸன், சங்கீர்த்தன், தர்ஸன், திஸ்னுகன், ரசீபன். தர்சிகன், கனிஸ்ரன், சுஜி, கோபிராஸ், கீர்த்திகன், ஜெயகோபன் ஆகியோர் நடிகர்களாகவும் அகிலன் விதுசன் குகதாசன் ஆகியோர் இசைஞர்களாகவும் செயற்பட்டுள்ளனர்.

# கொல்கத்தாவிடம் வீழ்ந்தது மும்பை

(மும்பை)

இந்தியன் பிறிமியர் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சுனில் நரையனின் சிறப்பான பந்துவீச்சு மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 32 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மனோஜ் திவாரி 41, கௌதம் கம்பீர் 27 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் ஆர். பீ.சிங் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியனர்.

பதிலுக்கு 141 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மும்பை இன்டியன்ஸ் அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் சச்சின் டெண்டுல்கர் 27, தினேஷ் கார்த்திக் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் க சுனில் நரைன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். மற்றும் கலிஸ் பாலாஜி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சுனில் நரைன் தெரிவு செய்யப்பட்டார்.



# மும்பை வான்கடே மைதானத்தில் ஷாருக்கான் நுழையத் தடை

பிரபல ஹிந்தி நடிகரும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளருமான ஷாருக்கானுக்கு, மும்பை வான்கடே மைதானத்தில் நுழைவதற்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் வான்கடே மைதானத்தில் மோதின. இதில் ஷாருக்கின் கொல்கத்தாஅணி வெற்றி பெற்றது. இதனால் உற்சாகத்தில் இருந்த ஷாருக்கான் மது அருந்தி மைதானத்தில் நுழைய முற்படும்போது மைதான காவலர்கள் தடுத்துள்ளனர். எனவே, கோபமடைந்த ஷாருக்கான் மும்பை கிரிக்கெட் சங்கத் தலைவரையும், இந்திய கிரிக்கெட் சபையையும் தகாத வார்த்தைகளால் திட்டியதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், குடிபோதையில் ஒழங்கீன நடவடிக்கையில் ஈடுபட்ட ஷாருக்கான் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மைதான அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். இதனையடுத்து, வான்கடே மைதானத்தில் நுழைய ஷாருக்கானுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது.



# மகிழ்ச்சியான மனிதனாக மாறினார் கிளார்க்

(சிட்னி)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் கப்டன் மைக்கல் கிளார்க், சக நாட்டு மொடல் அழகி கெய்ல் போல்டியை காதலித்து வந்தார். மைக்கல் கிளார்க்-போல்டி திருமணம் சிட்னியில் நேற்று முன்தினம் நடந்தது. நெருங்கிய உறவினர்கள் மட்டுமே கலந்து கொண்ட இந்த திருமணம் ரகசியமாக நடந்தது.

திருமணம் முடிந்த பின்னர் 31 வயதான மைக்கல் கிளார்க் டுவிட்டரில், கெய்ல் போல்டியை மணந்ததன் மூலம் உலகிலேயே மகிழ்ச்சியான மனிதன் நான் என்று குறிப்பிட்டுள்ளார். மைக்கல் கிளார்க்கை மணந்ததன் மூலம் உலகிலேயே அதிர்ஷ்டகார பெண் நான். இந்த நாள் எனது வாழ்க்கையில் சிறந்த நாள் என்று 30 வயதான மொடல் அழகி கெய்ல் போல்டி டுவிட்டரில் எழுதி உள்ளார்.

# றக்பி அணி வீரர் விபத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கை தேசிய றக்பி அணி மற்றும் ஹவ்லொக்ஸ் அணி ஆகியவற்றின் வீரரான வசிம் தஜூடின், நாரஹேன்பிட்டியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹெவ்லொக்ஸ் விளையாட்டுக் கழகத்தின் முகாமையாளர் ரஜீவ் பெரேரா இதனை உறுதி செய்தார்.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் வ்சிம் தஜூடின் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

தஜூடின் பயணித்த வாகனம் சுவரொன்றில் மோதிய பின்னர் தீப்பற்றியமையினால், அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸ புனித தோமஸ் கல்லூரியில் கல்வி கற்ற வசீம், 2003 ஆம் ஆண்டு பாட-சாலை றக்பி அணியின் உப தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

கனிஷ்ட தேசிய றக்பி அணியை பிரதிநிதித்துவப்படுத்திய அவர், 2007 ஆம் ஆண்டு இலங்கை தேசிய றக்பி அணியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார்.

வசீம் தஜூடின் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஹொங்கொங் றக்பி தொடரில் எழுவர் கொண்ட இலங்கை றக்பி அணியை பிரதிநிதித்துவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு ஹவ்லொக்ஸ் அணியை தலைமை தாங்கிய வசீம் தஜூடின் அந்த வருடத்திற்கான பிரபல றக்பி வீரராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

20 வயதான வசீம் தஜூடின் ஜனாசா நல்லடக்கம் இன்று நடைபெறவுள்ளது.

# பெக்கமின் பங்கேற்புடன் ஒலிம்பிக் தீபம் பிரிட்டனுக்கு



(லண்டன்)

கால்பந்தாட்ட நட்சத்திரம் டேவிட் பெக்கமின் பங்குபற்றலுடன் ஒலிம்பிக் தீபம் பிரித்தானியாவிற்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

ஏதென்ஸில் நடைபெற்ற தீபத்தின் உத்தியோகபூர்வ கையளிப்பு நிகழ்வில் டேவிட் பெக்கம் கலந்து கொண்டதாக லண்டன் ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவினர் கூறியுள்ளனர்.

முன்னாள் இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் தலைவரான டேவிட் பெக்கம் 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான தூதுவராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா முழுவதும் ஒலிம்பிக் தீபத்தை கொண்டு செல்லும் நிகழ்வில் இளையவர்களை இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் செபஸ்ரியன் கோ தெரிவித்துள்ளார்.37 வயதான டேவிட் பெக்கம் அமெரிக்காவின் ஏல் எ கெலக்ஸி அணிக்காக தற்போது விளையாடிவருகின்றார்.லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாட்டுக் குழுவினால் அழைக்கப்பட்டுள்ள 5 இளைய பிரித்தானியர்களுடன் டேவிட் பெக்கம் எதென்ஸில் இணைந்துகொள்ளவுள்ளார்.

2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஆரம்ப நிகழ்வு கிழக்கு லண்டனிலுள்ள நியூ ஒலிம்பிக் விளையாட்டரங்கில் ஜுலை 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# வீடியோ காட்சியில் உள்ளவர் யாரென்பது நிருபணம்

(புனே)

ஐ.பி.எல். போட்டியில் இடைக்காலத் தடைக்குள்ளாக்கப்பட்டுள்ள 5 வீரர்களுள் ஒருவரான மோனிஷ் மிஷ்ரா, குறித்த வீடியோக் காட்சியில் தோன்றுவது தான் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், அதில் கருத்துக்களைப் பகிர்ந்தது தான் என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த காட்சியில் தான் தோன்றுவது, கருத்துக்களைப் பகிர்வது உண்மை என்ற போதிலும், அதில் நான் தெரிவித்த கருத்துக்கள் உண்மையற்றவை. எனது பெறுமதியை உயர்த்திக் காட்டுவதற்காக, எனக்கான கேள்வி அதிகமாகக் காணப்படுவதாகக் காட்டுவதற்காக நான் சாதாரணமாக அக்கருத்துக்களைப் பகிர்ந்தேன்.

அத்தோடு புனே வாரியர்ஸ் அணி எனக்கு விதிகளுக்குப் புறம்பாக எந்தவொரு ஊதியத்தையும் வழங்கவில்லை. அத்தோடு எனது தவறான கருத்துக்களுக்கு மன்னிப்புக் கோருகிறேன்.

இது போன்ற தவறு இனிவரும் காலங்களில் நிகழாமல் இருப்பதற்கு முயற்சிப்பேன். தயவு செய்து கிரிக்கெட் ரசிகர்கள் உட்பட அனைவரும் என்னை மன்னித்துவிடுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# காதலியின் சவாலை நிறைவேற்றிய திவாரி

(மும்பை)

உலகின் மிகச்சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவரான லசித் மலிங்கவின் பந்துவீச்சில் நேற்று முன்தினம் பெற்றுக்கொண்ட சிக்ஸ், தனது காதலியின் சவாலை நிறைவேற்றிக்கொள்ளப் பெறப்பட்டது என கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர் மனோஜ் திவாரி தெரிவித்துள்ளார்.

லசித் மலிங்கவின் ஓவரில் தான் மிகுந்த மனத்திடத்துடன் காணப்பட்டதாகவும், அவரின் பந்தில் சிக்ஸர ஒன்றை அடிப்பது பற்றி தெளிவாக இருந்ததாகவும் தெரிவித்த மனோஜ் திவாரி, அதுகுறித்து மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.



தனது காதலி ஒருமுறை தன்னிடம் லசித் மலிங்கவின் பந்துவீச்சில் தன்னால் சிக்ஸர் ஒன்றைப் பெற்றுக் கொள்ளவே முடியாதுஎனத் தெரிவித்திருந்ததாகத் தெரிவித்த அவர், தனது காதலியின் சவாலைத் தான்ஏற்றுக்கொண்டதாகத் தெரிவித்தார்.

# மன்செஸ்டர் யுனைட்டட் ஆதிக்கம்

(லண்டன்)

இங்கிலாந்து பிறீமியர் லீக் 20 பருவகாலங்களுக்கான விருது வழங்கல் விழாவில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டது. இப்பருவகாலத்திற்கான சம்பியன் பட்டத்தை மன்செஸ்டர் சிட்டி கழகத்திடம் இழந்த போதிலும், இதுவரை காலமும் இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் காட்டிய ஆதிக்கத்தை இது வெளிப்படுத்துவதாக அமைந்தது.

விருகளின் போது சிறந்த வீரருக்கான விருதை மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்தின் மத்திய கள வீரரான றயன் கிக்ஸ் பெற்றுக் கொண்டதோடு, சிறந்த முகாமையாளருக்கான விருதை சேர் அலெக்ஸ் பேர்குசன் வெற்றிகொண்டார். கடந்த 20 வருடங்களில் வெளிப்படுத்திய சிறந்த பெறுபேறுகளுக்காகவே இந்த விருது வழங்கி வைக்கப்பட்டது. விருதைப் பெற்றுக்கொண்ட பின் கருத்துத் தெரிவித்த றயன் கிக்ஸ், கடந்த சில பருவகாலங்களாக மன்செஸ்டர் சிட்டி கழகம் தொடர்ந்தும் சிறந்த அணியாக மாறி வருகிறது எனத் தெரிவித்ததோடு, அதற்கேற்றாப்போல் தாங்களும் மேலும் சிறப்பாக ஆடி வெற்றிபெற வேண்டிய தேவை உள்ளதாகத் தெரிவித்தார். 38 வயதான றயன் கிக்ஸ், இதுவரை காலமும் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் சம்பியன் பட்டம் வென்ற அத்தனை தொடர்களிலும் பங்குபற்றியதோடு, அக்கழகத்திற்காக 909 போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். 20 வருடங்களில் சிறந்த அணியாக 2003-04ஆம் ஆண்டுப் பருவகாலத்தில் தோல்வியைப் பெறாமல் காணப்பட்ட ஆர்சனல் கழகம் தெரிவானதோடு, 2011-12ஆம் பருவகாலம் சிறந்த பருவகாலமாகத் தெரிவுசெய்யப்பட்டது. சிறந்த கோலாக கடந்தாண்டுமன் செஸ்டர் சிட்டி கழகத்திற்கெதிராக மன்செஸ்டர் யுனைட்டட்டின் வெய்ன் றூனி பெற்றுக் கொண்ட கோலும், சிறந்த போட்டியாக 2009ஆம் ஆண்டு மன் செஸ்டர் சிட் மற்றும் மன்செஸ்டர் யுனைட்டட் கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற போட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

# பந்து வீச்சு பயிற்சியாளர் இல்லை

(லாகூர்)

பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் இல்லாதநிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

பொருத்தமான பயிற்றுவிப்பாளர் ஒருவரை இதுவரை தெரிவுசெய்ய முடியாதுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் கூறியுள்ளார்.பந்துவீச்சு பயிற்றுவிப்பாளரைதெரிவு செய்வதற்கென மேலும் விண்ணப்பங்களை கோரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# விசாரணைக்கு வலியுறுத்து

இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகளின் போது இடம்பெற்ற மோசடிகள் குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டுமென இந்திய மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் அஜய் மாஹின் இதனைத் தெரிவித்துள்ளதாக இந்தியத் தகவல்கள் குறிப் பிடுகின்றன. இம்முறை ஐ.பி.எல் போட்டிகளில் மோசடிகள் மற்றும் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றமை குறித்து தொலைக்காட்சியொன்று செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# தென்மராட்சி வலய மட்ட பெரு விளையாட்டு முடிவு

(மட்டுவில்)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகளின் முடிவு வலயக் கல்விப் பணிமனையினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு பெருவிளையாட்டுக்களிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணிகளின் விபரம் வருமாறு:

**எல்லே**

*19 வயது ஆண்கள்:*
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்.

*19 வயதுப் பெண்கள்:*
மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம்.

**கபடி**

*15 வயது ஆண்கள்:*
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

*19 வயது ஆண்கள்:*
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்.

*15 வயதுப் பெண்கள்:*
மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

*19 வயதுப் பெண்கள்*
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**பூமின்ரன்**

*15 வயது ஆண்கள்:*
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை.

*19 வயது ஆண்கள்:*
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்.

*15 வயது பெண்கள்:*
சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்.

*19 வயது பெண்கள்:*
சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்.

**மேசைப் பந்து**

*19 வயதுப் பெண்கள்:*
சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

*19 வயது ஆண்கள்:*
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**வலைபந்து**

*15 வயதுப் பெண்கள்:*
கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

*17 வயதுப் பெண்கள்:*
கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம்.

*19 வயதுப் பெண்கள்:*
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (11)



**இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் அண்மையில் கால்பந்து சேவையாளர் விருது வழங்கப்பட்ட எம். பிரான்சிஸிற்கு யாழ். மாவட்ட கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினர் கௌரவித்தனர். யாழ். மாவட்டத்தின் கால்பந்தாட்ட வளர்ச்சிக்கு சேவை ஆற்றியதைப் பாராட்டி யாழ். கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் விருது ஒன்றும் வழங்கப்பட்டது. இந்த விருதை யாழ். லீக்கின் தலைவர் அன்ரனிப்பிள்ளை வழங்கிவைத்தபோது... (படப்பிடிப்பு: சுரேஷ்)**

# மென்பந்து கிரிக்கெட் முல்லை. ம.வி. சம்பியன்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 10 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் முல்லைத்தீவு மகாவித்தியாலய அணி சம்பியனானது.

இப்போட்டி மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அணியும் மோதின. இதில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 8 விக்கெட்டுக்களை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கற்சிலைமடு அ.த.க. பாடசாலை குறிப்பிட்ட ஓவர்கள் நிறைவில் 37 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அணியும் பாண்டியன் குளம் மகாவித்தியாலய அணியும் மோதின. இப்போட்டியில் முதலில் ஆடிய முல்லைத்தீவு ம.வி. அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய பாண்டியன்குளம் ம.வி. அணி 26 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது. இப்போட்டியில் 84 ஓட்டங்களால் வெற்றிபெற்ற முல்லைத்தீவு ம.வி. அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும் வித்தியானந்தாக் கல்லூரி அணியும் மோதின. இதில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய வித்தியானந்தாக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் புதுடிக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் முல்லைத்தீவு மகா வித்தியால்ய அணியும், மல்லாவி மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய முல்லைத்தீவு ம.வி. அணி 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய மல்லாவி மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் முல்லைத்தீவு ம.வி. இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து மூன்றாமிடத்திற்கான போட்டி நடைபெற்றது. இதில் வித்தியானந்தாக் கல்லூரி அணியும், மல்லாவி மத்திய கல்லூரி அணியும் மோதின. முதலில் ஆடிய வித்தியானந்தாக் கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய மல்லாவி மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் வித்தியானந்தாக் கல்லூரி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து இறுதிப் போட்டி இடம்பெற்றது. இதில் முல்லைத்தீவு ம.வி. அணியும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு ம.வி. அணி 10 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. 11 ஓட்டங்களால் வெற்றிபெற்ற முல்லைத்தீவு ம.வி. அணி மாவட்ட சம்பியனானது. (42)

# சைக்கிள், மரதனில் வென்றோர்

(அச்சுவேலி)

வலி. கிழக்கு பிரதேசசெயலர் பிரிவு பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு விழாவை முன்னிட்டு ஆண்கள் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் அச்சுவேலி இலங்கை வங்கி கிளையின் அனுசரணையுடனும், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் தங்காஸ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் நடத்தப்பட்டன.

மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி என்பனவற்றில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீரர்களின் பெயர் விபரம் வருமாறு.

சைக்கிள் ஓட்டப் போட்டி ஆண்கள் பிரிவு

பா.ராகுலன், நா.கோகுலராஜ், சோ.துசியந்தன் ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாமிடங்களைப் பெற்றுக் கொண்டனர்.



மரதன் ஓட்டப் போட்டி ஆண்கள் பிரிவு

பா. தயாகரன், சே. சண்முகதாஸ், பா.ஜசிந்தன் ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாமிடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

மரதன் ஓட்டப் போட்டி பெண்கள் பிரிவு

க. கயூரி, த. நிருசனா, கு. கோசலா ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாமிடங்களைப் பெற்றுக் கொண்டனர்.



**பாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு அணிகளுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினர், அதிபர், பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்சியாளருடன் நிற்பதைக் காணலாம். (படம் : சுரேஷ்)**

# தேசிய மட்ட வலைப்பந்தில் முதன் முறையாக கரவெட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலிருந்து முதல் தடவையாக ஆடவர் வலைப்பந்தாட்ட அணி, தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளது.

இலங்கை தேசிய இளைஞர் மன்றம் நடத்தவுள்ள ஆடவர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்கு யாழ் மாவட்ட தேசிய இளைஞர் மன்றத்தினால் கரவெட்டி பிரதேச அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் வலைப்பந்தாட்ட போட்டியில் ஆடவர் மற்றும் மகளிரைக் கொண்ட கலப்பு அணியினர் மாத்திரமே இதற்கு முன்னர் விளையாடியிருந்தது.

தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை மற்றும் நாளை மறுமதினம் கொழும்பு மஹரகம தேசிய இளைஞர்மன்ற உள்ளக விள்ளயாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# அருவிகளின் லீலை


- எஸ்.ராமகிருஷ்ணன்

**ஆற்றின்** கரைகளில் வாழ்வது, அல்லது ஆற்றைத் தேடிச்சென்று காண்பது என்பது மனித மனதின் ஆதார வேட்கைகளில் ஒன்று. அத னால் தான் இன்றும் பிழைப்பிற்காக வெளிநாட்டிற்கு போன பலரும் கூட நினைவில் ஓடும் தாமிரபரணியை, காவேரியை, அமராவதியைப் பற்றி பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்களுக்குத் தாமிரபரணி என்பது நதியில்லை, வாழ்வின் பிரிக்க முடியாத பகுதி. அதன் நீரோட்டத் திற்குள் தான் பால்யமும் பதின் வயதும் இளமைக்காலமும் கலந்து ஓடுகின்றது. ஆறு எப்போதும் வாழ் வின் இனிமையான பொழுதுகளின் ஞாபகவடிவம் போலிருக்கிறது.

நாட்டின் ஆன்மாவைத் தேடும் ஒரு பயணி நதி வழி செல்பவ னாகவே இருப்பான். இதைத் தான் தீர்த்த யாத்திரை என்று சொல்வார் கள். அது வெறும் மதவழிபாடு மட்டு மில்லை. வேறுவேறு ஆறுகளை, குளங்களை, நீர்நிலைகளைத் தேடிப் போய் தரிசனம் செய்வது என்பது அகச்சந்தோஷத்தை உருவாக்கக்கூடி யது. நதியைப் பார்த்த மாத்திரம் ஒருவனது சொந்தக் கவலைகள், துயரங்கள் ஒன்றுமில்லாமல் போய்விடுகின்றன.

நதியில் நீராடும் மனிதன் பல வேளைகளில் அதனோடு பேசுகி-றான், அதை வணங்குகிறான். நதி யைத் தனது தாயாக, தோழியாக, நண்பனாக, குழந்தையாக, ஞானகுரு வாக கொள்வது தமிழ் மரபில் எப் போதுமிருக்கிறது. நதியில் நீராடமுடி யாத நேரங்களில் அதைக் கண் ணில் ஒரு துளி ஒற்றிக் கொண்டால் போதும் நதியின் அத்தனை உயர் தன்மைகளும் நமக்குள் வந்துவிடும் என்ற நம்பிக்கையிருக்கிறது.

காந்தியவாதியான காகா காலேல்கர் இந்தியாவில் ஓடும் அத் தனை முக்கியமான ஆறுகளையும் பயணம் செய்து நேரடியாகப் பார்த்து குஜராத்தி மொழியில்




காகா காலேல்கர்

விரிவான புத்தகம் ஒன்றை எழுதி யிருக்கிறார். ஜீவன் லீலா என்ற அந்தப் புத்தகத்தை தமிழில் 1971இல் சாகித்ய அகாடமி வெளியிட்டி ருக்கிறது.

நதிகள் குறித்து இது போல சுவாரஷ்யமாக எழுதப்பட்ட புத்தகம் எதையும் நான் வாசித்ததேயில்லை. ஜீவன் லீலாவைப் படிப்பவர் காகா கலேல்கர் மீது பொறாமை [illegible] வது தவிர்க்கமுடியாதது. அந்த அ[illegible] அவர் இந்திய தேசத்தின் ஒவ்[illegible]ரு நதியையும் தேடிப்போய் பார்த்திருக் கிறார், ரசித்து உருகியிருக்கிறார்.

நதியை அறிவது ஒரு கொண் டாட்டம். பிரிந்த குடும்பத்தை மறு படி காணும் ஒருவனின் மனநிலையே ஆற்றினைக் காணும் போது அவருக் குள் ஏற்படுகிறது. நதியை வியந்து வியந்து போற்றுகிறார். அதன் பூர்வ வரலாற்றை, புராணீக குறிப்புகளை, கவிஞர்கள் ஆற்றினைப் பாடிய பாடல்களை நினைவுபடுத்துகிறார். அவ்வகையில் இது ஒரு நதியாஞ்சலி.

நதிகளைப்பற்றி அவர் சுட்டிக்காட் டும் விஷயங்கள் வியப்பானவை. பசு, காளை குதிரை போன்ற விலங்கு களின் குலத்தை வகைப்படுத்த நதி களையே அடையாளம் சுட்டுகிறார் கள். நல்ல ஜாதிக் குதிரைகள் சிந்து நதிக்கரையில் அதிகம் வளர்க்கப்பட் டன. அதனால் அந்த குதிரைகளுக்கு பெயரே சைந்தவம் என்றானது. பீமா நதிக்கரையில் வளரும் குதிரை ரகத் தின் பெயரே பீமாகுதிரை. இப்படி விலங்குகள் நதியின் இயல்பை வைத்தே அழைக்கப்பட்டன.

இதுபோலவே விலங்குகளின் பெயரை நதிக்குச் சூட்டி அழைப்பதும் வழக்கம். கோதா, கோமதி சர்மண் வதி போன்றவை அப்படிபட்டவைகளே.

கடலுக்கு இன்னொரு பெயரிருக் கிறது அது நதியின் கணவன். ஆறு கள் நதியைத் தேடி சேர்வதால் அந்த பெயர் ஏற்பட்டிருக்கிறது என்கிறார் காலேல்கர்.

ஆற்றைப் பார்த்தவுடனே எல் லோரது மனதில் அது எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறது என்ற கேள்வி தானாகவே எழுகிறது. இந்தக் கேள்வி மிகப்பழமையானது. நதிமூலம் அறிந்து கொள்ள எப்போதுமே மனி தன் ஆசைப்படுகிறான். ஆனால் மனி தனால் ஒருபோதும் நதியின் ரகசி யத்தை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது.

வாழ்க்கையை எப்போதுமே நதி-யோடு தான் ஒப்பிடுகிறோம், பிரவா-கம் தான் வாழ்வின் கதி. நதியின் முன்னால் நிற்கும் ஒருவன் என்ற படிமமே மனதை கற்பனையில் கொண்டுவிடுகிறது இல்லையா.

நதி ஒருவனின் புறத்தைத் தூய்மை படுத்துவதைப் போலவே அகத்தையும் தூய்மை செய்யக்கூடியது. 'அதை ஹெர்மன் ஹெஸ்ஸேயின் சித்தார்த்தா நாவலில் வரும் கோவிந்தன் இறுதிக் காட்சியில் சொல்கிறான். நதியில் ஒரு படகோட்டியாக வாழ்வதே உன்னதமான வேலை, அதுவே உயர்ந்த ஞான நிலை என்கிறான். காரணம் நதி அவனுக்கு வாழ்வின் உயர்வு தாழ்வுகளை, சுகதுக்கங் களைக் கற்றுத் தந்திருக்கிறது.

ஜீவன் லீலா முழுவதும் கவித்து வத் தெறிப்புகள் மிளிருகின்றன. உலகின் முதல் பயணி நதியேஎன்று சொல்லத்தொடங்கிய காலேல்கர் நதி ஒரு கண்ணாடி அதில் இரவின் நட்சத்திரங்கள் ஒளிர்கின்றன. கறுப்பு வெண்ணெய் போல சேறு படிந்த ஆறு, ஆற்றில் உள்ள கூழாங்கற்க ளில் இறந்தவர்களின் அஸ்திகரைந்து அவை அழிக்கமுடியாத நினைவின் வடிவம் போலயிருக்கின்றன.

இரண்டு நதிகள் ஒன்றாகும்போது ஒரு நதி தன் பெயரை விட்டுக் கொடுத்து மற்றொரு நதியாகிவிடு கிறது. ஆறு கடலோடு கலக்கும் போது தன்னை ஒடுக்கிகொண்டுவிடு கிறது. அதற்கு காரணம் அது கண-வனை தேடிச்சேர்கிறது என்பதுதானா என்று ஒளிரும் வரிகளை கவித்துவ உச்சங்கள் என்றே சொல்லவேண்டும்.

ஆறு ஒரு தர்மத்தைக் கடைப் பிடிக்கிறது. அதனால் தான் அது கரைகளுக்குள் ஒடுங்கி ஓடுகிறது. தனது பெயரை, பெருக்கெடுக்கும் பிரவாகத்தைத் தானே கைவிட்டு முடிவில் கடலோடு ஒன்று கலந்து விடுகிறது. அந்த வகையில் மனித வாழ்க்கை மேற்கொள்ள வேண்டிய அத்தனை செயல்களையும் நதி வழிகாட்டிச் செல்கிறது.

புத்தகம் முழுவதும் நீரோட்டச் சப்தம் கேட்டபடியே இருக்கிறது. இப்புத்தகத்தை வாசிப்பது ஒருஅரிய அனுபவம். நூலை முடிக்கும் போது வாசகன் பெருகியோடும் நதியில் குளித்து எழுந்து நிற்பது போன்ற புத்துணர்ச்சியை பெறுவது நிச்சயம்.

நதி அவனுக்கு முன்பும் பின்பும் தன்னியல்பில் ஓடிக்கொண்டிருப்பது போல உலகம் இயங்கிக் கொண்டே யிருப்பதை அப்போது அவன் மனம் நுட்பமாக உள்வாங்கிக் கொள்ளும். அது தான் இந்தப் புத்தகத்தின் வெற்றி.

# 'பறக்கும் மலைகள்' யாருக்குச் சொந்தம்?

- என்.ராமதுரை


**பூமியும்** சந்திரனும் இருக்கின்ற வட்டாரத்தை நோக்கி'பறக்கும் மலை கள்' என்று சொல்லத்தக்க பெரும் பாறைகள் அவ்வப்போது "சர், சர்" என்று வேகமாக வரும். ஆனால் அவை பூமியின் மீது அல்லது சந் திரன் மீது மோதாமல் தமது சுற்றுப் பாதையில் வேகமாகச் சென்று விடும். இவற்றுக்கு "ஆபத்தை உண்டாக்கக்கூடிய அஸ்ரரோய்ட்கள்" என்று பெயர். உதாரணமாக மே 19 ஆம் திகதி (நாளை) 31 மீற்றர் நீளம் கொண்ட அஸ்ரரோய்ட் சுமார் 9 லட்சம் கிலோ மீற்றர் தொலை வில் பூமியைக் கடந்து செல்ல இருக்கிறது.


இப்போதைய நிலவரப்படி இப் படியான அஸ்ரரோய்ட்கள் மொத்தம் 1287 உள்ளன. இவை காலம் கால மாக வந்து போய்க் கொண்டிருக் கின்றன. பூமியுடன் மோத வாய்ப் பில்லை தான். ஆனாலும் அமெரிக்க விண்வெளி அமைப்பான நாஸா பல்வேறு வழிகளில் இவற்றைக் கண்காணித்து வருகிறது.

நாம் இந்த அஸ்ரரோய்ட்கள் குறித்து கவலைப்படுவதற்குப் பதில் இவை இனி மனிதனைக் கண்டு பயப்படலாம். காரணம், அமெரிக்கா வின் கோடீஸ்வர முதலாளிகள் இந்த அஸ்ரரோய்ட்கள் மீது கண் வைத்து விட்டனர்.

அஸ்ரரோய்ட்களிலிருந்து பிளாட் டினம், தங்கம் போன்ற அரிய உலோ கங்களை வெட்டி எடுத்து வரும் நோக்கில், பிரபல ஹொலிவுட் படத் தயாரிப்பாளரும் கோடீஸ்வரருமான ஜேம்ஸ் கமரூன், கூகுள் நிறுவனர் லோரி பேஜ், கூகுள் தலைவர் எரிக் "மிட் முதலானோர் முதலீடு செய்து Planetary Resources என்னும் நிறுவனத்தைத் தொடங்கியுள்ளனர்.

இரண்டு கிலோ மீற்றர் குறுக்களவு கொண்ட "3554 அமுன்" எனப்படும் அஸ்ரரோய்ட்டில் இரும்பு மற்றும் நிக் கல் உலோகங்கள் 8 லட்சம் கோடி டொலர் மதிப்புக்கு உள்ளன.






கோபோல்ட் 6 லட்சம் கோடி டொலர். பிளாட்டினம், தங்கம் ஆகிய உலோ கங்களின் மதிப்பு மேலும் 6 இலட்சம் கோடி டொலர் என்று ஜோன் லூயிஸ் என்ற நிபுணர் கூறுகிறார்.

இந்த அமெரிக்க நிறுவனத்தினர் அஸ்ரரோய்ட்களிலிருந்து தண்ணீரையும் பெறுவதற்குத் திட்டமிட்டுள்ளனர். இத்தண்ணீரிலிருந்து ஒட்சிசனையும் ஐதரசனையும் தனித்தனியே பிரித்து அவற்றைத் திரவமாக்கி விண்வெளி யிலேயே பெரிய தாங்கிகளில் சேமித்து வைக்கவும் திட்டம் உள்ளது. உயரே செல்கின்ற ரொக்கெற்களுக்கு அவற்றை எரிபொருட்களாக விலைக்கு விற்க முடியும்.

செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுப் பாதைக்கும் வியாழன் கிரகத்தின் சுற்றுப்பாதைக்கும் இடையே அஸ்ர ரோய்ட் மண்டலம் உள்ளது. அங்கு இலட்சோப லட்சம் அஸ்ரரோய்ட்கள் உள்ளன. அணிவகுத்துச் செல்லும் இராணுவ வீரர்கள் போல இவை அனைத்தும் ஓர் ஒழுங்குடன் அணி வகுத்துச் செல்பவையாக சூரியனைச் சுற்றுகின்றன.

இந்த மண்டலத்திலிருந்து பல ஆயிரம் அஸ்ரரோய்ட்கள் தனியே கிளம்பி பூமிக்கு அருகே வந்து செல் கின்றன. இவ்விதமான அஸ்ரரோய்ட் கள் மீது தான் கவனம் செலுத்தப் படும்.

சந்திரனுக்குச் சென்று வருவதை விட அஸ்ரரோய்ட்டுக்குச் சென்று வருவது சுலபமானதே. சந்திரனுக்கும் அத்துடன் கிரகங்களுக்கும் ஈர்ப்பு சக்தி உண்டு. ஆகவே அவற்றில் போய் இறங்கினால் ஈர்ப்பு சக்தி காரணமாக அங்கிருந்து எளிதில் உயரே கிளம்ப முடியாது. ரொக்கெற் உயரே கிளம்புவதற்கு நிறைய எரி பொருள் தேவைப்படும்.

அவற்றுடன் ஒப்பிட்டால் அஸ்ர ரோய்ட்களில் போய் இறங்குவதும் அங்கிருந்து கிளம்புவதும் எளிது. வடிவில் அவை சிறியவை என்பதால் ஈர்ப்பு சக்தி மிகக் குறைவாக இருக் கும். ரொக்கெற் உயரே கிளம்புவதற்கு கொஞ்சம் எரிபொருள் இருந்தாலும் போதும்.

பூமியில் பல நூறு தொன் எடை கொண்ட ஒரு பொருளின் எடை அஸ்ரரோய்ட் ஒன்றில் மிக அற்ப அளவில் இருக்கும்.ஆகவே அங்கிருந்து அரிய உலோகங்கள் அடங்கிய பாறையை எடுத்துக் கொண்டு உயரே கிளம்புவது எளிது. சொல்லப் போனால் அவற்றை பூமியில் கொண்டு வந்து இறக்குவது தான் மிகக் கடினமான வேலையாக இருக்கும்.

இத்திட்டத்தை மேற்கொள் வோர் முதலில் தகுந்த அஸ்ர ரோய்ட்களைத் தேர்ந்தெடுக்க பூமிக்கு மேலே பல தொலை நோக்கிகளைப் பறக்க விடு வர். இது இரண்டு ஆண்டுகளில் சாத்திய மாகி விடும் என்று கருதப்படுகிறது.

அடுத்த கட்டப் பணி அஸ்ரரோய்ட் களுக்கு அனுப்புவதற் காகத் தானி யங்கி ரோபோக் களை உருவாக்குவ தாகும். மூன்றாவது கட்டத்தில் தான் அங்கு ரோபோக்களை இறக்கி அரிய உலோகங்கள் அடங்கிய பாறைகள் வெட்டி எடுக்கப்படும்.

அஸ்ரரோய்ட்களிலிருந்து பிளாட்டினம், தங்கம் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த உலோ கங்களை எடுத்து வருவது என்பது நல்ல திட்டம் தான். ஆனால் இப்படி அஸ்ரரோய்ட் களிலிருந்து ஏராளமான அளவில் பிளாட்டினம், தங்கம் ஆகியவை பூமிக்கு வரும் போது உலக சந்தையில் இவற்றின் விலை ஒரேயடியாகச் சரிந்து போக வாய்ப்புள்ளது.

# தேசிய ஒற்றுமையில் களங்கம்; ஊடகங்கள் இடமளிக்கக்கூடாது

### ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)
ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டின்போது இலங்கை ஊடகங்களின் செயற்பாடு பாராட்டும் வகையில் இருந்ததாக ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாராட்டுத் தெரிவித்தார்.

இதேவேளை தேசிய ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய சாதி, மத, பிரதேச பேதங்களை ஏற்படுத்தும் செய்திகளை ஊடகங்கள் வெளியிடுவதை தவிர்த்துக்கொள்ளவேண்டுமென்று ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

அலரி மாளிகையில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் தலைவர்களை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து கலந்துரையாடிய போது அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையின் அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் தலைவர்கள் பங்கேற்றனர். ஜனாதிபதி தொடர்ந்து கூறுகையில்.

பரஸ்பர நம்பிக்கையையும் நட்புறவையும் மக்களிடையே ஏற்படுத்தக்கூடிய செய்திகளை வெளியிடுவது மிகவும் அவசியமானதாகும்.

விசேடமாக பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்கள் மேற்கொள்ளும் வன்முறைகள் பற்றிய படங்களுடனான சிறிய செய்திகளை கூட பெரிதுபடுத்தி வெளியிடுவதை தவிர்க்கவேண்டும் இவ்விதம் செய்வது பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களின் வன்முறைகளுக்கு மதிப்பளிக்கக்கூடியதாக அமையலாம்.

சிங்களவர்களாக இருந்தாலும் தமிழர்கள் அல்லது முஸ்லிம்களாக இருந்தாலும் அனைத்து விதமான இனவாதத்தையும் நாம் நிராகரிக்கிறோம். இலங்கையில் எந்தவித இனவாத சக்திகளும் தலைதூக்க நாம் இடமளிக்க மாட்டோம்.

இலங்கையின் முன்னேற்றத்தையும் அதன் நல்லிணக்க நடவடிக்கைகளையும் இனவாதம் சீர்குலைத்துவிடுவதன் காரணமாக வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகள், பத்திரிகைகள் ஆகியவற்றின் ஊடாக எந்தவிதத்திலும் இனவாத ஆக்கக்கூறுகள் தலைதூக்க இடமளிக்க வேண்டாமென அனைத்து ஊடக தலைவர்களையும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இலங்கையிலிருந்து பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் இலங்கை வாழ் மக்கள் அனைவரும் சமாதானமாகவும் ஐக்கியமாகவும் வாழ்வதையே தான் பார்க்க விரும்புவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# பொன்சேகா விடுதலையாக சர்வதேசமே காரணம்



(கொழும்பு)
சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை அரசாங்கம் விடுதலை செய்யவுள்ளதாக நவ சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திரா தெரிவித்துள்ளார்.

இதனைத்தவிர சரத். பொன்சேகாவின் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் கோரிக்கையின் அடிப்படையிலேயே சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுகிறார் என்ற அரசாங்கத்தின் கருத்து வெறும் ஏமாற்றாகும் என்றும் மனமேந்திரா குறிப்பிட்டுள்ளார். சரத் பொன்சேகா, கைது செய்யப்பட்ட தினத்திலிருந்தே அவரை சர்வதேசம் அரசியல் கைதியாகவே பார்த்தது.

எனவே இதில் டிரான் அலஸின் உதவி காரணமாகவே சரத பொன்சேகா விடுதலையாகிறார் என்ற தகவல் பொய்யானது என்றும் மனமேந்திரா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட வேண்டுமானால் அவரின் மனைவி அல்லது உறவினர்கள் கோரிக்கை விடுக்க வேண்டும் என்று டிரான் அலஸுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி கூறியிருந்தமையையும் மன மேந்திரா சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐ.தே.க இடைத்தரகர் என்றாலும் அரசிடமிருந்து நேரடி பதில் வேண்டும்

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு



(கொழும்பு)
நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இடம்பெறச் செய்வதற்கு முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நிலையில், தெரிவுக்குழுவுக்குச் செல்வது குறித்து பல மட்டங்களிலும் சிந்திக்கவேண்டியுள்ளது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் அங்கம்பெற வைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இடைத்தரகராகச் செயற்பட்டாலும் தமிழ்க் கூட்டமைப்பு அரசிடமிருந்து நேரடியானதொரு பதிலையே எதிர்பார்க்கின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, தெரிவுக்குழுவுக்குத் தமது பிரதிநிதிகளின் பெயர்களைப் பரிந்துரைப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தெரிவுக்குழு விவகாரம் தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அரசுக்குமிடையில் பேச்சுகள் இடம்பெற்று வந்தாலும் அரசின் பதில் என்ன என்பது எமக்குத் தெரியாது. ஐக்கிய தேசியக் கட்சி தற்போதுதான் பேச்சை ஆரம்பித்துள்ளது. எனவே, எடுத்த எடுப்பில் எம்மால் இறுதிக்கட்டத்திற்குச் செல்லமுடியாது. பலமட்டங்களிலும் சிந்திக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நிபந்தனைகளுடன் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்பதற்குத் தாம் தயார் எனக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீதவான் இல்லம் மீது கைக்குண்டுத் தாக்குதல்

(கொழும்பு)
மாறவில நீதவானின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இவர்களைக் கண்டுபிடிப்பதற்கான தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் மூன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறினார்.

மோட்டார் சைக்கிளொன்றில் சென்ற இருவர் நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# புலிகளின் சட்ட வகுப்பாளர் புனர்வாழ்வு பெறவுள்ளார்

(கொழும்பு)
புலிகளின் சட்ட வகுப்பாளராக கடமையாற்றிய நபருக்கு புனர்வாழ்வு அளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புலிகளின் முன்னாள் சட்ட வகுப்பாளரான கே.பி. லங்கேஸ்வரன் என்பவருக்கு புனர்வாழ்வு அளிக்குமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் சுனில் ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

லங்கேஸ்வரன் புலிகளின் சட்டத்தரணியாகவும், நீதவானாகவும் கடமையாற்றியுள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையில் புலிகளின் சட்ட வகுப்பாளராக லங்கேஸ்வரன் கடமையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட லங்கேஸ்வரனை புலிகள் பலவந்தமாக இயக்கத்தில் இணைத்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை சட்டக் கல்லூரியில் கல்வி பயின்ற சந்தர்ப்பத்தில் லங்கேஸ்வரனை புலிகள் பலவந்தமாக இணைத்துக் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

# தேசப்பற்று நன்மதிப்பைக் காப்பதற்கு அமைச்சர் விமல் பதவி விலக வேண்டும்

### கோரிக்கை விடுக்கிறது ஐ.தே.க



(கொழும்பு)
வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தனது வார்த்தைக்கு மதிப்பளித்து பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஒபாமா நிர்வாகம் இலங்கைப் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

ராஜபக்ஷ அரசாங்கம் அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்பட்டால் பதவியை துறக்க நேரிடும் என விமல் வீரவன்ச பகிரங்க எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின், இலங்கைப் பிரதிநிதிகள் குழு அமெரிக்காவிற்கு விஜயம் செய்ய வேண்டுமென ஒபாமா நிர்வாகம் அறிவித்திருந்தது.

இந்த அழுத்தம் காரணமாகவே வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளனர்.

நாட்டின் கிராமப்புற பெரும்பான்மை மக்களுக்கு ஒரு கருத்தையும், சர்வதேச சமூகத்திற்கு மற்றுமொரு கருத்தையும் அரசாங்கம் வெளியிட்டு வருகின்றது.

விமல் வீரவன்ச பதவி விலகத் தவறினால் அவரது தேசப்பற்றாளர் என்ற நன்மதிப்பிற்கு பாரியளவில் களங்கம் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யுத்த வெற்றிக் கொண்டாட்டம் ஐ.தே.கட்சி புறக்கணிக்காது

(கொழும்பு)
யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களைப் புறக்கணிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் எந்தவொரு உறுப்பினரும் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்க முடியும் எனவும், அதற்கு எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை எனவும் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகள், நாளையதினம் கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது.


யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை உத்தியோகபூர்வமாக நிராகரிக்கும் திட்டம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய அரச நிகழ்வுகளைப் போன்றே சில உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளக் கூடும் எனவும் சிலர் இதில் கலந்து கொள்ளாமல் இருக்கக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இதுவரையில் எந்தவிதமான உத்தியோகபூர்வமான தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளில் ஐக்கிய தேசியக் கட்சி பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆதிக்கத் தேசியம்



தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையான பலவீனங்களென "மூர்க்கத்தனமான, நேர்மையற்ற நியாயப்படுத்தல்களைத் தவிர்ப்போமாயின் - இன்று ஓரளவேனும் பலராலும் ஏற்கப்படுவன, புலிகளின் சனநாயகமின்மை, முற்றிலும் இராணுவத் தன்மையுடைய போராட்ட அணுகுமுறை என்பனவாகும்.

அதேவேளை, அவற்றைத் தோற்றுவித்து உருவாக்குவதில் தமிழரசுக் கட்சிக்கும் அதன் மறு அவதாரமான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கும் ஒரு பங்கு இருந்தது. தமிழ்த் தேசிய அரசியலின் முக்கிய அடையாளங்களாக இருந்து வந்துள்ள "தனிப்பெரும் தலைவர்" "ஏகப் பிரதிநிதித்துவம்" "இன ஒற்றுமை" என்ற கருத்தாக்கங்கள் விடுதலைப் புலிகளின் தோற்றத்திற்கு மிக முந்தியன.

• மாற்று அரசியல் ஒன்று உருவாவதற்கெதிராகப் பழமைவாதம் "தமிழர் ஒற்றுமை" என்ற கருவியைப் பலவாறாகவும் பயன்படுத்தி வந்துள்ளது. அதன் விளைவாக, மக்கள் அரசியல் என்ற கருத்தாக்கம் தமிழ் அரசியற் பரப்பில் வேரூன்றத் தவறியது. அதை விடவும் சாதி, பால், பிரதேசம் என்பன சார்ந்த முரண்பாடுகளும் ஏற்றத் தாழ்வுகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

அப் பிரச்சினைகளை இல்லை என மறுப்பதுடன் அவற்றைப் பற்றிப் பேசுவது தமிழ் மக்களைப் பிளவு படுத்தும் என வாதிப்பதும் தமிழ்த் தேசியவாதிகட்கு வழமையாகிவிட்டது.

அவற்றை மறுத்ததால் அவை இல்லாமற் போய்விடவில்லை. இன்று அவை முன்பு நாம் அறிந்திருந்த அதே யளவு உக்கிரத்துடன் தொடருவதை நாம் அறிவோம்.

அதைவிட முக்கியமாகச் சுரண்டும் வர்க்கத்தின் தேசியத் தன்மை எத்தகையது என்பதைப் போருக்கு பிந்திய சூழல் நமக்குத் தெளிவாக்கியுள்ளது. வசதிபடைத்த யாரெவரெல்லாம் புலிகள் வென்று கொண்டிருப்பதாக நம்பிப் புலிகளுக்குச் சார்பாக நடந்து கொண்டார்களோ அவர்களெல்லாரும் இப்போது ஆட்சியாளர்களுடன் தம்மை நெருங்கிக் கொண்டிருப்பதை நாம் காணுகிறோம்...

தமிழ்த் தேசியம் இன்று ஒரு முட்டுச் சந்தில் வந்து நிற்கிறது என்பதை நாம் உணராவிட்டால், 2009 மே 17 வரை, விடுதலைப் புலிகள் தோற்க மாட்டார்கள் என்று நம்பியவர்களையும் விட மோசமான மனநிலையில் இருப்போராவோம். அந்த அவலத்துக்கான காரணங்களை விடுதலைப் புலிகளுக்குள் மட்டும் தேடுவோமாயின், நாம் ஒரு அரசியல் அந்தகாரத்துக்குள் நமது தேடலை நடத்துவோராவோம்.

தமிழ்த் தேசியம் தனக்குள் முஸ்லிம்களையும் மலையகத் தமிழரையும் உள்ளடக்க முற்பட்ட நோக்கமும் அத் தேசிய இனங்களது இருப்பும் நலன்களும் பற்றிக் கொண்டிருந்த பார்வைகளும் தேசியம் பற்றிய புரிதலின் போதாமையின் விளைவானவையாக அல்லாது, ஒரு மேலாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடுகள் என்பது என்னுடைய கருத்து.

அச் சிந்தனையின் பயனாகவே இன்றுவரை தமிழ்த் தேசியம் தன்னை ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனமாக அடையாளங் காணுவதைத் தவிர்த்து வந்துள்ளது என நினைக்கிறேன். அத்துடன் இன்னமும் இஸ்ரேலை முன் மாதிரியாக நோக்குகிற ஒரு போக்குத் தொடர்வதற்கும் அதையே விளக்கமாகக் காணுகிறேன்.

- சி.சிவசேகரம்

# குளிர்பானமா? வேண்டாம்!

இப்போது, எந்த விசேஷமாக இருந்தாலும் அங்கே குளிர்பானங்கள் முக்கிய இடம் பிடித்துவிடுகின்றன. கலர் கலராக ஒளிரும் அந்த குளிர்பானங்களை வாங்கிக் கொடுப்பதிலும் குடிப்பதிலும் தனிப்பெருமை இருப்பதாக பலரும் நினை[illegible]ார்கள். இன்னும் சிலர் இதைவிட பல படி மேலே போய் சாப்பிடும்போது குடிநீருக்[illegible]லாக இந்தக் குளிர்பானங்களையே பயன்படுத்துகின்றனர்.

இப்படி, தொடர்ந்து கலர் கலராக குளிர்பானங்கள் வயிற்றுக்குள் தள்ளி வந்தால் உங்கள் உடல் எலும்புகள் பலவீனமடைந்துவிடும் என்று எச்சரிக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். கிரீஸ் நாட்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் இது உண்மை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.


அடிக்கடி குடித்து வரும் இந்த குளிர் பானங்களின் அளவு மிகவும் அதிகரித்தால் உடல் உறுப்புகள் கூட செயலிழக்கலாம், நீரிழிவு நோயும் ஏற்படலாம் என்பதும் அந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

குளிர்பானங்கள் உடலில் எந்தவித மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பது பற்றி அந்த ஆய்வாளர்கள் கூறும்போது, குளுக்கோஸ், பிரக்டோஸ், காபின் போன்ற மூலக்கூறுகள் குளிர்பானங்களில் அதிக அளவில் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்ட குளிர்பானங்களை அதிகம் குடித்தால் உடலில் உள்ள பொட்டாசியத்தின் அளவு குறைந்துபோய் விடுகிறது. அதன்காரணமாக உடலின் தசைகள் சக்தி இழந்துவிடுகின்றன.



மேலும், சிறுநீரகத்திற்கு அதிக வேலை கொடுத்து அங்கேயும் பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுகின்றன. அத்துடன், உடல் பருமனையும் ஏற்படுத்தி இல்லாத நோய்களையும் வரவழைத்துவிடுகின்றன என்று தெரிவித்துள்ள்னர்.

# தெரிந்து கொள்வோம்!



- 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் திருவிழா எது தெரியுமா?

**கும்பமேளா**

- நில அதிர்வைப் பற்றிய படிப்புக்கு என்ன பெயர் தெரியுமா?

**சீஸ்மோலொஜி** (Seismology)

- புராதனக் காலத்தில் எழுதப்பட்ட புத்த இலக்கியங்கள் இன்றளவும் பர்மாவிலும் தாய்லாந்திலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவை எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்று தெரியுமா?

**பாலி மொழியில்**

- ஓர் ஆரோக்கியமான குழந்தையின் உயரம் பிறக்கும் போது எவ்வளவு இருக்க வேண்டும் என்று தெரியுமா?

**56 செ.மீ.**

- Tocopherol என்று அழைக்கப்படும் விற்றமின் எது தெரியுமா?

**விற்றமின்** E.

- கார்களைப் பதிவு செய்து பதிவு எண் பெறும் முறையை முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது தெரியுமா?

**ஸ்வீடன்.**

# கசந்தாலும் உண்மை இதுதான்!

"தனித் தமிழ் ஈழம் அமைந்திட, ஐ.நா மன்றம் வாயிலாக இலங்கையில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்" என்ற குரல் இப்போது ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. 27 ஆண்டுகள் கழித்து, மீண்டும் டெசோ (தமிழ் ஈழ ஆதர வாளர் அமைப்பு) அமைப்பைக் கையில் எடுத்திருக்கும் தி.மு.க தலைவர் கருணாநிதி, "வாக்கெடுப்பின்போது, புலம்பெயர் இலங்கைத் தமிழர்களையும் அனுமதிக்கவேண்டும்." என்று சொல்லியிருக்கிறார்.

இதெல்லாம் சாத்தியமா? இதற்கு தமிழ்நாட்டு மக்கள் எவ்வளவு தூரம் ஆதரவு அளிப்பார்கள்? தமிழகத்தில் வாக்காளர்கள் இதுவரை ஈழப் பிரச்சினையை வைத்து எந்தத் தேர்தலிலும் வாக்களித்ததில்லை. ஈழத் தமிழர் விடுதலைக்காக குரல் கொடுக்கும் கட்சிகளை ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவதில்லை. சொல்லப்போனால், இருந்த இடம் தெரியாத அளவுக்கு இக்கட்சிகளை ஒதுக்கி விடுகிறார்கள். இதற்கு, நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட வைகோவே உதாரணம்.

சரி, ஈழத்தில் வாக்கெடுப்பு நடத்தினால் வெற்றி கிடைத்துவிடுமா? தற்போதைய சூழலில், இதற்குப் பதிலளிப்பது சிரமமான ஒன்றாகும்.

இலங்கையின் 25 மாவட்டங்களில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம் ஆகிய 9 மாவட்டங்கள் தமிழ் பேசும் மக்கள் அதிகம் வாழும் நிலங்கள். மீதமுள்ள 16 மாவட்டங்கள் சிங்கள மக்கள் அதிகம் வாழும் நிலங்கள்.

நுவரெலியா மாவட்டத்தில் 52 வீதம் தமிழர்கள் இருக்கிறார்கள். அதேபோல் கொழும்பு மாவட்டத்தில் 40, 45 வீதம் அளவில் தமிழர்களும், முஸ்லிம்களுமாக இருக்கிறார்கள். இந்த இரண்டு மாவட்டங்களைத் தவிர, தெற்கு மாவட்டங்களில் தமிழர்களுடைய எண்ணிக்கை குறைவு.



மட்டக்களப்பில்தான் 75 வீதம் தமிழர்கள் வசிக்கிறார்கள். திருகோணமலை மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு சிங்களவர்கள், மூன்றில் ஒரு பங்கு முஸ்லிம்கள், மூன்றில் ஒரு பங்கு தமிழர்கள் எனச்சமமாக வசிக்கிறார்கள்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் ஒட்டுமொத்த நிலத்தையும் கணக்கிட்டால், இன்றைய நிலையில், தமிழர்கள் சிங்களவர் முஸ்லிம்கள் சமமான எண்ணிக்கையிலேயே இருக்கின்றனர். இலங்கையிலிருந்து ஈழத்தை தனியாகப் பிரிப்பதுதான் வாக்கெடுப்பின் நோக்கம் என்றால், வாக்கெடுப்பு நடத்தப்படும்போது, தாங்கள் வாழக்கூடிய நிலத்தை தாயகமாகக் கொண்ட அனைவரும் வாக்களிப்பார்கள். அந்த வகையில் பார்த்தால், சிங்களவர்களும், இஸ்லாமியர்களும் தனி ஈழத்துக்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டார்கள். எனவே வெற்றி என்பது நிச்சயிக்கப்படாத ஒன்றாகவே இருக்கும்.

இன்னொரு முக்கியமான விஷயம், வாக்கெடுப்புக் கோருபவர்கள் வெற்றிக்கு உதாரணமாக தெற்கு சூடான், கிழக்குத் திமோர், கொசோவா, பொஸ்னியா ஆகிய நாடுகளை உதாரணம் காட்டுவதுதான். இதன் பின்னணி எப்படிப்பட்டது என்பதை முழுமையாக உணர்ந்தவர்கள் இவ்வாறு பேசமாட்டார்கள்.

மேற்கண்ட நாடுகள் அனைத்தும் கிறிஸ்தவ, இஸ்லாமிய பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டவை. சூடானில், முஸ்லிம் மேலாதிக்கத்தில் அவதிப்பட்டு வந்த தெற்கத்திய கிறிஸ்தவர்களை விடுதலை பெற வைப்பதற்காக கொண்டு வரப்பட்டதுதான் தெற்கு சூடான். அதேபோல், இந்தோனேஷியாவின் முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்து, கிறிஸ்தவ மக்களைப் பிரித்தெடுப்பதற்காக உருவாக்கப்பட்டது தான் கிழக்குத் திமோர்.

கொசோவாவும், பொஸ்னியாவும் கிறிஸ்தவ ஆதிக்கத்திலிருந்து இஸ்லாமியர்களை விடுவிப்பதற்காக கொண்டுவரப்பட்டவை. இந்த நாடுகள் உருவானதன் பின்னணியில் மேற்குலக நாடுகள் இருந்தன.

எனவே, இலங்கைத் தீவில் அப்படிப்பட்ட அழுத்தம் வரவேண்டும் என்றால், "ஈழத் தமிழர்கள் இந்துக்கள்" என்கிற அடிப்படையில் இந்தியாதான் குரல் எழுப்பவேண்டும். இந்தியா அப்படி எழுப்புமா என்பது சந்தேகம். இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் வர, இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன.

இதனிடையே எதிர்பாராதவிதமாக வாக்கெடுப்புக் கேட்டு இந்தியா குரல் எழுப்பினால், "அன்றைய ஐ.நா. தீர்மானத்தை ஏற்று, முதலில் காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்திவிட்டு, அதன்பிறகு இலங்கைக்கு ஐ.நா. வழி வாருங்கள்" என்று இலங்கை பதிலடி கொடுக்கக்கூடும்!

கியுபெக் மாகாணம் கனடாவில் இருந்து பிரிந்து போகவேண்டுமா என வாக்கெடுப்பு நடத்தியபொழுது, ஆதரவாக 49 வீதமும் எதிர்த்து 51 வீதமும் வாக்களித்ததால், கியுபெக் மாகாணம் தனி நாடாவதைக் கைவிடவேண்டி வந்தது வரலாறு.

- நன்றி: இணையும்

# ஜமுனா ராணி

"என் ஆசையும் என் நேசமும் ரத்த பாசத்தினால் ஏங்குவதை பாராயடா"

"செந்தமிழ் தேன் மொழியாள்"

"காமுகர் நெஞ்சில் நீதியில்லை"

"அக்காளுக்கு வளைகாப்பு அத்தான் முகத்திலே புன்சிரிப்பு"

"காளை வயசு கட்டான சைசு களங்கமில்லா மனசு"

"சித்திரத்தில் பெண் எழுதி சீர்படுத்தும் மானுடமே ஜீவனுள்ள பெண்ணினத்தை .வாழவிட மாட்டாயா"

"பாட்டொன்று கேட்டேன் பரவசமானேன் நான் அதை பாடவில்லை"

"ஆதி மனிதன் காதலுக்குப் பின் அடுத்த காதல் இது தான்"

"நெஞ்சினிலே நினைவு முகம் நிலவிலும் தெரி-வதும் அழகு முகம் ஆசைமுகம்"

"எனக்காகவா நான் உனக்காகவா என்னைக் காணவா என்னில் உன்னைக் காணவா வா வா"



இந்த கீதங்களில் குழையும் ஜமுனா ராணி. இது ஒரு வகை.

இன்னொரு பாணி பாடல்கள் உண்டு.

அன்பு எங்கே படத்தில் "மேலே பறக்கும் ராக்கெட்டு. மின்னல் பூச்சி ஜாக்கெட்டு" உத்தம புத்திரனில் "யாரடி நீ மோகினி" பார்ட்டில் "விந்தையான வேந்தனே!" குமுதம் படத்தில் "மாமா, மாமா மாமா" மரகதத்தில் சந்திரபாபுவுடன் "குங்குமப் பூவே, கொஞ்சும்புறாவே" பல வருடங்கள் ஸ்டுடியோ வாசலையே மிதிக்காமல் இருந்த ஜமுனா ராணிக்கு 1987இல் "நாயகன்" படத்தில் "நான் சிரித்தால் தீபாவளி" பாடலுக்காக இளையராஜா மூலம் வாய்ப்பு கிடைத்தது!

ஜமுனா ராணி அந்தக்கால இசை அமைப்பாளர்கள் இசையில் பாடிய அனுபவம் பற்றி சொன்ன வி'யங்கள்:

**1.** ஜி. ராமநாத ஐயர் சொல்கிற சங்கதிகள், பாடுகிறவர் குரலில் வந்தே தீரவேண்டும். அந்த சங்கதிகள் வராமல் பின்னணிப் பாடகரை விடவே மாட்டார்.

**2.** மாமா கே.வி.மகாதேவன் மெட்டின் உருவத்தை அழகாக கோடி காட்டி விடுவார். "உன் கற்பனைக்கு ஏற்றவாறு உணர்ச்சி, பாவத்துடன் பாடி, தேவையான இடத்தில் சங்கதிகள் நீயே போட்டுக்கொள்" என்று பாடுபவருக்கு முழு சுதந்திரம் கொடுக்கக்கூடியவர்!

**3.** விஸ்வநாதன் -ராமமூர்த்தி எப்படி சொல்லிக் கொடுக்கிரார்களோ அப்படியே தான் அச்சர சுத்தமாக பாடியே தீரவேண்டும். பாட்டின் ஒவ்வொரு சொல்லும் தெளிவாக ஒலிக்கவேண்டும். இதில் இசை அமைக்கும் இருவருமே கவனமாக இருப்பார்கள். அப்படிப் பாடலைன்னா ஒலிப்பதிவுக்கூடத்திலேயே பாடுபவரின் மானம் கப்பலேறிவிடும். "பாடத் தெரி யாம ப்ளேபேக் சிங்கர்னு சொல்லிக்கிட்டு ஏன் பாடவர்றீங்க" - இப்படி எம்.எஸ்.வி கேட்டு விடுவார். அதனால் பயந்து கொண்டே தான் பாடுவோம்.

## கண்டுபிடிப்புகள்

நாம் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் நிகழ்வுகள்தான் சிலரது பார்வையில், முக்கிய கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. அப்படிப்பட்ட சில தருணங்களும் அதன் விளைவாக அவர்கள் கண்டுபிடித்த விஷயங்களும்.....

ஆர்க்கிமிடிஸ் குளியலறையில் நீர் நிரம்பிய தொட்டியில் குளித்துக் கொண்டிருக்கும் போதுதான், ஆர்க்கிமிடிஸ் தத்துவத்தைக் கண்டுபிடித்தார்.

நியூட்டன் அப்பிள் மரத்தின் கீழ் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும்போதுதான் பழம் விழுவதைப் பார்த்து புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார்.

வோல்ட் டிஸ்னி ஓர் எலியின் சேட்டையை கண்டதன் விளைவாகத்தான் மிக்கிமவுஸ் கதாபாத்திரத்தைப் படைத்தார்.

ஐஸ் க்ரீம் போட்டுக் கொடுப்பதற்கான கோப்பைகள் முடிந்தபோது, வியாபாரி ஒருவரின் எண்ணத்தில் உருவானதுதான் கோண் ஐஸ்க்ரீம் யுக்தி.

## யதார்த்தத்திற்குப் பொருத்தமானது?

தமிழீழம் - தனிநாடு என்ற விவாதத்திற்குரிய விடயத்தைப் பார்க்கலாம்.

தொடக்கத்திலிருந்தே இந்தக் கோரிக்கையையும் பிரகடனத்தையும் பொருத்தமற்ற ஒரு விடயம் எனவும் அரசியலில் கையாளக் கடினமான விவகாரம் இது எனவும் இடதுசாரிகள் இதைப் பற்றிக் கூறி வந்திருக்கின்றனர். இது இனவாத சக்திகளுக்கு மேலும் வாய்ப்பை அளிக்கும் ஒன்று எனவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தமிழீழம் அல்லது ஈழ விடுதலை என்ற அரசியற் பிரகடனத்தோடு போராடிய ஆயுதந்தாங்கிய விடுதலை இயக்கங்களிற் பலவும் கூட இன்று இந்தக் கோஷத்தை விட்டு விலகியுள்ளன. அல்லது தங்களின் கடந்த காலப் படிப்பினைகளைக் கொண்டு புதிய நோக்கில் சிந்திக்க முற்படுகின்றன.

ஆகவே, இவர்கள் நடைமுறைக்கும் யதார்த்தத்துக்கும் பொருத்தமான ஒரு அணுகுமுறையைக் குறித்துச் சிந்திக்க வேண்டும் என்கிறார்கள். அது தமிழீழம் என்பதாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், தமிழ் பேசும் மக்களுடைய அரசியல் உரிமையைப் பேணும் அடிப்படைகளைக் கொண்ட ஓர் ஏற்பாடு என்கின்றனர்.

இந்த ஏற்பாட்டினை சர்வதேச - பிராந்திய சக்திகள் புறக்கணிக்க முடியாத அளவுக்கு அது உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கும். அதேவேளை அது தமிழ் பேசும் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாஷைகளையும் தேவை-களையும் பூர்த்தி செய்வதாக இருக்கும் என்கின்றனர்.

இத்தகைய ஒரு தேர்வே இன்று பொருத்தமானது. இத்தகைய தீர்வுப் பிரகடனத்தை தமிழ்பேசும் மக்களும் நிராகரிக்க முடியாது. சிங்கள ஆதிக்க சக்திகளும் நிராகரிக்க முடியாது. சிங்கள முற்போக்கு சக்திகளும் சிங்கள மக்களும் நிராகரிக்கவியலாது. பிராந்திய சக்திகளும் சர்வதேச சக்திகளும் நிராகரிக்கவே முடியாது என்கின்றனர் இவர்கள்...

இங்கே - இந்தியா, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் நலன்களே தொழிற்படுகின்றன. இவை எல்லாமே ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. இவை எல்லாமே தமிழீழம் என்பதற்கு எதிர்நிலையைக் கொண்டன. பதிலாக தமிழர்களுக்கு - தமிழ்பேசும் மக்கள் என்ற பொது அடிப்படையில் உரிமை-களை வழங்க வேண்டும் என்பதில் உடன்பட்டிருக்கின்றன.



எனவே இந்த யதார்த்தத்தை நாம் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவேதான் சர்வதேச சமூகம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் நிராகரிக்க முடியாத - அவர்களால் எதிர்க்க முடியாத ஒரு கோரிக்கையையும் அரச-ியல் நிலைப்பாட்டையும் தமிழ் பேசும் மக்கள் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது. இதுவே யதார்த்தத்திற்குப் பொருத்தமானது.

இன்றைய இலங்கையில், தமிழர் அரசியலை தமிழ் பேசும் மக்களின் அரசியல் என்றே ஏற்றுக் கொள்வது இதில் முதன்மையானது. ஏனெனில் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளைப் பற்றிப் பேசா-மலும் அதைச் சிந்திக்காமலும் ஒரு போதுமே தமிழர் அரசியலில் தீர்வைக் காணமுடியாது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளின் நிலைமையைப் பற்றிப் பேசினாலும் அதில் நிச்சயமாக முஸ்லிம் மக்களின் அரசியலும் அவர்களுடைய பிரச்சினைகளும் கலந்தே இருக்கின்றன.

ஆகவே, இதைத் தவிர்த்துவிட்டு தமிழர்கள் தங்களுடைய அரசியலைப் பற்றிப் பேசவே முடியாது. இது அடிப்படையானது என்பதை முதலில் விளங்கிக் கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

இந்த ஏற்றுக்கொள்ளலிலிருந்தும் புரிந்து கொள்ளலிலிருந்துமே தமிழ் பேசும் சமூகங்கள் தங்களுடைய அரசியற் பயணத்தை மேற்கொள்ள முடியும்.

**- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்.**

## தனித்து முன்னேற முடியாது!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் சமூகத்துக்கு என்ன செய்வார்கள் என்பதே இங்கே இருக்கும் முக்கியமான கேள்வி.

தமிழ்த்தேசியம் சுயநிர்ணயம் எனப் பிரபாகரன் பேசியபோது 25,000 பயிற்றப்பட்ட புலிகளும் கிட்டத்தட்ட 6 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களும் இருந்தன. ஆனால் இறுதியில் நடந்தது எல்லோருக்கும் தெரியும். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் உங்கள் வார்த்தையை கேட்காது என்பது உங்களுக்கே தெரியும். கிடைக்காத விடயங்களை பேசாமல் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைப் பேசுங்கள்.

தற்போது உங்கள் முன்னே இருக்கும் முக்கிய மூன்று விடயங்கள்:-

**1)** வன்னிமக்களும் அவர்களின் புனர்வாழ்வும்.

சகல வாழ்வாதாரங்களும் அழிக்கப்பட்ட நிலையில் உள்ளது இந்த வன்னிமாவட்டம். போர் காலத்தில் மட்டுமல்ல போருக்கு முந்திய விடுதலைப்புலிகள் காலத்திலும் மக்கள் கையேந்தித்தான் வாழ்ந்தார்கள். இலங்கை அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும் உணவளித்தன. இந்த நிலைதான் பலவருடங்களாக நீடித்தது. நிச்சயமாக யுத்தத்தால் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. இதை சீர்படுத்துவது உங்கள் கடமை.



**2)** தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப்புலி இளைஞர்களை விடுவித்து இவர்களை தொழில் பயிற்சியில் ஈடுபடுத்த வேண்டும். இவர்கள் தமிழ்சமூகத்தின் விடுதலைக்காக தூயசிந்தையோடு உயிர்கொடுக்கப் போனவர்கள். இந்த இளைஞர்கள் தற்பொழுது அரசியலில் மட்டும் அனாதையில்லை. சகல விதத்திலும் அனாதைகள்.

பிழையாக வழி நடத்தப்பட்டது மட்டுமன்றி எதிர்காலத்தைப் பற்றிக் கூட நினைக்க முடியா-மல் இருக்கிறார்கள். இவர்களுக்கு போருக்கு ஆயுத உதவி செய்த வெளிநாட்டுத் தமிழர்கள் பலர் தற்போது வாய்மூடி மௌனிகளாகிவிட்டனர். இதுவரை காலமும் சேர்த்த பணத்திற்காகத்தான் நாடுகடந்த ஈழம், வட்டுக்கோட்டைத் தீர்மானம் என கப்சா விடுகிறார்கள்.

அவர்களுக்கு தொழில் பயிற்சி கூடங்களை உருவாக்கிக் கொடுத்து தங்கள் கைகளை நம்பி இருக்கும் தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்றவேண்டும்

**3)** வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தி.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை இரண்டாவது உலகப்போரால் பாதிக்கப்பட்ட ஐரோப்பாவை கட்டமைத்ததை உதாரணமாகக் கொண்டு கட்டி எழுப்பவேண்டும்

இந்த மூன்று விடயங்களிலும் உங்கள் கடந்தகால முயற்சிகள் மிக சொற்பம். உணர்வுமயமான பேச்சினால் காலத்தை ஓட்டினீர்கள். தற்போது தமிழ் இனம் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது.

இவற்றை நீங்கள் செய்வதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்புத் தேவை. அரசாங்கத்தை எதிர்த்து திட்டிக்கொண்டு எதுவும் சாதிக்க மாட்டீர்கள்.

சிங்கள மக்களும் இந்தப் போரினால் பாதிப்படைந்துள்ளார்கள். கிட்டத்தட்ட முப்பதினாயிரம் இராணுவத்தினர் உயிரை இழந்துள்ளார்கள். அவர்கள் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கொலை செய்யப்பட்ட மற்றும் அகதிகளாக்கப்பட்ட (யாழ்ப்பாணத்திலிருந்து துரத்தப்பட்ட) முஸ்லிம் மக்களிடம் பாதிப்பு ஆழமாக மனதில் பதிந்திருக்கும்.

எமது நாட்டில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் ஒரு 83 ஜுலை கலவரம் நடந்துள்ளது.

இவர்களது துன்பங்களுக்கு நாங்கள் ஏதோ விதத்தில் காரணமாக இருந்திருக்கிறோம். இவர்களது துன்பங்களை அங்கீகரித்து இன நல்லுறவை வளர்த்தால் மட்டுமே இலங்கையில் தமிழர்களுக்கு சுபீட்சம் வரும்.

பல்லினம் கொண்ட நாட்டில் நாங்கள் மட்டும் தனித்து முன்னேற முடியாது.

பாரிய கடமையை செய்வதற்கு நீங்கள் மகாத்மாக்களாக இருக்கத் தேவையில்லை. எம்மக்களது துன்பங்களோடு மற்றவர் துன்பத்தையும் புரிந்துகொண்டு மக்களிடம் உண்மையை பேசினால் மற்றவை எல்லாம் தானாக வந்து சேரும்.

**- என்.நடேசன்**

# இஸட் புள்ளியில் ஏற்பட்ட பிரச்சினை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக் கொள்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இஸட் முறை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நியமிக்கப்படவுள்ள புதிய நிபுணர் குழு தொடர்பில் உயர்நீதிமன்றத்தை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிடுகின்றார்.

அதற்கான நகர்த்தல் பத்திரம் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், புதிய நிபுணர் குழு ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை நிபுணர் குழு ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ளதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

நிபுணர் குழு நியமிக்கப்படாது, அது தொடர்பில் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிற்கு அமைய, நடவடிக்கை எடுப்பது அவசியமானதென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கின்றார்.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பரீட்சார்த்திகளின் மீள் திருத்தத்திற்கு விண்ணப்பித்ததன் ஊடாக பெறுபேறுகளில் திருப்தியற்ற தன்மை இருப்பதை காணக்கூடியதாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தீர்ப்பு வெளியிடப்படவுள்ள நிலையில், தற்போது புதிய நிபுணர் குழுவை நியமிப்பது தொடர்பில் கருத்து வெளியிடப்படவுள்ளதாக ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் கூறினார்.

எனவே பொய்யான குழுவை நியமிக்காது நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.



எவ்வாறாயினும் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய முறை தொடர்பில் நிபுணர்கள், சட்ட வல்லுனர்கள் உள்ளிட்ட தரப்பினர் வெளியிட்ட கருத்துக்கள், மற்றும் யோசனைகளை ஆராய்வதே இந்தக் குழுவை நியமிப்பதன் நோக்கமென உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# இளவயது மருத்துவர் சிலாபத்தில் மரணம்

(கொழும்பு)

சிலாபம் பொது மருத்துவமனையில் பணிபுரிந்த இளம் வைத்தியர் ஒருவர் தடுப்பு மருநது விஷமானதால் உயிரிழந்தார்.

குறித்த பெண் வைத்தியர் தமது பணிகளை நிறைவு செய்து கொண்டு வீட்டுக்குச் சென்று அஙகு ஒரு தடுப்பூசியைப் போட்டுக் கொண்ட நிலையில் அது விஷமானதால் இந்த மரணம் நிகழ்ந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த பெண வைத்தியர் விஷதடுப்பூசியை ஏற்றிக்கொண்டு தமது உயிரை மாய்த்துக்கொண்டார் எனறு சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டுளளார். 28 வயதான குறித்த பெண் வைத்தியர் ஒரு தமிழர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# வீட்டுக்கடன் செலுத்துவதில் கிளிநொச்சி மாவட்டம் முதலிடம்

(கொழும்பு)


வீட்டுக்கடன் செலுத்தும் விடயத்தில் கடந்த ஏப்ரல் மாதம் கிளிநொச்சி மாவட்டம் முதலிடத்தை பிடித்துள்ளதாக வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

வீட்டுக்கடன் செலுத்துவதில் மார்ச் மாதம் 5 ஆம் இடத்தைப் பிடித்த வவுனியா மாவட்டம் ஏப்ரல் மாதத்தில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது.

வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச அ[illegible]லோசனைக்கு அமைய வீடமைப்பு அபிவிருத்[illegible]ிகார சபை வீடமைப்பு கடன் சேகரிப்பில் கூ[illegible]தொகையை ஏப்ரலில் பெற்றுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் கிளிநொச்சி188%, யாழ்ப்பாணம் 105%, முல்லைத்தீவு 99%, வவுனியா 141%, மன்னார் 91%, திருகோணமலை 127%, மட்டக்களப்பு 109%, அம்பாறை 110%, என்றவாறு வீட்டுக் கடன் வசூலிக்கப்பட்டுள்ளது.

# 60 ஆயிரம் போலி நாணயத்தாள் நீர்கொழும்பில் நால்வர் கைது



(கொழும்பு)

ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்களை வைத்திருந்த நான்கு சந்தேகநபர்கள் நீர்கொழும்பு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்து ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 60 கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் குருநாகல், நீர்கொழும்பு, கொச்சிக்கடை மற்றும் கட்டான ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

போலி ஆவணம் அச்சிட பயன்படுத்தப்படும் கடதாசிகள், கம் போத்தல், சிறிய கத்தி என்பனவும் மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசி உள்ளிட்டவற்றையும் பொலிஸார் சந்தேகநபர்களிடம் இருந்து மீட்டுள்ளனர்.

# நீர்ப்பாசன திட்டங்களுக்காக மன்னாருக்கு ௧௦௦ மில்லியன்



(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள கட்டுக்கரை நீர்த்தேக்கம்-அகத்திமுறிப்புகுளம் மற்றும் வியாடிக்குளம் என்பன மூலம் விவசாயத்துக்குத் தேவையான நீரை வழங்கும் அபிவிருத்தித் திட்டத்தை நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்டார்.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த 9 ஆயிரம் மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதன் முதற்கட்டமாக 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது மன்னார் மாவட்டத்தில் சுமார் 35 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய செய்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இந்த நீர்ப்பாசன திட்டப் பணிகள் முடிவுறும் போது 55 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் அங்கு நம்பிக்கை வெளியிட்டார்.

அதேவேளை விலச்சி குளத்திலிருந்து கடலுக்குச் செல்லும் நீரை தடுத்து அவற்றை விவசாய நடவடிக்கைகளுக்காக திசை திருப்பும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கவனம் செலுத்துவதாகவும் உறுதியளித்துள்ளார்.

# பொதுச்சபை கூட்டத்தின் மூலம் தலைமைத்துவத்தை மாற்றலாம்

## தினமுரசு செய்திக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''தலைமையில் மாற்றம் வேண்டும். குவியும் குற்றச்சாட்டுக்கள்'' என்ற தலைப்பில் கடந்த 12 ஆம் திகதிய "தினமுரசு" பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாக, தனியார் சிற்றூர்தி உமையாளர் சங்கம் காரைநகர் கிளையினரால் விளக்க அறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்த விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டுமெனக் கோரும் அங்கத்தவர்கள் ஜனநாயக ரீதியாக இயங்கும் ஸ்தாபனத்தில் பொதுச் சபைக் கூட்டத்தின் போது தலைமைத்துவ மாற்றத்தை மேற்கொள்ள முடியும்.

அத்துடன் தலைவருக்கு மட்டுமல்ல மேலும் மூன்று அங்கத்தவர்களுக்கு இரண்டு பஸ்களுக்கான அனுமதி, பஸ்கள் சேவைக்கு இல்லாத காலத்தின்போது வழங்கப்பட்டது.

உறுப்பினரிடையே ஏற்படும் பிரச்சினைகளுக்கு விசாரணைக் குழு மூலம் உரிய தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

அத்துடன் நேர அட்டவணையைப் பின்பற்றாதவர்களிடமிருந்து அறவிடப்படும் பணம், பாதிக்கப்படும் சிற்றூர்திக்கு வழங்கப்படுகிறது.

2005 ஆம் ஆண்டின் பின் புதிய அங்கத்துவம் எதுவும் வழங்கப்படுவதில்லை என்பதனையும் குறிப்பிடுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்றக் கூட்டம்

(பருத்தித்துறை)

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்ற (தாய்ச்சங்கம்) ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் முன்மொழிவுகளை எழுத்து மூலமாக எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் இணைச் செயலாளரிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# மாடியிலிருந்து வீழ்ந்து அமெரிக்க பிரஜை மரணம்

கொழும்பு கொம்பனிவீதி சிறறம்பலம் ஏ காடினர் மாவத்தை நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் ஐந்தாம் மாடியில் இருந்து கீழே குதித்து அமெரிக்க பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 9.45 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பிற்பகல் 2.45 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

ஜோன் எட்வின் கொல்ஸ்டன் ரயன் என்ற 46 வயதுடைய அமெரிக்க பிரஜையே உயிரிழந்தவராவார்.

கொம்பனிவீதி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



பல மில்லியன் ரூபா செலவில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட பூநகரி சந்தைத் தொகுதி பல மாதங்களாகப் பூட்டிய நிலையில் காணப்படுகிறது. இச் சந்தைத் தொகுதியைத் திறந்து மக்களின் பாவனைக்கு விடுவதில் பூநகரி பிர தேச சபை நிர்வாகத்தினர் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பூட்டப்பட்ட சந்தையையும் கடல் உணவுப் பொருட்கள் வீதியோரமாகவுள்ள நகர்ப்பகுதி கடைத்தொகுதி அருகே விற்கப்படுவதையும் காணலாம். (112)

பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.

40) 01. புத்தகம் :.............................. 02. பேனா :..............................
03. ஐந்து :.............................. 04. பச்சை :..............................

பின்வரும் தொடர்புகளின் கருத்தினைத் தமிழில் எழுதுக.

41) 01. Silence please:.............................. 02. Come in :..............................
03. Thank you :.............................. 04. What is this? :..............................

பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தினைச் சிங்களத்தில் எழுதுக.

42) 01. அம்மா :.............................. 02. கதிரை :..............................
03. மாம்பழம் :.............................. 04. அதிபர் :..............................

பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.

43) 01. பாசல :.............................. 02. சுதுபா(ட்)ட :..............................
03. கிரி :.............................. 04. குருத்துமி :..............................

**சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

44) பொருட்களின் அதிர்வினால் உண்டாவது.
1. வெப்பம் 2. ஒளி 3. ஒலி 4. மின்

45) பனிக்கட்டி நீராக மாறும்போது நடைபெறுவது.
1. ஆவியாதல் 2. கரைதல் 3. ஒடுங்குதல் 4. உறைதல்

46) இரைமீட்கும் விலங்கு எது?
1. கிளி 2. பூனை 3. புலி 4. மாடு

47) பறக்கும் பாலூட்டி எது?
1. வௌவால் 2. கழுகு 3. காகம் 4. பருந்து

48) பக்கவேர்களில் உணவு சேமிக்கும் தாவரம்
1. கரும்பு 2. கரட் 3. கச்சான் 4. கத்தரி

49) நீரின் மூலம் பரவும் வித்து
1. முருங்கை 2. தேங்காய் 3. பனை 4. எருக்கலை

50) வெப்பத்தினால் விரிவடையக் கூடியது.
1. இரும்பு 2. இறப்பர் 3. கல் 4. மண்


51) எமது நாட்டின் பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்று
1. கறுவா 2. தேயிலை 3. ஏலம் 4. கராம்பு

52) அண்மையில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சிறந்த ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட வீரர் யார்?
1. டோனி 2. யுவராஜ்சிங் 3. சச்சின் 4. குமார் சங்கக்கார

53) நிறைபுரத உணவு வகை?
1. பால் 2. கருவாடு 3. பாண் 4. சோறு







T.S. கஜன்

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

# கல்வி முரசு

வெளியீடு 68



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

கீழுள்ள பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.

"இன்று எமது நாடு மட்டுமன்றி உலகில் உள்ள பிற நாடுகளிலும் யுத்தம், வன் செயல், அடக்குமுறை, துஷ்பிரயோகம் போன்ற மக்களைத் துன்புறுத்தும் தீய சக்திகள் மேலோங்கியுள்ளன. இதனால் மனித அவலங்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலைமாறி சாந்தி, சமாதானம் உருவாக, எதிர்காலத்தின் சிகரங்களாகிய சிறுவர்களாகிய நாமே சிந்திக்க வேண்டும்."

01) மக்களைத் துன்புறுத்தும் தீய சக்திகள் எனக் கூறப்பட்டவை எவை?
(..............................................................)

02) சிறுவர்களின் வளமான சிந்தனையின் மூலம் எதனை உருவாக்க முடியும்?
(..............................................................)

03) பிற நாடுகளின் பெயர்கள் மூன்று தருக.
(..............................................................)

04) பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துடைய சொற்களைப் பந்தியில் இருந்து தெரிவுசெய்க.
1) சமாதானம் (..............................) 3) அழிக்க (..............................)
2) இன்புறுதல் (..............................) 4) நற்பாவனை (..............................)

**கீழே தரப்பட்டுள்ள வடிவங்கள், உருவங்கள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**


05) ஒரு நான்முகியைவிட ஒரு சதுரமுகியில் காணப்படும் கூடுதலான முகங்களின் எண்ணிக்கை
1) இரண்டு 2) மூன்று 3) நான்கு

06) வட்ட வடிவத்தில் உள்ள சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை
1) ஒன்று 2) நான்கு 3) பல

07) கூம்பகம் ஒன்றில் காணக்கூடிய சதுர முகங்களின் எண்ணிக்கை
1) ஒன்று 2) நான்கு 3) ஐந்து

08) உச்சிகளோ, விளிம்புகளோ அற்ற ஒரேயொரு முகம் உடைய உருவம்
1) கூம்பு 2) கோளம் 3) உருளை

09)




இங்கு நீர் ஊற்றப்பட்ட A, B எனும் இரு தொகுதி போத்தல்கள் காட்டப்படுகின்றன. இவற்றில் A தொகுதி நீர் அனைத்தையுமா அல்லது B தொகுதி நீர் அனைத்தையுமா C போத்தலினுள் ஊற்றுவது சாத்தியமாகும்?

**அடைப்புக்குள் தரப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வெற்றிடங்களை நிரப்புக.**

**WE, WHAT, MY, HOW, IS, AM, ARE**

10) MY NAME..............................................KUMAR

11) ..............................................IS YOUR NAME?

12) ..............................................NAME IS KAMAMLA.


13) ..............................OLD ARE YOU?

14) I..............................TEN YEARS OLD.

**கீழுள்ள வினாவில் பகுதி I இல் உள்ள தேவையை நிறைவேற்ற நாம் செய்ய வேண்டியதை பகுதி II இல் தெரிவு செய்து அம்புக்கோடுகளினால் தொடர்புபடுத்துக.**

| பகுதி I | பகுதி II |
| --- | --- |
| 15) நோய்க்கு மருந்து | திரைப்படம் பார்க்கலாம் |
| 16) பொழுது போக்குவதற்கு | கொல்லனிடம் செல்லல் |
| 17) பாண் வாங்குவதற்கு | நூலகம் செல்லலாம் |
| 18) கதவின் பூட்டு | வைத்தியசாலை செல்லல் |
| 19) புத்தகம் இரவல் வாங்க | வெதுப்பகம் செல்லல் |

**கீழ்க்காணப்படும் கடிகாரத்தில் நீர் அவதானிக்கும் 5 தவறுகளை விபரித்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**



1) (..............................................................)

2) (..............................................................)

3) (..............................................................)

4) (..............................................................)

5) (..............................................................)

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் காரணம் முதலில் தரப்பட்டு விளைவு அதனைத் தொடர்ந்து வருகிறதாயின் "T" எனவும் இல்லையெனில் "X" எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

20) சூரியன் உதயமாகிறது. மக்கள் உறக்கத்திற்கு தயாரானார்கள். (..............................)

21) அப்பா முறைத்துப் பார்த்தார். தம்பி விம்மி விம்மி அழுதான். (..............................)


22) நேரம் மாலையாகிவிட்டது. பாடசாலைகள் ஆரம்பமாகின. (..............................)

23) விளக்குகள் அணைக்கப்பட்டன. திரைப்படம் தொடங்கியது. (..............................)

24) ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார். பயிற்சிகளைச் செய்வித்தார். (..............................)

25) விளையாட்டுப் போட்டி ஆரம்பித்தது. சிறுவர்கள் மைதானத்திற்குச் சென்றார்கள். (..............................)

**தரம் 4 வகுப்பில் ஆக்கப்பாட வேளையின் போது ஆசிரியர் மாணவர்களுக்குச் செய்துகாட்டிய உருவம் கீழே படம் மூலம் காட்டப்பட்டுள்ளது. இவ்உபகரணமானது கணித பாடத்தின் போதும் அதிகம் உதவக் கூடியது என மாணவர்களுக்கு ஆசிரியர் விளக்கமளித்தார்.**



26) இவ்உபகரணத்தின் பெயர் என்ன?

(..............................................................)

27) இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி எதற்குப் பயன்படுகிறது?

(..............................................................)

28) இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள ஒரு சதுரத்தின் ஒரு பக்க நீளம் 3 சென்ரிமீற்றர் எனின், அச்சதுரத்தின் பரப்பளவு யாது?

(..............................................................)



29) இதில் காணக்கூடிய சதுர வடிவங்கள் எத்தனை?

(..............................................................)

**பின்வருவனவற்றுள் சதுரம் ஒன்றுக்குப் பொருந்தக் கூடிய பண்புகளைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

30)
- இரண்டு சமச்சீர் அச்சுக்கள் உள்ளன
- நான்கு பக்கங்களும் சம அளவுடையன
- நீளங்கள் இரண்டும் சமமானவை
- சமச்சீர் அச்சுக்கள் நான்கு உள்ளன.


(..............................................)

(..............................................)

(..............................................)


**தரப்பட்டுள்ள படத்தினைக் கொண்டு கீறிட்ட இடத்தினை நிரப்புக.**

31)




கல்லைப் புரட்டுவதற்கு "X" எனும் அடையாளமிடப்பட்டுள்ள இடத்தில் பிடித்து..............................வேண்டும்.

32)




பலூனுக்கு வளி நிரப்பும் போது அதன் மேலுள்ள புத்தகம் ..............................படுகிறது.

**கீழ்வரும் வினாக்களுக்கான விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

33) 1 கிலோகிராம் சீனி ஒரே அளவுள்ள 4 பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்டுள்ளது. 3 கிலோகிராம் சீனியை இவ்வாறான எத்தனை பைக்கற்றுக்களில் அடைக்கலாம்?

(..............................................................)

34) சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 10 சென்ரிமீற்றர் ஆகும். இவ்வாறான மூன்று சதுரங்களை ஒன்றை ஒன்று தொடக்கூடியவாறு ஒரே வரிசையில் வைத்து ஒரு செவ்வகம் அமைக்கப்பட்டுள்ளது. இச்செவ்வகத்தின் சுற்றளவைக் காண்க.

(..............................................................)

35) ஒரு மரக்கிளையில் 10 பறவைகள் இருந்தன. வேடன் ஒருவன் அம்பு எய்தான். ஒரு பறவை மட்டும் விழுந்து இறந்தது. கிளையில் எத்தனை பறவைகள் எஞ்சியிருக்கும்?

(..............................................................)

36) துஷ்யந்தனுக்கு வலது பக்கத்தில் செந்தூரனும், செந்தூரனுக்கு வலது பக்கத்தில் சுகிர்தனும் துஷ்யந்தனுக்கு இடதுபக்கத்தில் சசிதரனும் நிற்கிறார்கள். துஷ்யந்தனுக்கும் சுகிர்தனுக்கும் இடையில் நிற்பவர் யார்?

(..............................................................)

37) பாத்தி ஒன்றிலே நிரை ஒன்றில் 145 மிளகாய்க் கன்றுகள் நடப்பட்டுள்ளன. அதில் 50 நிரைகள் உள்ளனவெனில் நடப்பட்டுள்ள மிளகாய்க் கன்றுகளின் எண்ணிக்கையைக் காண்க.

(..............................................................)

38) 1 கிலோகிராம் தேயிலை ரூபா 80 ஆகும். 250 கிராம் தேயிலையின் விலை யாது?

(..............................................................)

39) எட்டு மாடிக் கட்டடம் ஒன்றின் ஒவ்வொரு மாடியிலும் 16 யன்னல்கள் உள்ளன. அக்கட்டடத்தில் உள்ள யன்னல்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(..............................................................)

# பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் மணலைப்பெற அறிவுறுத்து



(சிகரம்)

பதிவுசெய்யப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட மணல் கொள்வனவு நிறுவனத்திலேயே எவரும் மணலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என யாழ் பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ குகனேசன் தெரிவித்தார். அவர் இதுதொடர்பாக தெரிவிக்கையில்:

புதிய சடடத்தின்படி ஒரு நாளைக்கு 3 கியூப் மணலையே ஒருவர் எடுத்துச்செல்ல முடியும், இதற்கு அதிகமாக எடுத்துச் செல்பவர்கள் மீதும், பதிவு செய்யப்படாத, அங்கீகரிக்கப்படாத விற்பனை நிலையத்திலோ அல்லது பிற இடங்களிலோ மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அமைச்சரவை முடிவின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு மணல் விற்பனை நிறுவனத்திலும் மணலைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால இவ்வாறு பெற்ற மணலை நிறுவனத்திலிருந்து வேலைத்தளத்திற்கு எடுத்துச்செல்லும் போது விற்பனை நிலையப் பற்றுச்சீட்டு (பதிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்களாக இருக்க வேண்டும்) இன்றி எடுத்துச் செல்பவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தபடுவர்" எனத் தெரிவித்தார்.

# ஒறிக்ஸ் லீசிங் கம்பனி சுன்னாகத்தில் திறப்பு


(ஷர்மி-சிகரம்)

யாழ்.சுன்னாகத்தில் லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனியின் (LOLC)167 வது புதிய கிளை நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனியின் முகாமைத்துவப் பணிபபாளர் பிறட்லி டி. சில்வா பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு இந்தக் கிளையினைத் திறந்து வைத்தார். அத்துடன், சிறப்பு விருந்தினராக இந்தக் கம்பனியின் தலைமை நிர்வாக அதிகாரி அஸன் நிஸங்கள கலந்து கொண்டார்.


இலங்கை முழுவதும் 167 கிளைகளைக் கொண்டுள்ள இந்தக் கம்பனி யாழ்ப்பாணத்தில் 4 கிளை நிலையங்களைக் கொண்டுள்ளதாகவும், தென்மராட்சி சாவகச்சேரி மற்றும் நெல்லியடியிலும் இரண்டு கிளைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்றும் லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிறட்லி டி.சில்வா தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனியின் சுன்னாகம் கிளையின் முகாமையாளர் ஆர். சுதாகரன் , மேலதிகாரிகள், வாடிக்கையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# செலான் வங்கி யாழ். கிளைக்கு செயற்பாட்டுக்கான விருது

(கிரு,பகீ-சிகரம்)




இந்த வருடம் செலான் வங்கியின் செயற்பாட்டுக்கான விருது செலான் வங்கியின் யாழ்.கிளைக்கு (financial KPT s award) கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை முழுவதும் 100 கிளைகளையும் 36 விரிவாக்கற் கிளைகளையும் கொண்ட செலான் வங்கி யாழ். மாவட்டத்தில் நெல்லியடி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசத்தில்




கிளைகளையும் மானிப்பாய், சங்கானை ஆகிய பிரதேசங்களில் விரிவாக்கற் கிளைகளையும் கொண்டு இயங்குகிறது.

இதேவேளை, ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு நிலையான பண வைப்பைக் கொண்ட கணக்கு நிலுவைகளுக்கு 14 வீத வட்டியினை வழங்கும் செலான் வங்கியின் யாழ் கிளை கடந்த செவ்வாய்க்கிழமை தனது 10ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.

27 ஊழியர்களைக் கொண்ட யாழ் கிளை தனது ஆண்டு நிறைவை முன்னிட்டு வாடிக்கையாளருடன் நட்புறவைப் பேணும் வகையில், நாளை சனிக்கிழமை யாழ்.டில்கோ ஹோட்டலில் சந்திப்பொன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

# எண்ணிக்கை வீழ்ச்சி

(சிகரம்)

சிறுவர்களுக்கான சிறந்த பொழுதுபோக்கு மையமாகத் திகழும் யாழ் பொது நூலகத்திற்கு அருகே அமைந்துள்ள சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவிற்கு வருபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்படுவதாக பூங்கா கண்காணிப்பாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

'சிறுவர்களுக் கான விளையாட்டு தொகுதி கள் பல இங்கு காணப்படு கின்ற போதிலும்,வேலைப் பளு காரணமாக பெற்றோர்கள் இவ்வாறான பொழுது போக்கு மையங்களுக்குபிள்ளைகளை அழைத்து வருவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பூங்காவிற் கான பார்வைக் கட்டணங்கள் மிகக் குறைவாகவே உள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

"சுப்பையா, தம்பி சுப்பையா, நாம் எல்லாம் இந்தத் தேசத்திலே, நாங்களும் மனுஷப் பிறவீன்னு சொல்லிக்கிட்டு வேட்டியும் கட்டிக்கிட்டு அலையுறோமே, எதுக்குன்னு கேக்கறேன்? நமக்கு ஏதாவது தெரியுதா? நாம் ஏதாவது செய்து காட்டியிருக்கோமா? சத்தியமாக் கேக்கறேன்... காரு எப்படி ஓடுதுன்னு கேட்டா தெரியாதுங்கறே... சோறு எப்படிச் செமிககுதுன்னு கேட்டா தெரியாதுங்கறே... விளக்கு எப்படி எரியுதுன்னு கேட்டா தெரியாதுங்கறே... குருவி எப்படிப் பறக்குதுன்னு கேட்டா தெரியாதுங்கறே... வாத்து எப்படி நீஞ்சுதுன்னு கேட்டா தெரியாதுங்கறே..." என்று சொல்லிக் கொண்டே வந்தவர், துரிதகாலத்தில் ஆரம்பித்து, "எப்படி நிக்கறே? தெரியாது; "எப்படி ஓடறே? தெரியாது; "எப்படிப் படுக்கறே? தெரியாது; "பல் எப்படி முளைக்குது? தெரியாது..." என்று சொல்லிவிட்டு உரத்த குரலில் "என்ன எழவுதான் நமக்குத் தெரியும்?" என்று உணர்சசிவசப்பட்டுக் கத்தினார்.

"சுப்பையா, நல்லாக் கேட்டுக்கோ. எறும்பு இருக்கே எறும்பு, இதைப் பத்தி இங்கிலீஷிலே எழுதி வைச்சிருக்கான் பாரு, புஸ்தகம் தண்டி தண்டியா தலையாணி கணக்கா! எத்தனை ஆயிரம் புஸ்தகம் எறும்பப் பத்தி! அட ஆண்டவனே, எறும்புல எத்தனை வகை; ஒவ்வொண்ணும் என்ன என்ன செய்யுது; பாட்டி எறும்பு என்ன செய்யுது; பேரன் எறும்பு என்ன செய்யுது; அக்கா எறும்பு என்ன செய்யுது; தம்பி எறும்பு என்ன செய்யுது; எறும்புக் கூட்டம் லெஃப்ட் ரைட் போட்டு எப்படி மார்ச் பண்ணிப் போகுது; அதில தலைவன் யாரு; தொண்டன் யாரு; ஆண்டை யாரு; அடிமை யாரு; அய்யர் எறும்புக்கு என்ன மரியாதை; அரிஜன் எறும்புக்கு என்ன மரியாதை; காதலன் எறும்பும் காதலி எறும்பும் பூங்காவனத்தில் 'பாயும் ஒளி நீ எனக்கு பார்க்கும் விழி நானுனக்கு' அப்டீனு தொகையறா எடுத்து கிட்டப்பா சுந்தராம்பாள் மாதிரி பாடிக்கிட்டு எப்படி காந்தர்வ விவாகம் பண்ணிக்கிடுது... எனக்குச் சொல்லத் தெரியலே சுப்பையா, எனக்குச் சொலலத் தெரியலே! பாவிகள் எழுதி வைச்சிருக்கிற புஸ்தகத்திலே லேசா ஒரு பக்கத்தைப் பாக்க இந்த ஆயுள் பத்தாது, பத்தவே பத்தாது!.... ஆமா... நாம் என்னடான்னா நாம தான் மகா கெட்டிக்காரங்கன்னு நெனச்சுக கிடறோம்... 'ஓம்' என்கிற ரெண்டு எழுத்துக்குள்ளே நீ, உங்கப்பன், பாட்டன், பேரன், பூட்டன் தெரிஞ்சுக்கிட்டது அத்தனையும் அடக்கி வைச்சிருக்கோம். எல்லாம் இதுக்குள்ளே அடங்கிப் போச்சு என்கிறோம்... வேண்டாம், புதுசா ஒண்ணும் வேண்டாம், வேண்டவே வேண்டாம் அப்டீன்னு தொண்டை கிழியக் கத்தறோம், புல்லும் தர்ப்பையும் போதும் என்கிறோம். என்னை விட்டா யாருடா? ஹாய் தாட்பூட் ராஜா அப்டீனு தொடையத் தட்டறோம்... ஆமா... நாம என்னைக்காவது அது ஏன் அப்படி? இது ஏன் இப்படி? அப்படி இருக்குமா? எப்படி இருக்கணும்? எப்படி மாத்தணும்?.... கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்திருக்கிறோமா? கடுகாவது யோசிச்சுப் பார்த்திருக்கிறோமா?.... யோசிக்காம மண்ணாந்தைகளா போயுட்டோமே தம்பி, மண்ணாந்தைகளா போயுட்டோமே... மண்ணாந்தைகளா போயுட்டோமே..."

**– கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம் பேச்சுப் பற்றி சுந்தர ராமசாமியின் கட்டுரையிலிருந்து**

பழைய காரியங்கள் சிலவற்றை ரொம்பவும் மதிக்கிறோம என்றால் ஏதோ பழையது என்ற பண்பு பற்றியல்ல. பழைய காலத்தில் உயிர் இருக்கும், பிரயோசனம் இருக்கும் என்ற நம்பிக்கை பற்றித்தான். ஆயிரம் வருஷமாக வளர்ந்து வந்த மரத்தை மதிக்கிறோம் என்றால் அதில் உயிர் இருக்க வேணடும். பட்டுப் போன மரத்தை ஆயிரம் வருஷத்தியது என்று கொத்திக் கொடுத்து நீர் வார்த்துக் கொண்டிருக்க முடியாது. சந்தனம் புஷ்பம் எல்லாம் போட்டு வழிபாடு செய்ய முடியாது. கோடாலிக்காரனை ஏவி விட வேண்டியதுதான். அலலாத பட்சம் கறையானும் உளுவானும் குடியிருந்து கொண்டு, பக்கத்து மரங்களுக்கும் நோய் உண்டுபண்ணிக் கொண்டிருக்கும். எப்படியும் மரம் புதிதாக அந்த இடத்தில் உண்டாகாது. நம்முடைய சமுதாய வாழ்க்கையிலே பட்டுப்போன மரங்கள் பழையன என்ற காரணத்தாலேயே வட்டம் போட்டு இடத்தை அடைத்துக கொண்டிருக்கின்றன. கலைத்துறைகளைப் பார்த்தால் ஒரே காடு; பட்டுப் போன மரங்கள் அடர்ந்த காடுதான். நம்முடைய வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் பழைய காரியங்கள் உயிரற்றவையாய் நின்று இடையூறு செய்கின்றனவா என்று பார்க்க வேண்டும். வேண்டாதவைகளைக் களைந்தெறியக் கூசக் கூடாது. அப்போதுதான் வாழ்க்கை வளம்பெறும். வாழ்க்கையில் வேறு எந்தத் துறையில் பேரம் பண்ணிக் கொண்டிருந்தாலும் கலை இலக்கிய சம்பந்தமாகப் பேரம் பண்ணவே கூடாது.

– டி.கே.சி

# ஆயுத் இறக்குமதி போட்டி முதலிடம் பிடித்தது இந்தியா



(புதுடில்லி)

ஆசியாவில் வல்லரசு ஆவதற்காக இந்தியாவுக்கும், சீனாவுக்கும் பல தளங்களில் போட்டி நடக்கிறது. இப்போது ஆயுத இறக்குமதியில் சீனாவை முந்தி உலகிலேயே

முதல் இடத்தை இந்தியா பிடித்திருக்கிறது. இத்தகவலை நாடாளுமன்ற மாநிலங்களவையில் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி தெரிவித்தார்.


ஆயுத இறக்குமதியில் சீனாவை இந்தியா விஞ்சிவிட்டதா? என எழுப்பபட்ட வினாவிற்கு எழுத்துப்பூர்வமாக அளித்த விடையில் அந்தோணி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில், உலகநாடுகளின் ஆயுத இறக்குமதி தொடர்பான அறிக்கையை ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் கடந்த மார்ச் மாதம் வெளியிட்டது. உலக ஆயுத இறக்குமதியில் சீனாவின் பங்கான 5 சதவீதத்தையும் இந்தியா தாண்டிவிட்டது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவத்துக்கு ஆயுதப் பற்றாக்குறை ஏற்படும்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப் படும் ஆயுதங்கள் மூலமாகத் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் பாதுகாப்பு அச்சுறுத்தலையும் சவால்களையும் கணித்து அதற்கு ஏற்ப ஆயுதக் கொள்முதல் செய்யப்படுவதாகவும் தெரிவித்த அவர், 15 ஆண்டு கால ஒருங்கிணைந்த திட்டம், 5 ஆண்டு இராணுவக் கொள்முதல் திட்டம், ஆண்டு தோறும் கொள்முதல் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆயுதக் கொள்முதல் செய்யப் படுவதாகவும் கூறியுள்ளார்.

# தென்சீனக் கடற்பகுதியில் நிறுத்தப்பட்ட கடல் ஆய்வு

## சீனாவின் மிரட்டல் காரணமா?



(புதுடில்லி)

தென்சீனக் கடல் பகுதியில் இந்தியா மேற்கொண்ட ஆய்வை திடீரென நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு இந்தியா, வியட்நாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி, தென் சீனக் கடல் பகுதியில் இந்தியா ஆய்வு மேற்கொண்டு வந்தது. அந்தக் கடல் பகுதியில் பெற்ரோலிய வளம் குறித்து இந்த ஆய்வினை இந்தியா மேற்கொணடது. தற்போது பொருளாதார நிலை காரணமாக இந்த ஆய்வினை நிறுத்தி விட்டதாக பெற்ரோலியத் துறை அறிவித்துளளது.

இந்த ஆய்வினை மேற்கொள்வதற்காக ஏறத்தாழ ரூ 244 கோடி இந்தியா முதலீடு? செய்திருக்கிறது. இந்த ஆய்வினை மேற்கொள்வதை ஆரம்பம் முதல் சீனா எதிர்த்து வருவது குறிப்பிடத்தக்கது. தென்சீனக் கடல் பகுதி முழுவதும் சீனாவுக்கே சொந்தம் என அந்த நாடு வாதிடுகிறது. இதற்கு வியட்நாம், பிலிப்பைன்ஸ், தைவான், மலேசியா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது.

இந்தியாவும், தென் சீனக் கடற்பகுதி உலக நாடுகளுக்கு சொந்தமானது என்றும் வேறு எந்த நாடும் இதில் உரிமை கொள்ளக்கூடாது என்றும் சீனாவுக்கு முன்பு பதிலடி கொடுத்துள்ளது. இந்த கடல் பகுதியில் ஆயவினை மேற்கொள்ளக் கூடாது என சீனா கடந்த மார்ச் மாதம் இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# செலவீன குறைப்பு மதிப்பீடு ஆரம்பம்

செலவீன குறைப்பு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

நெருக்கடியான பொருளாதார நிலைமையை சமாளிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பிரணாப் முகர்ஜி சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ரீதியான பொருளாதார நிலைமையும் மோசமடைந்துள்ளதாக குறிப்பிட்ட அவர் எனினும் தாம் பீதியை ஏற்படுத்தவில்லை எனவும் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய வலய நிதி நெருக்கடி இந்தியாவையும் பாதித்துள்ளதாக பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக 8.4 வீதமாக பதிவான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2011/2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 6.9 வீதமாக வீழ்ச்சி கண்ட தாகவும் அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

# அணு உலைக்கு எதிராவ சட்டம் கொண்டு வந்தால் பாதிப்பு

## பிரதமர் மன்மோகன் தெரிவிப்பு



(புதுடில்லி)

அணுஉலைகளுக்கு எதிராகச் சட்டம் கொண்டுவந்தால் இந்தியாவிற்குத்தான் பாதிப்பு என நாடாளுமன்றத்தில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது பேசிய சிவ சேனா கடசியைச் சேர்ந்த ஆனந்த் கீதே, ஜப்பான் நாட்டில் .புகுஷிமா அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தைத் தொடர்ந்து ஜப்பானும் ஜேர்மனியும் அணு சக்தி உற்பத்தியைக் கைவிடுவதாக அறிவித்துள்ளன.

எனவே, இந்தியாவும் அணு உற்பத்தி திட்டங்களை மறு ஆய்வு செய்யுமா? என்று கேட்டார்.

இதற்கு விடையளித்த பிரதமர் மன்மோகன் சிங் அணு சகதியின் பாதுகாப்பில் எவ்வித சமரசமும் செய்து கொள்ளக் கூடாது என்பதே இந்தியாவின் உறுதியான நிலை. அணு உலைகளின் பாதுகாப்புக் குறித்து ஐயம் எழக்கூடிய எதையும் நாம் செய்ய மாட்டோம்.

புகுஷிமா அணு மின் நிலைய விபத்துக்குப் பின் நம் நாட்டில் செயற்பாட்டில் உள்ள 19 அணு உலைக்கூடங்களின் பாதுகாப்புக் குறித்து முழுமையாக ஆயயு செய்ய உத்தர விட்டேன். அந்த ஆய்வின் விபரங்கள் அனைத்தும் இந்திய தேசிய அணுசக்தி நிறுவனத்தின் இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ளன.

எமது பாதுகாப்பு நடவடிக்கைகள் திறந்த புத்தகம் போன்றது. அதே சமயம், நம் நாட்டில் அணுசக்தியைக் கூடுதல் மின்சார தேவைக்காக வைத்துக்கொள்ள வேண்டும்

ஜப்பானில் நிலவிய சூழ் நிலை இந்தியாவில் கிடையாது. மின்தேவைக்கு அணு உலைகளையே ஜப்பான் நம்பியிருந்தது. அதிக அணு உலைகளைக் கொண்ட பிரான்ஸை நம்பியே ஜெர்மனி உள்ளது. ஆனால் நாம் எமது அதிக மின்தேவைக்காக மட்டுமே அணு உலைகளைப் பயன்படுத்துகிறோம்.

அதனால் அணு உலைகள் தேவையில்லை என நாம் அவ. சரச் சட்டம் கொண்டு வந்தால் அது எமக்குப் பாதகமாகப் போய் விடும் என்றார் மன்மோகன் சிங்.



தமிழ்நாடு நீலகிரி மாவட்ட கால்பந்து சங்கம் சார்பாக, ஊட்டி எச்.ஏ.டி.பி. மைதானத்தில் நடந்து வரும் கோடை கால கால்பந்து பயிற்சி முகாமில், ஆர்வத்துடன் பங்கேற்ற சிறுவர் சிறுமியர்களைக் காணலாம்.

# குரு, சிஷ்ய ரீதியான உறவே நித்தியானந்தாவுடன் உள்ளது

## நடிகை ரஞ்சிதா வாக்குமூலம்



(சென்னை)

நித்தியானந்தாவிற்கும், தனக்கும் உள்ளது குரு, சிஷ்ய உறவென நடிகை ரஞ்சிதா நீதி மன்றில் தெரிவித்துள்ளார்.

மதுரை இளைய ஆதீனமாக, சாமியார் நித்யானந்தாவிற்கு அண்மையில் முடி சூட்டப்படடது. அதற்கு காஞ்சி சங்கராச்சாரியார் மற்றும் சில மடாதிபதிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

காஞ்சி சங்கராச்சாரியார் பேட்டி ஒன்றில், நித்யானந்தாவுடன் நடிகை ரஞ்சிதா என்ற பெண இருப்பதாகத் தெரிவித்தார்.

அதைக் கண்டித்து நடிகை ரஞ்சிதா, காஞ்சி சங்கராச்சாரியார் மீது நீதிமன்றில் மான நஷ்ட வழக்குத் தொடர்ந்தார். அவ்வழக்கு தொடர்பாக நேற்று முன்தினம் நடிகை ரஞ்சிதா ஆஜரானார்.

அங்கு நடிகை ரஞ்சிதா, அளித்த வாக்குமூலத்தில் காஞ்சி சங்கராச்சாரியார் பேட்டி ஒன்றில் "சாமியார் நித்யானந்தாவுடன் ரஞ்சிதா என்ற பெண், எப்போதும் உடன் இருக்கிறார் எனத் தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டுகளாக, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து புகழ் பெற்றுள்ளேன். இந்து மத கொள்கைகளில் நம்பிக்கையுள்ளதால், நித்யானந்தா நடத்திய ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் பங்கேற்றேன்.

எங்களுக்குள் குரு, சிஷ்யை உறவு தான் இருக்கிறது. மற்ற சிஷ்யைகளைப் போல்வே நானும், நித்யானந்தாவின் சிஷ்யை. நான் மட்டும் நித்யானந்தாவுடன் இருப்பதாக, சங்கராச்சாரியார் அவதூறு பேசிய செய்தி ஊடகங்களில் வெளியானது. எனது தனிப்பட்ட வாழ்க்கையில், புகழுக்கு களங்கம் ஏற்படும் வகையில், அந்தப் பேட்டியில் கூறப்பட்டுள்ளது. அவரது பேடடியைப் படித்த பலர் என்னிடம் விசாரித்தனர். அதனால், மிகுந்த மன வருத்தம் அடைந்தேன். என்னுடைய மனுவில் நியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இரு ஆன்மிக தலைவர்களுக்கு இடையேயான பிரச்சினையில், சங்கராச்சாரியார் என்னை தேவையில்லாமல் இழிவுபடுத்தி பேசிய விவகாரத்தில் நீதி வழங்க வேண்டும் என்றார். இதையடுத்து அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# ராசா மீண்டும் சிறைக்கு சுப்பிரமணியசாமி ஆரூடம்



(கொழும்பு)

2 ஜி ஸ்பெகட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் முறைகேடு செய்த வழக்கில் டில்லி திகார் சிறையில் அடைக்கப் பட்டிருந்த ராசா 15 மாதங்களுக்குப் பின் பிணையில் விடுதலையானார்.

இந்த நிலையில் தொலை தொடரபுத்துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசா வேறொரு வழக்கில் மீண்டும் சிறைக்குச் செல்வார் என 2 ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு வழக்குத் தொடுத்த சுப்பிரமணியம் சாமி தெரி வித்துள்ளார்.

2 ஜி ஸ்பெக்ட்ரம் அனுமதி பெற்றதில் ஆதாயம் அடைந்த யுனிடெக் என்ற நிறுவனம் ரூபா 275 கோடி பணத்தை வெளிநாட்டு வங்கி மூலம் ஆ.ராசாவுக்கு அளித்ததை சி.பி.ஐ கண்டுபிடித்துக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இதனால் இப்புதிய வழக்கில் ராசா கைது செய்யப் பட்டுச் சிறைக்குச் செல்வார் என்று நிருபர்களிடம் சுப்பிரமணியம் சாமி கூறினார்.

# பொஸ்னிய - செர்பிய இராணுவத்தளபதி மீது இன அழிப்பு போர்க் குற்ற விசாரணை



முன்னாள் பொஸ்னிய-செர்பிய இராணுவத் தளபதி ரட்ச்கோ மிலாடிச்,பொஸ்னியாவில் திட்டமிட்டு 'இன அழிப்பு' நடவடிக்கையில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து அவருக்கு எதிரான போர்க் குற்ற வழக்கின் முதல்-நாள் விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1992-95 காலப்பகுதியில் நடந்த பொஸ்னிய போரின்போது, இனப்படுகொலையில் ஈடுபட்டதாகவும் போர்க் காலக் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாகவும் ஜெனரல் மிலாடிச் 11 குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளார்.

இந்தக் குற்றங்களின் பின்னணியில் இவர்தான் இருந்திருக்கிறார் என்பதை தம்மால் நிரூபிக்க முடியும் என்று த ஹேக் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுனர் தரப்பு வழக்குரைஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தான் எந்தக் குற்றமும் புரியவில்லை என்று கூறியுள்ள ஜெனரல் மிலாடிச், தன மீதான குற்றச்சாட்டுக்களை 'கொடூரமானது' என்று வர்ணித்துள்ளார்.

1995ஆம் ஆண்டில் ஸ்ரப்ரேனிசாவில் சிறார்கள் உட்பட 7000இற்கும் அதிகமான முஸ்லிம் ஆண்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நடத்தியதாக ஜெனரல் மிலாடிச் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

சரயேவோ நகரை 44 மாதங்களாக முற்றுகையில் வைத்திருந்ததன் மூலம் 10,000இற்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்திலும் இவருக்கு தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது. ஸ்ரப்ரேனிசா படுகொலை நடந்து 20 ஆண்டுகள் கடந்துள்ளன.

த ஹேக்கில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் வழக்கு விசாரணை ஆரம்பமானபோது, ஜெனரல் மிலாடிச்சுக்கு எதிரான வழக்கு பற்றிய ஒலி-ஒளி விவரணப் பதிவொன்று வெளியிடப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தபோது, ஒரு கட்டத்தில் பார்வையாளர் அரங்கிலிருந்த மக்களுக்கு சைகைகளைக் காட்டிய ஜெனரல் மிலாடிச்சை, நீதிபதி விசாரணையில் கவனம் செலுத்துமாறு எச்சரித்தார்.

வழக்கு விசாரணைகள் ஆரம்பமாக இருந்த தருணத்தில் நீதிமன்றத்துக்கு வெளியே, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பப் பெண்கள் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த வழக்கு விசாரணைகளை தாமதப்படுத்த வேண்டும் என்று ஜெனரல் மிலாடிச் தரப்பு வழக்கறிஞர்கள் முன்வைத்த கோரிக்கைகள் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 15 ஆண்டுகளாக சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருந்த ஜெனரல் மிலாடிச், கடந்த ஆண்டில் செர்பிய படையினரால் பிடிக்கப்பட்டு த ஹேக்- நகரை மையமாகக் கொண்டு இயங்கும் முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்திடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உலகச் செய்திகள்

## வீட்டில் இருந்தவாறே எச்.ஐ.வி.சோதனை




எச்.ஐ.வியை வீட்டிலேயே சோதனை செய்து கொள்வதற்கான கருவியை விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று அமெரிக்காவில் உள்ள விஞ்ஞானிகளின் குழு ஒன்று பரிந்துரைத்துள்ளது.

'ஓராகுயிக்' என்னும் பெயரிலான இந்தக கருவியை வாயில் தடவி எடுப்பதன் மூலம் ஏதாவது நோய்க்கிருமிகள் உடலில் இருக்கிறதா என்பதை 20 நிமிடங்களில் அறிந்துகொள்ள முடியும்.

உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் இது அங்கீகரிக்கப்பட்டால், எச்.ஐ.வியை உடனடியாக வீட்டிலேயே சோதனை செய்துகொள்வதற்கான முதலாவது கருவியாக இது அமையும்.

இந்தக் கருவியின் மூலமான சோதனை முடிவுகள் 100 வீதம் துல்லியமானவை என்று சொல்லமுடியாது என்ற காரணத்தால், தவறான முடிவுகளை பெறுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது என்பது குறித்த கடுமையான எச்சரிக்கையையும், இந்தக் கருவியின் பொதியில் பொறிக்க வேண்டும் என்று சில குழு உறுப்பினர்கள் வாதாடி வருகின்றார்கள்.

# உண்மையைக் கண்டறிய பிரேசிலில் ஆணைக்குழு



உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் பிரேசிலில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் இந்த ஆணைக் குழு நிறுவப்பட்டுள்ளதாக பிரேசில் ஜனாதிபதி டில்மா ராசொப் தெரிவித்துள்ளார்.

இராணுவ ஆட்சிக் காலம் முதல் இடம் பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடரபில் விசாரணை நடத்தி உண்மைகளை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவும் உத்தியோகபூர்வ வைபவத்தில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதன் பின்னர் ஆட்சி செய்த நான்கு ஜனாதிபதிகளும் கலந்து கொண்டனர்.

1946ஆம் ஆண்டு முதல் 1988ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது.

இராணுவ ஆட்சிக் காலத்தில் தற்போதைய பிரேசில் ஜனாதிபதி டில்மா ராசொப சிறையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பழிவாங்கும் நோக்கிலோ அல்லது குரோத எண்ணத்திலோ இந்த ஆணைக் குழுவினை நிறுவவில்லை என ஜனாதிபதி ராசொப் தெரிவித்துள்ளார்.

உண்மைகளை வெளிப்படுத்தி வெளிப்படைத்தன்மையை உறுதிப் படுத்தும் நோக்கில் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினை நிறுவும் நடவடிக்கையானது பிரித்தானிய அரசாங்கத்தின் முனைப்பு கிடையாது அது நாட்டின் தேவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்துக் கடவுளின் பெயரில் பீர் மன்னிப்புக் கோரியது நிறுவனம்




காளி மாதா பெயரில் பீர் தயாரித்த அமெரிக்க நிறுவனம், இந்துக் கடவுளின் பெயரை வைத்ததற்காக மன்னிப்பு கோரியுள்ளது. அதுமட்டுமல்லாது இந்தப் பெயரை மாற்றம் செய்யவும் முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவின் ஓரிகான் மாகாணத்தில் உள்ள போர்லேண்ட்டில் 'பர்ன்சைட் ப்ரீவிங்' என்ற மதுபான தொழிற்சாலை உள்ளது.

இந்த நிறுவனம் நேற்று முன்தினம் காளி மா என்ற பெயரில் பீர் வகையை அறிமுகப்படுத்த இருந்தது. இதற்காக இந்நிறுவனம் விளம்பரங்களை வெளியிட்டு வந்தது.

இந்து கடவுள் பெயரிலும், காளி உருவத்தை அச்சிட்டும் அறிமுகப்படுத்தப்பட உள்ள இந்த பீர் குறித்து இந்தியாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர். இது தொடர்பாக அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளை கேள்விப்பட்ட பர்ன்சைட் ப்ரீவிங் நிறுவனம், நாங்கள் தயாரித்துள்ள பீர் இந்திய நறுமண பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. எனவே தான் காளி மா என்ற பெயரை வைத்தோம்.

ஆனால் இது இந்துக் கடவுள் பெயர் என்பது எங்களுக்குத் தெரியாது. எனவே இந்த பீரை காளி மா பெயரில் அறிமுகப்படுத்துவதை நிறுத்தியுள்ளோம். இந்த பீர் வகையை எதிர்ப்பார்த்து காத்திருக்கும் வாடிக்கையாளர் சிறிது காலம் பொறுத்திருக்கும்படி வேண்டுகிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

# ஆப்கானிஸ்தான் படைகளுக்கு அவுஸ்ரேலியா 300 மில்லியன் உதவி

ஆப்கானிஸ்தான் படைகளுக்கு 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அவுஸ்ரேலிய அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

வெளிநாட்டு படையினர்கள் ஆப்கானில் இருந்து வெளியேறிய பின்னர் நாட்டின் பாதுகாப்பினை பொறுப்பேற்கவுள்ள ஆப்கான் தேசிய படையினருக்கான ஆண்டொன்றிற்கான செலவீனம் நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களாக அமையவுள்ளது.

அவுஸ்ரேலிய பிரதமர் ஜூலியா கில்லாட் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீபன் ஸ்மித் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிக்காகோவில் நடைபெறவுள்ள நேட்டோ மற்றும் அமெரிக்கா தலைமையிலான சர்வதேச பாதுகாப்பு உதவிப் படையினரின் மாநாட்டில் இதற்கான பொறுப்பினை அவுஸ்ரேலியா ஏற்கவுள்ளது.

2009 - 2010 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு காலமாக ஆப்கான் தேசிய இராணுவ நம்பிக்கை நிதியத்திற்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவுஸ்ரேலியா வழங்கியுள்ளது

# அமெரிக்க, நேட்டோ படைகளை விசம் வைத்துக்கொல்வோம்

## – பாகிஸ்தானுக்கு மர்மக் கடிதம்

அமெரிக்க, நேட்டோ படைகளை விஷம் வைத்து கொல்வோம் என பாகிஸதானுக்கு மர்மக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் செயற்படும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு மர்ம பொடியுடன் கூடிய கடித பார்சல் வந்ததாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதுகுறித்து பொலிஸார் தகவல் தெரிவிக்கையில், அக்கடிதத்தில் ஆப்கானிஸ்தான் நாட்டிலும், பாகிஸ தானிலும் இருந்து செயறபடும் அமெரிக்க மற்றும் நேட்டோ படைகளை விஷம் வைத்து கொல்லப் போவதாக மிரட்டல் வந்துள்ளது.

ஆறு மாத காலமாக பாகிஸ்தான் வழியாக நேட்டோ படையினருக்கு பொருட்கள் அனுப்புவதை நிறுத்தி வைத்துள்ள பாகிஸ்தான் தற்போது அதை விலக்க ஆலோசித்து வருகிறது. இதைக்கண்டித்தும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

மேலும் பிரான்ஸ், அவுஸ்ரேலியா மற்றும் பிரிட்டன் நாடுகளின் தூதரகங்களுக்கு இந்த மர்ம கடிதம் வந்துள்ளது என்று தெரிவித்தனர். மேலும் இதனை ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# நேட்டோ மாநாட்டில் பாகிஸ்தான் ஜனாதிபதி



ஆப்கானிஸ்தான் தொடர்பில் ஆராயும் நோக்கில் நடைபெறவுள்ள நேட்டோ அமைப்பின் மாநாட்டில் பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தானின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் பாகிஸ்தான் முக்கிய பங்குவகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் நடத்தப்பட்டிருந்த நேட்டோவின் மாநாட்டை பாகிஸ்தான் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சர்வதேசத்தில் பயங்கரவாதத்தை கட்டுப் படுத்துவது குறித்து இணைந்து செயற்படுவதாக அமெரிக் காவும் பாகிஸ்தானும் தெரிவிக்கின்றபோதிலும், அடிக்கடி முரண்பட்டுக்கொள்ளும் நாடுகளாகவும் இவை காணப்படுகின்றன

# குருப் பெயர்ச்சி பலன்கள்

**17-05-2012 முதல் 28-05-2013 வரை**

## துலாம்



சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள்

(பெயரின் முதல் எழுத்துக்கள்: ர, ரி, ரு, ரே, த, தி, து, தே உள்ளவர்களுக்கும்)

துவளாத உள்ளமும், துடிப்போடு செயலாற்றும் தன்மையும் கொண்ட துலாம் இராசி நேயர்களே!

எல்லோரையும் எளிதில் கவரும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. உங்களின் அணுகுமுறை மற்றவர்களின் மனம் புண்படாத விதத்தில் இருக்கும். சிறு உதவி செய்தாலும் நன்றி மறக்காத குணம் உங்களுக்கு உண்டு. மனக் கட்டுப்பாடு இருந்தால் உங்கள் வாழ்க்கையில் மகத்தான பலன்களை நீங்கள் காண முடியும்.

முன். கோபத்தைக் குறைத்தால் உங்கள் முன்னேற்றத்திற்கு எந்தப்பாதிப்பும ஏற்படாது. உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருபகவான் இப்பொழுது எட்டாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார்.

அஷ்டமத்துக் குரு ஆதாயத்தைக் காட்டிலும், அலைச்சலைத் தானே அதிகம் கொடுப்பார் என்று நீங்கள் நினைகலாம். உழைப்புக்கேற்ற பலனை ஒரு போதும் கொடுக்கமாட்டார் என்பார்கள்.

நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. உங்கள் இராசியைப் பொறுத்தவரை 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். தற்சமயம் அஷ்டமத்தில் சஞ்சரித்து உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார்.

குரு உங்கள் இராசிநாதனுக்கும் பகைவன், தற்சமயம் செல்லும் வீடும் பகை கிரகமான சுக்ரனுக்குரிய வீடு. எனவே ஆறுக்கு அதிபதி எட்டில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயல்படப்போகிறது. அந்த அடிப்படையில் கேது திசை, கேது புத்தி, சுக்ர திசை, சுக்ர புத்தி நடப்பவர்கள் கூடுதல் பலன பெறுவர். சனி திசை நடப்பவர்கள் தகுந்த பரிகாரங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

### குருப்பெயர்ச்சி!

உங்கள் இராசிக்கு இது வரை ஏழில சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது 17.5.2012 முதல் எட்டில் சஞ்சரித்து எண்ணற்ற மாற்றங்களை உங்களுக்கு கொடுக்கப் போகிறார்.

இருப்பினும், இருக்குமிடம் எட்டு என்பதால் நாம் குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே குருவை வரவேற்றுக் கொண்டாடி வழிபட வேண்டும். குறிப்பாக அவிட்ட நட்சத்திரமன்று சூரியனுக்கு உகந்த நாளான ஞாயிற்றுக் கிழமையும் இணையும் நே[illegible]ல் குரு ப்ரீதி செய்வது மூலம் எ[illegible]கள் எளிதில் நிறைவேறும். இல[illegible]லும் உள்ளத்திலும் அமைதி நிலவும்.

### அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் குரு!

உங்கள் இராசிக்கு 3, 6இக்கு அதிபதியான குரு பகவான் அஷ்டமத்தில் சஞ சரிக்கப் போகிறார். பொதுவாக ஒரு கிரகம் எட்டில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆயுளைக் குறிக்குமிடம் என்றாலும் இழப்புக்களைக் குறிக்கும் இடமும் அது தான். இது போன்ற எட்டாமிடங்களில் சனி, ராகு, கேது போன்றவைகள் சஞ்சரிக்கும் பொழுது இழப்புகளைத் தான் சந்திக்க நேரிடும். ஆனால் தற்சமயம் சுபகிரகமான குரு சஞ்சரிக்கப் போகிறார். குரு இருக்குமிடத்தைக் காட்டிலும் பார்க்குமிடத்திற்கு பலன் அதிகம். எனவே அஷ்டமத்து குருவின் ஆதிக்கம் இருக்கும் வரை வழிபாட்டோடு தான் வளர்ச்சியைக் காண இயலும்.

எட்டாமிடத்தில் வருகிற குரு உங்கள் இராசி அடிப்படையில் சகோதர ஸ்தானாதிபதியாக இருப்பதால் உடன்பிறப்புகளை அனுசரித்து செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும். வழக்குகளில் திடீர் திசை திருப்பம் ஏற்படும்.

எதிரிகள் ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால், அஷ்டமத்துக் குருவின ஆதிக்க காலத்தில் எதிரிகள் விலகிச் செல்வர். எட்டாமிடம் என்பது ஆயுள் ஸ்தானம் மட்டுமல்லாமல் போராட்டம், வியாதி, துன்பங்களின் தொடக்கம், அச்சம் தரும் எண்ணங்கள், உடல் உறுப்புகளில் பாதிப்பு, தொடர்ச்சியான மனத்துயரங்கள், ஏமாற்றங்கள், வீண் அலைச்சல், வட்டி கொடுக்கும் சூழ்நிலை போன்றவற்றையும் குறிக்கும் இடமாகவும் விளங்குகிறது.

எனவே எல்லாவற்றிற்கும் மூல காரணமாக உங்கள் உடல் ஆரோக்கியத்தை பேணி வைத்துக் கொள்ளுங்கள். சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டாலும், மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. திடீர் இடமாற்றங்கள் வந்து சேரலாம். குரு 9ஆம் இடத திற்கு சென்ற பிறகு மாறிக் கொள்வது தான் உத்தமம்.

### குருவின் பார்வை பலன்கள்

குருவின் பார்வை பதியும் 2, 4, 12 ஆகிய இடங்கள் புனிதமடைவதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். குடும்பத்தில் முன்னேற்றம் கூடும் கொடுக்கல், வாங்கல்களில் இதுவரை இருந்த பாக்கிகள் வசூலாகும். குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் பதிவதால் தாயின் உடல்நலம் சீராகும். நோயில் படுத்தவர்கள் இனி பம்பரமாய் பணிபுரிவர். பழைய வாகனங்களைக் கொடுத்துப் புதிய வாகனங்கள் வாங்குவதில் ஈடுபாடு அதிகரிக்கும். பாதியில் நின்ற கட்டிடப் பணிகள் தொடரும்.

குருவின் பார்வை 12ஆம் இடத்தில் பதிவதால் பண வரவுகளால் பலமடங்கு சந்தோஷம் கூடும். பயணங்கள் அதிகரித்து நன்மையை உருவாக்கித் தரும். தூர தேசத்தில் இருந்து நல்ல தகவல் வந்து சேரலாம்.



பனிரெண்டாம் இடம் என்பது அயன, சயன ஸ்தானம் என்று அழைக்கப்படுவதால் வாழ்க கைத்துணை வழியே வந்த பிரச்சினை ஒவ்வொன்றாக முடிவிற்கு வரும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்வர், காசு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

### வாட்டத்தைப் போக்குமா வக்ர குரு

ரிஷப இராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12.10.2012 முதல் 6.2.2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் இராசியைப் பொறுத்த வரை 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குவதால் வக்ர காலம் நற்பல்ன்களையே வழங்கும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். நீண்ட நாள் பாக்கிகள் வசூலாகும்.

சங்கிலித் தொடர் போல வந்த கடன் சுமை குறையும். வழக்குகளில் திசை, திருப்பம் ஏற்பட்டு உங்களுக்கு சாதகமான நிலை உருவாகலாம். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து இணைவர்.

### துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு...

எதையும் திடீர் முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது. நாலு பேரைக் கலந்து ஆலோசித்துச் செய்வது நன்மை தரும். குடும்பச் சுமை கூடும். ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் அடிக்கடி ஏற்படலாம். மருத்துவச் செலவைப் பார்க்காமல், உடம்பைக் கவனித்துக் கொள்வது தான் நல்லது. பயணங்கள் அதிகரிக்கும். கண்நோய் மற்றும் ஜீரணம் சம்பந்தபட்ட நோய் உருவாகலாம். குரு கவசம் பாடி குருவை வழிபடுவதோடு சர்ப்ப சாந்தியும் செய்து கொள்வது சந்தோஷத்தை வழங்கும்.

(தொடரும்)

# தெனாலிராமன் வளர்த்த பூனை

**விஜயநகர** சாம்ராஜ்யத்தில் மன்னர் கிருஷ்ணதேவராயரின் பிறந்த நாள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. மக்கள் ஆடிப்பாடி மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். மன்னரின் பிறந்த நாளுக்காக விதவிதமாக பலகாரங்கள் செய்து அனைவருக்கும் வழங்கப்பட்டது.

சுவையான பலகாரங்களை வயிறார உண்ட மக்கள், உண்டது போக மீதி இருந்தவற்றை வீதிகளிலும், மைதானங்களிலும் வீசினர். இதனால் எலிகள் பெருகி விட்டன. எலிகளின் தொல்லை பொறுக்க முடியாத மக்கள் மன்னரிடம் சென்று முறையிட்டார்கள்.

கிருஷ்ணதேவராயர் தன் மந்திரிகளை அழைத்து ஆலோசனை நடத்தினார். நீண்ட நேர விவாதத்தின் பின் மந்திரிகள், எலிகளை முற்றிலுமாக ஒழிக்க ஒரே வழி வீட்டுக்கு ஒரு பூனை வளர்ப்பது தான் என்று மன்னரிடம் கூறினார்கள். மன்னருக்கும் அதுதான் சரியெனப்பட்டது.

காவலரை அழைத்து, அனைத்து வீடுகளுக்கும் தலா ஒரு பூனையை அளிக்குமாறு கட்டளையிட்டார். மன்னர் உத்தரவுப்படி பக்கத்து ஊர்களில் இருந்தும் பூனைகளைப் பிடித்து வந்து விஜய நகரத்தில் இருந்த அனைத்து வீடுகளுக்கும் ஒவ்வொரு பூனை அளிக்கப்பட்டது.

ஒரு சில நாட்களிலேயே பூனைகள் வீட்டின் மூலை முடுக்குகளில் இருந்த எலிகளை கவ்விப் பிடித்துத் தின்று விட்டன. அதன்பின்னர், எலிகள் கிடைக்காத பூனைகள் தங்கள் பசியைப் போக்கிக் கொள்ள வீட்டில் குழந்தைகளுக்காக வைத்திருந்த பாலை குடித்தன.

விஜயநகர மக்களுக்கு இப்போது பூனைகளின் தொல்லை பெருந் தொல்லையானது. மன்னரிடம் சென்று பூனைகளின் தொல்லையில் இருந்து விடுபட வழி செய்யுமாறு கேட்டுக் கொணடார்கள்.

மன்னரும் உடனே மந்திரிகளை அழைத்து ஆலோசனை கேட்டார். மந்திரிகள் ஒன்று கூடி ஆலோசித்து, பூனைகளுக்குப் பால் தேவைப்படுவதால் வீட்டிற்கு ஒரு பசுவை இலவசமாக அளித்தால் பிரச்சினை தீர்ந்து விடும் என்றனர். மன்னரின் ஆணைப்படி பூனைகள் இருந்த அத்தனை வீடுகளுக்கும் பால் கொடுக்கும் பசுக்கள் அளிக்கப்பட்டன.

தெனாலிராமனுக்கும் ஒரு பசு கிடைத்தது. நீண்ட நாட்களாக தன் குழந்தைகளுக்கு பசுப்பால் கிடைக்காமல் கஷ்டப்பட்ட தெனாலிராமன் தனக்கு இலவசமாக கிடைத்த பசுவின் பாலை குழந்தைகளுக்கு கொடுத்து அவர்களை நல்ல ஆரோக்கியமாக வளர விட்டான். தன் வீட்டில் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட பூனை இருப்பதையும் அதற்காகத்தான் மன்னர் பசுவை அளிததார் என்பதையும் தெனாலிராமன் முழுமையாக மறந்து விட்டான்.

தெனாலிராமன் வீட்டுப் பூனைக்கு பால் கிடைக்காததால் அந்தப் பூனை பக்கத்து வீடுகளுக்குச் சென்று தொல்லை கொடுத்து வந்தது. பக்கத்து வீட்டுக்காரர்கள் மன்னரிடம் சென்று புகார் செய்தார்கள். தெனாலிராமனையும் அவன் வளர்க்கும் பூனையையும் அரச சபைக்கு கொண்டு வருமாறு மன்னர் கட்டளையிட்டார்.

தெனாலிராமன் வீட்டிற்குச் சென்ற காவலர்களிடம் தனக்கு சற்று உடல் நலம் சரியில்லாததால் நாளைக் காலை மன்னரின் ஆணைப்படி அரச சபைக்கு தவறாமல் வருவதாக கூறினான். காவலர்கள் சென்றவுடன் தெனர்லிராமன் தன் வீட்டில் இருந்த பாலைச் சூடாக்கி, பூனையின் முன் வைத்தான். நீண்ட நாட்களுக்குப் பின் தனக்கு பால் கிடைத்த மகிழ்ச்சியில் பூனை அதைக் குடிக்கவும், சூடான பால் அதன் நாக்கை புண்ணாக்கி விட்டது. உடனே அது பால் இருந்த பாத்திரத்தை விட்டு வெகுதூரம் ஓடிச் சென்றது.



மறுநாள் காலையில் தெனாலிராமன தன் பூனையை தூக்கிக்கொண்டு அரச சபைக்கு சென்றான். மன்னரின் அருகில் பூனையை கீழே விட்டான். எலும்பும் தோலுமாக இருந்த பூனை நடக்க முடியாமல் முனகியபடி அமர்ந்து விட்டது.

கிருஷ்ணதேவராயர் கோபமாக, தெனாலிராமா! உனக்கு அரசாங்கம் அளித்த பசுவின் பாலை உன் பூனைக்கு கொடுபபதில்லையா? என்று கேட்டார். தெனாலிராமன் பணிவாக, அரசே! நான் வளர்க்கும் பூனை மிகவும் சாதுவானது. நான எவ்வளவு முயற்சி செய்தாலும் அது நான் கொடுக்கும் பாலை குடிக்க மறுத்து பயந்து ஓடி ஒளிந்து கொள்கிறது என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினான்.

மன்னர் தெ்னாலிராமன் கூறுவது உண்மைதானா என்று சோதித்துப் பார்க்க விரும்பினார்.


காவலனை அழைத்து ஒரு கிண்ணத்தில் பாலை ஊற்றிக் கொண்டு வருமாறு கூறினார். காவலன் பாலை பூனைக்கு அருகில் கொண்டு செல்லவும், பூனை பால் கிண்ணத்தைப் பார்த்து நாலுகால் பாய்ச்சலில் ஓடி ஒரு தூணின பின்னால் ஒளிந்து கொண்டது. தெனாலிராமன் மன்னரைப் பார்த்து, அரசே! நான் வளர்க்கும் பூனை பாலைக் கணடால் பயந்து ஓடுகிறது என்றான்.

தெனாலிராமன் வளர்க்கும் பூனையிடம் ஏதோ குறையுள்ளது போல் தோன்றுகின்றது. சோதித்துப் பார்க்க வேண்டும் என்றார் அமைச்சர். மன்னரும் ஒபபுக்கொண்டார். பூனையை சோதித்துப் பார்த்த அமைச்சர், பூனையின் நாக்கு முழுவதும் சிவந்த புண் இருப்பதைப் பார்த்து மன்னரிடம் கூறினார்.

மன்னர் தெனாலிராமனை பார்த்து, பூனைக்கு சூடான பாலை கொடுத்து குடிக்கச் சொல்லி அது மீண்டும் பால குடிக்க முடியாமல் அதன் நாக்கு முழுவதும் புண்ணாக்கி விட்டாயே இது நியாயமா என்று கேட்டார். தெனாலிராமன் சற்றும் பதட்டப்படாமல், அரசே! பூனைக்குப் பால் கொடுத்து அதை வளாப்பதை விட நம் நாட்டில் உள்ள வாலிபாகளுக்கும், சிறுவர்களுக்கும் பாலூட்டி வளர்த்தால் என்றாவது ஒருநாள் அவர்கள் படையில் சேர்ந்து பலமுடன் போரிட்டு நாட்டின் மானத்தைக் காப்பாற்றுவார்கள். நீங்களே யோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள் என்றான்.

மன்னர் யோசித்தார். தெனாலிராமன் கூறியதில் இருந்த உண்மையை உணர்ந்து கொண்டு பூனைக்கு அளிக்கும் பாலை இனி நாட்டு மக்கள் அருந்த உத்தரவிட்டார். தெனாலிராமனுக்கும் பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.

# பனைசார் உற்பத்திகளை நவீனமயப்படுத்துங்கள்



(கொழும்பு)

பனை சார்ந்த உற்பத்திகளை காலத்திற்கு ஏற்றவகையில் நவீன மயப்படுத்தி அதனூடாக சிறந்த பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு - மருதானையிலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சரின் தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதன்போது பனை அபிவிருத்திச் சபையின் கீழான மாதிரி பனம் பண்ணைகளில் ஊடு பயிர்ச்செய்கை கால்நடை வளர்ப்பு மற்றும் பண்ணை அமையப் பெற்றுள்ள இடங்களில் பனை சார்ந்த கைத்தொழிற்பேட்டைகளை உருவாக்குதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் பனைசார்ந்த உணவு மற்றும் உணவல்லாத உற்பத்திகளை காலத்திற்கு ஏற்ற வகையில் நவீன மயப்படுத்துவதனூடாக அவற்றினது உள்ளூர் வெளியூர் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வது அது சார்ந்தவர்களது குடும்பங்களினது பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதனிடையே பனைசார்ந்த உற்பத்திகளை விற்பனை செய்யும் வகையில் கற்பகம் விற்பனை நிலையங்களை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நவீன முறையில் அமைப்பது மற்றும் எதிர்காலங்களில் பனை அபிவிருத்திச் சபையினூடாக முன்னெடுக்கப்படவேண்டிய பல்வேறு செயற்திட்டங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# படை வீரர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முட்டாஸ் கடைச் சந்தியில் உள்ள இரவு உணவகம் ஒன்றின் முன்பாக நேற்று அதிகாலை கைகலப்பில் ஈடுபட்டவர்களிடையே சிக்கிய சிவிலுடையில் இருந்த இராணுவ வீரரொருவர் கைகலப்பில் ஈடுபட்டவர்களது தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புஸ்பகுமார (வயது - 30) என்ற இராணுவ வீரரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

நேற்று அதிகாலை 1.00 மணியளவில் குறித்த இராணுவ வீரர் விடுமுறையில் வீடு செல்வதற்காக யாழ். முட்டாஸ் கடைச் சந்தியால் வந்திருக்கின்றார். அங்குள்ள இரவு கொத்து ரொட்டி கடையில் கொத்து ரொட்டி வாங்கி சாப்பிட்டு விட்டு கடைக்கு வெளியே வந்தபோது அங்கு சிலர் தமக்கிடையே கைகலப்பில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அவர்களிடையில் இருந்து விடுபடுவதற்காக ஒருவரை தட்டி வழிவிடுமாறு கோரிய போது குறித்த இராணுவ வீரர் மீது தலையில் அடி விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கென கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். இச்சம்பவம் குறித்து பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## ஒற்றை ஆட்சிக்குள்...

அண்மைய ஜெனிவாத் தீர்மானம் காத்திரமான கோரிக்கைகளை முன்வைத்துள்ள போதும், அவற்றை நடைமுறைப்படுத்தும் நிலையில் அரசாங்கம் இல்லை. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், வெளித்தலையீடு ஏதும் அவசியமில்லை என அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

ஆனால் அரசியல் தீர்வுக்குரிய உள்ளகப் பொறிமுறையை ஏற்படுத்துவதற்குரிய அடிப்படைகள் அங்கு இல்லை. அதிகாரப் பரவலாக்கத்திற்குரிய அடிப்படைகளும் இல்லை. ஒரு ஆண்டுக்கு மேலாக தற்போதைய ஆட்சியாளர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தது.

நோர்வே தொழிற்கட்சியின் அனைத்துலக விவகாரங்களுக்கான மையம் மற்றும் நோர்வே தமிழர் கற்கை மையம் ஆகியன கூட்டிணைந்து ஒழுங்குசெய்த இக்கருத்தரங்கு நோர்வே நாடாளுமன்றத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நோர்வேயின் முன்னாள் மேம்பாடு மற்றும் சூழலியல் துறை அமைச்சரும் இலங்கைக்கான முன்னாள் சமாதானச் சிறப்புத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரபூர்வப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

## அரசியல் தலைமைக்கு...

போர் தொடங்குமானால் அனைத்துலக ஆதரவு துளியளவிற்கும் அற்றுப் போய்விடும். தமிழ் மக்கள் பாரிய அழிவுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் தற்போதைய ஆட்சியாளர்களே தமிழ் மக்களை நோக்கி நேசக்கரம் நீட்டவேண்டுமென்ற பரவலான கருத்து அனைத்துலக மட்டத்தில் நிலவுகின்றது.

போரின் இறுதிக்கட்ட அவலங்களுக்குரிய பொறுப்பு கொழும்பிடம் உள்ளது. பிரபாகரனும் அந்த அவலங்களைத் தவிர்ப் பதற்கு முனையவில்லை.

2000 ஆம் ஆண்டில் ஆனையிறவு படைத்தள வெற்றியை அடுத்து, படைபலத்தில் விடுதலைப்புலிகள் உச்சநிலையில் இருந்த போது சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்டது. இப்புறநிலையில் சமாதானப் பேச்சுகளைச் சாதகமாகக் கையாண்டிருப்பின் கூட்டாட்சித் தீர்வினை எட்டியிருக்க முடியும்.

கூட்டாட்சித் தீர்வு பற்றி ஆராய்வதைத் தட்டிக் கழித்தமை, அனைத்துலக சமூகத்திடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்தியமை, இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்டிருந்தமை ஆகியன விடுதலைப் புலிகளின் தலைவர் இழைத்த தவறுகள் என விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது எரிக் சொல்ஹெய்ம் விமர்சனங்களை முன்வைத்தார்.

அதேவேளை அனைத்துலக சமூகமும் விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தியது. ஆனால் அனைத்துலக சமூகம் தொடர்ந்தும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியிருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைத்தீவின் தற்போதைய சூழ்நிலையில் மாற்றங்களைக் காண்பதற்கு காலம் எடுக்கும். அனைத்துலக சமூகம் அக்கறை செலுத்தும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முதல் இடங்களில் இல்லை. உலக பொருளாதார நெருக்கடியும், ஆப்கானிஸ்தான், சிரியா, லிபியா, எகிப்து மற்றும் மத்திய கிழக்கு முரண்பாடுகளுமே அனைத்துலக சக்திகளின் அதீத கவனக்குவிப்பிற்குரிய பட்டியலில் முதலிடங்களில் உள்ளன.

## பொலிகண்டியில்...


அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் மரணமாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (116)

## வடக்கில்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் இலங்கையிலுள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் ஆகியோரை சந்தித்து உங்களது தேவைகள் குறித்து விளக்கமளித்து உதவிகளை பெற்றுத்தர முயற்சிகளை செய்யவுள்ளேன் என்றும் தெரிவித்தார்.

# பஞ்சாப்பிடம் வீழ்ந்தது சென்னை சூப்பர் கிங்ஸ்



(தர்மசாலா)

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கெதிரான போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் 66 ஆவது போட்டி நேற்று தர்மசாலா மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டி.ஜே.பிராவோ மட்டும் அதிக (48) ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் பிரவீன் குமார், அசார் மொகமட் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 121 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிங்ஸ் லெவன பஞ்சாப் அணி 16.3 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் மிகவும் சிறப்பான முறையில் ஆடிய அணித் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டி.ஜே. பிராவோ இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக கில்கிறிட்ஸ் தெரிவானார்.

# குழு மோதலில் 6 பேர் காயம்

(வடமராட்சி)

சக்கோட்டை பிள்ளையார் கோவில் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் இளைஞர் குழுவொன்றின் தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மயிலிட்டிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சக்கோட்டை பிள்ளையார் கோவில் பகுதியில் மீள்குடியேறியுள்ள மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் யோகராசா என்பவரது குடும்ப உறுப்பினர்கள் மீதும் வீட்டின் மீதுமே மேற்படி தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின்போது யோ. சிதம்பராபதி (வயது - 41), யோ. கிரிதரன் (வயது - 23), யோ.சங்கீதம் (வயது - 19), யோ.சங்கீதா (வயது - 18) மற்றும் யோகராசா ஆகியோர் காயமடைந்தனர். அத்துடன் வீடும் சேதமாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (116)

# தங்கூசி வலைக்குத் தடை வடக்கு கடலில் தீவிரம்

யாழ். மாவட்டத்தில் தங்கூசி வலையைப் பாவித்து கடற்றொழில் ஈடுபடும் மீனவர்களது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருக்கிறது.

யாழ். தீவகம், குறிகாட்டுவான் பகுதியில் தொழில் நடவடிக்கைகளுக்காக படகில் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி தங்கூசி வலைகளை யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் கைப்பற்றியிருக்கின்றனர்.

அத்துடன் நேற்று முன்தினம் குருநகர் பகுதியில் தங்கூசி வலையுடன் கடற்றொழில் நடவடிக்கைக்கு புறப்படவிருந்த இருவர் படகுடன் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

தற்போது கடலில் காற்று அதிகமாக இருப்பதன் காரணமாக பெருமளவு கடற்றொழிலாளர்கள் தங்கூசி வலையைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட முனைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இந்த வலையைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபடுவது அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

எனவே இதனைக் கட்டுப்படுத்த யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தமது நடவடிக்கையினை இறுக்கமாக மேற்கொள்ளும் எனவும் தெரியவருகிறது. (பா)

## பொன்சேகா விடுதலை...

விடுவிக்கப்படுவார் எனவும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுவார் எனவும் எனக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது என அனோமா பொன்சேகா தெரிவித்தார்.

அதேவேளை, யுத்த வெற்றியின் மூன்றாம் ஆண்டை முன்னிட்டு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நாளை விடுதலை செய்யப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

யுத்த வெற்றியின் மூன்று ஆண்டு நிறைவில் பொன்சேகா விடுதலை ஆகும் செய்தியை ஜனாதிபதி அறிவிப்பார் என எதிர்பார்க்கின்றோம் என அமைச்சரவையின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, பொன்சேகாவின் விடுதலைக்காக பாடுபட்ட ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸும், பொன்சேகா வெகு விரைவில் விடுதலையாவார் என்று தெரிவித்தார்.

# போர் வீரர்கள் தினம் பலாலியில் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

போர் வீரர்கள் தினம் நேற்றைய தினம் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்தவகையில், வடமாகாணத்தில் போர் வீரர்கள் தினம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் நினைவு கூரப்பட்டது.

வடமாகாண சபையின் ஏற்பாட்டில் நடத்தப் பட்ட போர் வீரர்கள் நினைவு தினம் தேசியக் கொடி ஏற்றலுடனும், உயிர் நீத்த முப்படை வீரர் களையும், பொது மக்களையும் நினைவுகூரும் நிகழ்வு கொடி ஏற்றலுடனும் ஆரம்பிக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். உயிர்நீத்தவர்களுக்கான மௌன அஞ்சலி நிகழ் வைத் தொடர்ந்து,

உயிர்நீத்த முப்படை வீரர்களின் நினைவுத் தூபிக்கு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, இந்திய துணைத் தூதுவர் மகாலிங்கம், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், யாழ். மாநகர சபை முதல் வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராஜா உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து யுத் தத்தின்போது இறந்தவர்களை நினைவு கூரும் வகையில் நினை வுச் சுடர் ஏற்றிவைக்கப்பட்டது.

தொடர்ந்து மும்மதத் தலைவர் களது ஆசியுரைகள் இடம்பெற் றன. அதேவேளை, மதத்தலை வர்களுக்கு நினைவுப் பரிசில் களை வடமாகாண ஆளுநர் வழங்கி வைத்தார். தமிழ், சிங்கள வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநரின் பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஷ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

போரில் ஈடுபட்ட முப்படையினரையும் பாட சாலை மாணவர்கள் சின்னம் சூட்டிக் கௌர வித்தனர்.

போரின்போது அங்கவீனமடைந்த முப்படையி னருக்கு உணவுப்பொருட்களை யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ட கிந்த ஹத்துரு சிங்க மற்றும் யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா ஆகியோர் வழங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து கொடி வாரத்தினை முன்னிட்டு அர சாங்க அதிபர்களுக்கு ஆளுநர் கொடி வழங்கி வைத்தார்.

இந்தநிகழ்வில், வடமாகாண முப்படைத் தள பதிகள், அரசாங்க அதிபர்கள், கல்வி மான்கள், உயிர் நீத்த முப்படை வீரர்களின் உறவினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 30ஆம் திகதி முதல் மே 17 ஆம் திகதி வரை போர் வீரர்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. (எஸ்)





பரிசுச் சீட்டிழுப்பு முடிவுகள்

வடமாகாணத்தில் 289 அதிஷ்டசாலிகள்!

43 இலட்சம் பெறுமதியான பரிசுகள்...

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில்
இன்று பிப 2.30 மணிக்கு
வழங்கப்படவுள்ளது.

வெற்றியாளர்கள் அனைவருக்கும்
எமது பாராட்டுக்கள்......

பரிசுகளாக....
3 பெறுமதியான கார்கள்
225 சிங்கர் தம்ரோ வீட்டு உபகரண பொதிகள்
100 சுற்றுலா பொதிகள்
4500 காகில்ஸ் பரிசுக்கூப்பன்கள்
5000 பணப்பரிசு

அடுத்த மாபெரும்
சீட்டிழுப்புக்களுக்கு
இன்றே சேமியுங்கள்!

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

உதவிப்பொது முகாமையாளர்
இலங்கை வங்கி, வட மாகாணம்

(C/1501)


# இலவச அழகுக்கலை பயிற்சி நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஒறிபிளேம் அழகுக்கலை நிலையத்தின் 45 ஆவது வருட நிறைவை முன்னிட்டு இலவச அழகுக்கலை பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறுகிய கால இவ் இலவச அழகுக்கலை பயிற்சியினை நிறைவு செய்யும் கற்கையாளர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் உடைய சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இக்கற்கைநெறிகள் நாளை காலை 9.00 மணிக்கு இல187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஒறிபிளேம் (Oriplam) அழகுக்கலை நிலையத்தில் ஆரம்பிக் கப்படவுள்ளது. (69)

# டெனிஸ் பணியாளர்களுக்கு யூன் 15 வரை வேலை

டெனிஸ் கண்ணிவெடி அகற் றும் பிரிவு ஊழியர்களுக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் க.கனகேஸ்வர னின் அழைப்பின் பேரில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் மனித வளப் பணிப் பாளர் தயாளினியுடன் நேற்று யாழ்.நாவலர் வீதியிலுள்ள உத வித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள உதவித் தொழில் ஆணையாளர் அலு வலகத்திற்கு கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் மீனலோஜினி கேதீஸ்வரனும் சமூகமளித்திருந் தார். இக்கலந்துரையாடல் யூன் மாதம் 15 ஆம் திகதி வரை ஒரு மாத முன்னறிவித்தலுடன் வேலை வழங்கவும், ஈ.பி.எவ், ஈ.ரி.எவ் கொடுப்பனவில் தவறு கள் இடம்பெற்ற ஊழியர்களின் பிரச்சினைகளைச் சீர்செய்யவும் நடவடிக்கை எடுப்பதென தீர்மா னிக்கப்பட்டது.

## இரட்டைப் பிரஜாவுரிமை அரசு ஆலோசனை

(கொழும்பு)

இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் திட்டத்திற்காக இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை அரசாங் கம் திருத்தவுள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன தெரிவித்துள்ளார்.

பிரஜாவுரிமை இரத்துச் செய்யப்பட்ட வெளிநாடுகளி லுள்ள இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங் குவதற்காக வெளிநாட்டு இலங் கையர்கள் என்னும் புதிய திட் டத்தை ஏற்படுத்தவுள்ளதாகவும் இன்றைய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் கூறினார்.

# மரணத்தில் சந்தேகம் உயர்ஸ்தானிகருக்கு கடிதம்

லண்டனில் தூக்கில் தொங்கிய நிலை யில் சடலமாக மீட்கப்பட்ட மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த மரியதாஸ் முரளி தாஸின் மரணத்தில் தமக்குச் சந்தேகம் இருபப்பதாகவும் அதனால் அது தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவரது தந்தை பிரித் தானிய உயர்ஸ்தானிகரிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

அத்துடன் சடலத்தினை இலங்கைக் குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுக ளைச் செய்து தருமாறும் அவர் கோரி க்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். கடந்த 9ஆம் திகதி இவர் மரணமடைந்தது குறிப்பிடத் தக்கது.

எனவே எனது மகனின் மரணம் தொடர்பாக பூரண விசாரணை நடத்தி அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற் கும், எனது மகனின் உடலத்தை உடன டியாக இலங்கைக்குக் கொண்டு வருவ தற்கும் முடியாத நிலையில் இருக்கி றோம். எனவே இவற்றுக்கு ஆவன செய்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

# களனி விகாரையில் தேங்காய் உடைக்கத்தடை

(கொழும்பு)

களனி ரஜமகா விகாரையை இனி தேங்காய் உடைப்பது போன்ற முட்டாள்தன மான பிரார்த்தனைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என அதன் விகாராதிபதி கொள்ளுபிட்டியே மஹிந்த சங்கரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

விகாரை என்பது அனைவரும் வந்து சாந்தி, சமாதானம் வேண்டி பிரார்த்தனை செய்யும் இடம் என சுட்டிக்காட்டியுள்ள அவர், மாறாக தமது தனிப்பபட்ட கோபதா பங்களை தணித்துக் கொள்வதற்கான இடம் விகாரை அல்ல எனவும் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராக களனி பிரதேச சபை தலைவர், உப தலைவர் உள்ளிட்ட 500இற்கும் மேற்பட்ட பெண்கள் களனி ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் தங்காய் உடைத்து பிரார்த்தனை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உடனடியாக வெளியேற்றுங்கள் தம்புள்ளை முஸ்லிம்களுக்க கடிதம்

தம்புள்ளை புனித பூமியிலிருந்து உட னடியாக வெளியேறுமாறு அச்சுறுத்தி, தம்புள்ளை நகர முஸ்லிம்களுக்கு தபால் மூலம் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று பக்கங்களைக் கொண்ட இக்கடிதத்தில், அனுப்புபவர் பெயர் குறிப்பிடப்படப்படவில்லை. சிங்கள, பௌத்த நாட்டுப்பற்றாளர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம்களை ஆவேசமூட்டும் வகையிலும், அவர்க ளது சகவாழ்வை விமர்சித்தும் இக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், தம்புள்ளை பிரதேச அரசியல்வாதியான காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டாரவின் பெயரும் சேர்க்கப்பட்டு, அவர் முஸ்லிம்களுக்கு பௌத்த தனித் துவத்தை காட்டிக் கொடுத்துள்ளதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.